
# சிலப்பதிகாரத்தில்

## வைதீகக்கருத்துக்கள்



அ.சீனிவான்

# சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துக்கள்

நூலாசிரியர்
**அ.சீனிவாசன்**

வெளியீடு
**அ.சீனிவாசன்**
10/6, வேதாசலம் தெரு
சாலிகிராமம்
சென்னை - 600 093.
தொலைபேசி எண்.(044) 3760467

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **சிலப்பத்காரத்தில் வைதீகக் கருத்துக்கள்** |
| நூலாசிரியர் | | **அ.சீனிவாசன்** |
| மொழி | : | தமிழ் |
| வெளியீட்டுடெண் | : | முதல் பதிப்பு |
| ஆண்டு | : | 2001 |
| தாள் | : | 16 KG மேப் லித்தோ |
| நூல் அளவு | : | 1/8 டெம்மி |
| விலை | : | |
| உரிமை | : | நூலாசிரியருக்கே |
| வெளியீடு | : | நூலாசிரியர் / பதிப்பாளர்<br>அ.சீனிவாசன்<br>10/6 வேதாசலம் தெரு,<br>சாலிகிராமம்,<br>சென்னை-600 093<br>தொலைபேசி (044) 3760467 |
| அச்சும் வடிவமைப்பும் | : | மாணவர் மறுதோன்றி மையம்<br>பாரிமுனை<br>சென்னை-600 001.<br>தொலைபேசி (044) 5382513 |

தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறையின்,சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் கீழ் உதவியுடன் வெளியிடப்படுகிறது.

# சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துக்கள்

**அ.சீனிவாசன்**

பொருளடக்கம்


* ஆசிரியர் உரை

* முகவுரை

| | | |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | மங்கல வாழ்த்துப்பாடல் காதையில் | 17 |
| 3. | மனையறம் படுத்த காதையில் | 21 |
| 4. | அரங்கேற்று காதையில் | 25 |
| 5. | இந்திரவிழவூரெடுத்த காதையில் | 28 |
| 6. | கடலாடு காதையில் | 40 |
| 7. | நாடுகாண் காதையில் | 43 |
| 8. | காடுகாண் காதையில் | 45 |
| 9. | வேட்டுவ வரிக் காதையில் | 51 |
| 10. | புறஞ்சேரியிறுத்த காதையில் | 56 |
| 11. | ஊர்காண் காதையில் | 58 |
| 12. | அடைக்கலக் காதையில் | 62 |
| 13. | கொலைக்களக் காதையில் | 68 |
| 14. | ஆய்ச்சியர்குரவைக் காதையில் | 73 |
| 15. | ஊர்சூழ்வரிக்காதையில் | 86 |
| 16. | வழக்குரை காதையில் | 94 |
| 17. | வஞ்சின மாலைக் காதையில் | 98 |
| 18. | அழற்படு காதையில் | 103 |
| 19. | கட்டுரைக் காதையில் | 107 |
| 20. | குன்றக்குரவைக் காதையில் | 117 |
| 21. | காட்சிக் காதையில் | 124 |
| 22. | கால்கோட் காதையில் | 126 |
| 23. | நீர்ப்படைக் காதையில் | 131 |
| 24. | நடுகற்காதையில் | 133 |
| 25. | வரந்தரு காதையில் | 145 |

* நூலாசிரியரைப் பற்றி

# ஆசிரியர் உரை

வணக்கத்திற்குரிய தவத்திரு திரு.காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் மணிவிழாவையொட்டி ஒரு கட்டுரைப்போட்டி (1994-95)ல் மாநில அளவில் நடைபெற்றது. அப்போட்டியில் தமிழ்புலவர்கள், தமிழாசிரியர்கள், கல்லூரிப்பேராசிரிரியர்கள், தமிழ்ப் புலமையுடைய பொதுமக்கள், எழுத்தாளர்கள் முதலியோர் பலரும் கலந்து கொள்ளலாம் என்றும் அறிவித்தபடி பலரும் கலந்துகொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>போட்டிக்காக அறிவிக்கப்பட்ட கட்டுரைத்தலைப்புக்கள் :</u>

1. **சங்க இலக்கியங்களில் சமய வளர்ச்சிக்கான வழிபாட்டு முறைகளைப் பற்றியும் சமுதாய வளர்ச்சிக்கான வழிமுறைகளைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுதல்.**

2. **ஐம்பெருங்காப்பியங்களில் சொல்லப்பட்டுள்ள இந்து சமயக்கருத்துக்களையும் மனித வாழ்க்கைக்குத் தேவையான நெறிமுறைகளையும் தொகுத்து எழுதுதல் என்பதாகும்.**

இவைகளில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத்தலைப்பில் சிலப்பதிகாரத்தில் காணும் இந்து சமயக்கருத்துக்களும் மனித வாழ்க்கைக்குத் தேவையான நெறி முறைகளும் என்னும் தலைப்பில் எழுதி அனுப்பப்பட்ட நீண்ட கட்டுரையே இந்நூலாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள போட்டிகள் (1994-95) பற்றி அறிவிக்கப்பட்ட முடிவுகளில் இக்கட்டுரைக்கு ஆறுதல் பரிசு கிடைத்துள்ளது.

ஐம்பெருங்காப்பியங்கள் என்று கூறப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி ஆகியவை சமண, பௌத்தம் சார்ந்த அறிஞர்களால் இயற்றப்பட்டவை. அந்நூல்கள் பெரும்பாலும் சமண, பௌத்த சமயக்கருத்துக்கள் நிகழ்ச்சிகள் நிறைந்தனவாக உள்ளன. வணிகப் பெருமக்களைப் பெரும் பாத்திரப்படைப்புகளாகக் கொண்டிருக்கின்றன.

**ஆசிரியர் உரை**

அக்காலத்தில் வணிகப் பெருமக்கள் பலரும் பெரும்பாலும் சமண பௌத்த சமயங்களுக்கு ஆதரவு கொடுத்ததாகத் தெரிய வருகிறது. இருப்பினும் இந்தக் காப்பியங்களின் நூலாசிரியர்கள் இதர பொதுக் கருத்துகளையும் மக்களிடம் அக்காலத்தில் நிலவி வந்த வேத சமயக் கருத்துக் களையும் நம்பிக்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் சிறப்பித்தும் விவரித்தும் கூறியுள்ளார்கள்.

இளங்கோவடிகளார் தனது மாபெரும் தமிழ்க் காப்பியத்தில் பல இடங்களிலும், தனது சிறந்த பல பாத்திரப்படைப்புகள் மூலமும் வேத சமயக்கருத்துக்களையும் தெய்வங்களையும் வழிபாட்டு முறைகளையும் மக்களுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளையும், மக்களுடைய பல்வேறு பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், வாழ்க்கை முறைகள் பற்றியும் மிகவும் நுட்பமாகவும் நேர்த்தியாகவும் எடுத்துக் கூறியுள்ளதைக் காண்கிறோம்.

வேத சமயம் என்பது பன்முகத்தன்மை கொண்டதாக இருக்கிறது. பல பிரிவுகளையும் பன்முகமான வழிபாட்டு முறைகளையும் விழாக்களையும், வாழ்க்கை முறைகளையும கொண்டதாக உள்ளது. வேத சமயம் என்பது வேறு சில சமயங்களைப்போல ஒரு கடவுள் ஒரு நிறுவனம், ஒரு தூதர், ஒரு தீர்க்கதரிசி, ஒரு பாதுகாவலர், ஒரு அமைப்பு, ஒரு தலைமை, ஒரு பரிபாலனம், ஒரு புனித ஸ்தலம் என்று இருக்கவில்லை. வேத சமயம் என்பது பல சமயங்களின் கூட்டமைப்பு என்று கூறலாம். படைத்தல், காத்தல், நீக்கல் தொழில்களைச் செய்யும் கடவுள்களாக பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூர்த்திகள் போற்றப்படுகிறார்கள். ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் வேதங்களின் சாரமாகப் பின்னர் வந்த உபநிடதங்களையும் ஆதாரமாகக் கொண்டு ஐந்திரம் (இந்திர வழிபாடு), ஆக்னேயம் (அக்கினி வழிபாடு), காணபத்தியம் (கணபதி வழிபாடு) வைணவம் (திருமால் வழிபாடு), சைவம் (சிவவழிபாடு) சாக்தம் (சக்தி வழிபாடு) ஆகிய ஆறு சமயங்களையும் ஆதிசங்கரர் ஒன்றுபடுத்தினார் என்று கூறுவார்கள். இவைகளிலும் காலத்தால் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பாரத புண்ணிய பூமியில் தோன்றியுள்ள எண்ணற்ற ஞானிகள், அறிஞர்கள், முனிவர்கள், சித்தர்கள், பேரறிவாளர்கள், பெருந்தகையினர் பலரும் தங்கள், ஆழ்ந்த சிந்தனைகள் மூலமும், பரந்த அனுபவங்களின் மூலமும்,

அறிவாற்றல் மூலமாகவும், எடுத்துக் கூறி நிலை நிறுத்தியுள்ள பன்முகப்பட்ட கருத்துகளையும் போதனைகளையும், நெறி முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் வழிகாட்டுதல் களையும் பண்பாட்டு முறைகளையும் கொண்டதாக இந்து சமயம் திகழ்கிறது. பன்முகம் கொண்டதாயினும் அவற்றில் ஒருமைப்பாடும் இணைப்பும், தொடர்பும், பொதுத் தன்மையும் சிறப்புத் தன்மைகளும் கொண்டருப்பதையும் காண்கிறோம். பல கிளைகளையும் பல கோடி இலைகளையும், பல மலர்களையும் பல கனிகளையும் கொண்ட மகா விருட்சமாக இந்து சமயத்தைக் காண்கிறோம்.

இந்து சமயத்தின் பல பிரிவுகளும் பல வேறு கடவுளரையும் வலியுறுத்திய போதிலும் ஒரு கடவுட் கொள்கைய நிலை நிறுத்துவதற்கான முயற்சிகளும் காணப்படுகின்றன. அத்துடன் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் பொதுக்கருத்தும் திருமூலர் முதல் வள்ளலார் வரை கூறி வந்துள்ளனர்.

வள்ளுவப் பெருமான், "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்றும் வாலறிவன் என்றும், "மலர்மிசை ஏகினான் என்றும், "இறைவன்" என்றும், `பொறிவாயில் ஐந்தவித்தான் 'என்றும் தனக்குவமையில்லாதான் என்றும், `அறவாழி அந்தணன்' என்றும் `எண்குணத்தான்' என்றும் பொதுப்படையாக இறைவனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம்.

கம்பனும் தனது இராமாவதாரக் காவியத்தின் முதலாவது காண்டத்தின் கடவுள் வாழ்த்துப்பாடலாக **"உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகு இலா விளையாட்டுடை யார் அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"** என்று பொதுப்படையாகவே குறிப்பிடுகிறார். அதே சமயத்தில் யுத்த காண்டத்தில் :

**"ஒன்றேயெனில் ஒன்றேயாம்**
**பலவென்று உரைக்கின் பலவேயாம்**
**அன்றே என்னின் அன்றேயாம்**
**ஆம் என்னில் ஆமேயாகும்**
**இன்றே என்னின் இன்றேயாம்**
**உளது என்று உரைக்கின் உளதேயாம்**
**நன்றே நம்பி குடிவாழ்க்கை**
**நமக்கு இங்கு என்னோபிழைப்பு அம்மா!**

என்று நமது நம்பிக்கையின் பன்முகத்தைக்குறிப்பிட்டும் கம்பன் பாடியுள்ளதையும் காண்கிறோம்.

ஆம், இல்லை, ஒன்று, பல, குறிப்பிட்டது பொதுவானது. அணுவானது உலகளாவியது, தனியானது, அனைத்துமானது என்பதெல்லாம் இந்திய தத்துவ ஞானக்கருத்துக்களுக்கு உடன்பாடானதேயாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்பேருலகத்தில் உள்ள அனைத்துப் பொருள்களும் மனிதன் முதல் புல் பூண்டு செடி கொடி மரம், புழு, பூச்சி, பறவைகள், விலங்குகள் ஈராக உள்ள அனைத்து உயிர்ப்பொருள்களும் மற்றும் அணு முதல் அண்டம் பேரண்டம் வரை கல் மண் கடல் காற்று நிலம் நீர் நெருப்பு ஆகாயம் சூரியன் சந்திரன் கோள்கள் சுடர்கள் முதலிய அனைத்தும் கடவுள் மயம் கடவுள் வடிவம் சர்வம் விஷ்ணு மயம் ஜகத் என்னும் விரிவான கருத்தும் நமது நூல்களிலும் சாத்திரங்களிலும் பரந்து கிடக்கக்காண்கிறோம். மனிதன் மீது மட்டுமல்லாமல் இப்பேறுலகத்தில் உள்ள அனைத்துப் பொருள்கள் மீதும் இயற்கை மீதும் பற்றுக் கொண்டு அவற்றைப் பாராட்டவும் வழிபடவும் பராமரிக்கவும் பாதுகாக்கவும் நமது நூல்களும் சாத்திரங்ளும் வழிகாட்டுகின்றன. இன்னும் மீன், ஆமை வராகம், சிங்கம், யானை, வானரம், புலி, காளை, எருமை, ஆடு முதலிய விலங்கினங்களுக்கும் துளசி வில்வம் வேம்பு அரசு ஆல் முதலிய பல தாவர இனங்களுக்கும் கிளி, மயில், சேவல்களுடன் காக்கை, முதலிய பல பறவை இனங்களுக்கும் தெய்வீகத்தன்மையைக் கொடுத்து அவற்றைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் நமது சாத்திரங்கள் மற்றும் பொது நூல்கள் வழிகாட்டுகின்றன.

நமது நாட்டில் இந்து தர்மத்தின்படி, சிவன், திருமால், சக்தி, முருகன் ஆகியோருக்கு பெருங்கோயில்களும், மற்றும் சிறு தெய்வங்களுக்கான பல கோடி கோயில்களும் பீடங்களும் இருப்பதையும் அவற்றிற்கான வழிபாடுகளையும் காண்கிறோம். பல நூறு பேர் முதல் பல லட்சக்கணக்கில் மக்கள் திரளும் பொங்கல் விழாக்களையும் பூசைகளையும் பெரும் திருவிழாக் களையும் காண்கிறோம். நமது பெரிய கோயில்கள் வெறும் வழிபாட்டு ஆலயங்களாக மட்டும் அல்லாமல், மரபு வழியிலான பெரிய பெரிய கல்வி நிலையங்களாகவும் தேவபாராயணங்கள் இலக்கிய வாதங்கள் இலக்கிய சங்கங்கள் சிற்பம் இசை, நாட்டியம், வைத்தியம், கணிதம், வானிலை ஆராய்ச்சி முதலிய

பல வேறு சாத்திரங்களையும், கலைகளையும் பயிலும், ஆய்வு செய்யும் பல்கலைக்கழகங்களாகவும் செயல்பட்டிருக்கின்றன.

இந்து தர்மத்தின் ஒரு பகுதியாகச் சிறுதெய்வங்களும், அதற்கான சிறு கோவில்களும் பீடங்களும் சதுக்கங்களும் மக்கள் கூடிப் பொங்கலிட்டு விழாக் கொண்டாடும் சமுதாயச் சந்திப்பு மையங்களாக விளங்கி வருகின்றன. ஊர் தவறாமல் பொது தேவதைகளாக காளி மாரி சக்தி கோயில்களும் ஏராளமான விநாயகர் கோயில்களும் மக்கள் அன்றாடம் வழிபடும் தெய்வங்களாக விளங்குகின்றன. இத்தகைய பல லட்சக்கணக்கான சிறு தெய்வங்களும் கோவில்களும் நாட்டு மக்களில் மிகப்பெரும்பான்மையாக உள்ள அடித்தட்டு மக்களின் வழிபாட்டு இடங்களாக இருந்து வருகின்றன. இந்த வழிபாட்டு வழி முறைகள் காலத்திற்கேற்றவாறு பல மாற்றங்களையும் கண்டு வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றன. அவைகளால் இருந்த சில மூடப்பழக்க வழக்கங்களும் கால மாற்றத்தில் நிற்க முடியாமல் நீங்கியுள்ளன. "கண்மூடிப் பழக்கங்கள் எல்லாம் மண்மூடிப் போகட்டும்" என்று வள்ளலார் குறிப்பிட்டதைப் போல காலத்திற்கொவ்வாத பல மூடப்பழக்க வழக்கங்களும் மறைந்து போயிருக்கின்றன. பல சமுதாயச் சீர்திருத்தவாதிகளும் சமயச் சீர்திருத்தவாதிகளும் கூட இந்து தர்ம வழிபாட்டு முறைகளிலும் பழக்க வழக்கங்களிலும் பல மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

குறிப்பாகச் சமுதாயத்திருந்து சாதி வேறுபாடுகள் பாகுபாடுகளுக்கு எதிராக இராமானுஜரும் அப்பரடிகளும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் மக்களை ஒன்றுபடுத்தி பக்தி மார்க்கத்தை வளர்த்திருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் போலவே கேரளம், ஆந்திரம், மகாராஷ்டிரம், குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், வங்காளம், ஒரிஸா, கர்நாடகம், முதலிய பல பகுதிகளிலும் பக்தி இயக்கங்கள் மக்களிடத்தில் பெரும் விழிப்புணர்வுகளை உண்டாக்கி மக்களை ஒற்றுமைப்படுத்தியிருக்கிறது.

இந்திய சமுதாயத்திலும் சமய வழிபாடுகள் மற்றும் பழக்க வழக்கங்களில் புத்தமும் சமணமும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்து சமயங்களும் அந்தத் தாக்கங்களை ஜீரணித்து புதிய பிறவிகளை எடுத்து மேலும் விரிவுபட்டு வளர்ந்து வந்திருக்கின்றன. இந்த முன்னேற்றத்தில் ஆதி சங்கரரும் இராமானுஜரும் மத்துவரும் வேறு பல

ஞானிகளும் ஆபூர்வமான அரும்பங்காற்றி வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிவோம்.

இளங்கோவடிகள் தனது சீரிய சிலப்பதிகாரக் காப்பியத்தில் அவர் காலத்தில் நாட்டு வழக்கத்தில் இருந்த பல பெரிய கோயில்கள், தெய்வங்கள்,விழாக்கள் பற்றியும், எண்ணற்ற பல சிறிய கோயில்கள் தெய்வங்கள், மன்றங்கள், பீடங்கள், தீர்த்தங்கள் பற்றியும், மக்களுடைய வழிபாடுகள், ஆடல்பாடல்கள், கூத்துக்கள், பற்றியும் அவற்றின் மூலம் பல அறிய சமயக்கருத்துக்களையும் மக்களுக்கு வழிகாட்டும் நெறிகளையும் எடுத்துக் கூறியுள்ளார்.

இறைவனுக்கான பிறவாயாக்கைப் பெரியோன் கோயில் முருகனுக்கான ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில், பல தேவனுக்கான வால்வளை மேனி வலியோன் கோயில், திருமாலுக்கான நீலமேனி நெடியோன் கோயில் இந்திரனுக்கான மாலை வெண்குடை மன்னவன் கோயில் முதலிய பெரிய கோயில்களை இளங்கோவடிகளார் குறிப்பிடுகிறார். திருவரங்கம் திருவேங்கடம் திருமால்குன்றம் (அழகர் கோயில் - திருமாலிருஞ்சோலை) திருவனந்தபுரம் முதலிய பெருமாள் கோயில்களைப் பற்றியும் மற்றும் கொற்றவை கோயில்களைப் பற்றியும் சிலப்பதிகாரக் காப்பியம் குறிப்பிடுகிறது.

நாளங்காடிபூதம், காவல் பூதங்கள் பலவற்றின் பீடங்கள், வெள்ளிடைமன்றம், இலஞ்சிமன்றம், நிழல்கால் நெடுங்கால் நின்ற மன்றங்கள், பூதச்சதுக்கம், பாவை மன்றம், நால்வகைத் தேவர்களுக்கும் பதினெட்டு கணங்களுக்கும் ஆன சிறு கோயில்கள், அமரர் திருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம், வெள்ளை நாகர் கோட்டம், கிராம தேவதைகளுக்கான ஊர்க்கோட்டங்கள் வேல் கோட்டம் வச்சிரக் கோட்டம் பகல்வாயில் உச்சிக் கீழான் கோட்டம் (சூரியன் கோயில்), புறம்பாணையான் வாழ்கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம், பாசண்டச் சாத்தன் என்றும் ஐயனார் கோயில்கள் சுடுகாட்டுக் கோட்டம் காமவேள் கோட்டம் அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த மணிவண்ணன் கோட்டங்கள் ஐயை (கொற்றவை) கோட்டங்கள் ஏவல் தெய்வம் காவல் தெய்வம் அந்தணர் அரசர் வணிகர் வேளாளார் ஆகியோருக்குரிய நால்வகை பூதங்களுக்கான பீடங்கள் இல்லுறை தெய்வங்களுக்கான பல சிறிய கோயில்கள் அவரவர் குல தெய்வங்களுக்கான சிறுகோயில்கள், முதலியவை பற்றி பல

குறிப்புகளும், அவைகளில் நடைபெற்ற வழிபாட்டு முறைகள், ஆடல்பாடல்கள், கூத்துக்கள், பொங்கலிடுதல், புகை காட்டுதல், பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க, எனப்பாடி, ஆடிய குறிப்புகள் பலவும் காப்பியத்தில் காண்கிறோம்.

இளங்கோவடிகளாரின் காப்பியத்தில் வேட்டுவ வரி, ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை ஆகிய பாடல்கள் தனியான இலக்கியச் சிறப்பு கொண்டவை. இப்பாடல்களில் முறையே கொற்றவை வழிபாடு, திருமால் வழிபாடு, முருகன் வழிபாடு ஆகியவை பற்றிய பல விவரங்களும் காண்கிறோம்.

இளங்கோவடிகள் சமணக் கொள்கைகளில் உறுதி யானவர் என்பது அவருடைய காப்பியத்திலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது. அறப்பள்ளிகள், சாரணர், சமணத் துறவிகள் ஆகியோருக்கு மிகவும் கௌரவமான இடம் காப்பியத்தில் இருப்பதைக் காணலாம். ஊழ்வினையைப் பற்றிய சமணக் கொள்கையை இளங்கோவடிகள் உறுதியாக எடுத்துக் காட்டுகிறார். மக்களுடைய வழிபாடுகளிலும் சமயப் பழக்க வழக்கங்களிலும் உள்ள மூடங்களை இலைமறைவு காயாக இலக்கிய மரபுடன் சுட்டிக் காட்டுகிறார். தெய்வம் தெளிமின் என்றும் தனது காவியச் செய்தியை வெளிப்படுத்துகிறார்.

இருப்பினும் இளங்கோவடிகளார் தனது காப்பியத்தில் வேத சமயக்கருத்தக்களையும் மக்களின் மரபு வழியிலான வழிபாடுகளையும் மிகவும் சிறப்பாகவே எடுத்துக் கூறுகிறார். இவ்வாறாக சிலப்பதிகாரம் கூறும் வைதீக சமயக் கருத்தக்கள் பற்றியும் மக்களுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் பற்றியும் இந்நூலில், தமிழ்த் தொண்டாகக் கருதி தொகுத்தும் விரித்தும் கூற முயற்சிக்கப்பட்டிருக்கிறது.

★★★

# முகவுரை

சிலப்பதிகாரம் தலைசிறந்த தமிழ்க் காப்பியமாகும். சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் சேர்த்து இரட்டைக் காப்பியங்கள் என்று கூறுவார்கள். சிலப்பதிகாரக் காப்பியம் சிறந்த கதை அமைப்பும், அரசியல் கருத்துகளும் சமுதாயக் கருத்துக்களம் கொண்டதாகும். முத்தமிழையும், மூன்று தமிழ் நாடுகளையும், மூன்று தமிழ் மன்னர்களையும் சிறப்பித்துக் கூறும் நூலாகும். மூன்று தமிழ் நாடுகளின் ஒற்றுமையை வலியுறுத்தியும் தமிழ் மக்களின் தனிச்சிறப்புகளையும் வீரத் தையும் நாகரிகப் பெருமைகளையும் எடுத்துக் காட்டியுள்ள சிறப்பான காப்பியமாகும்.

சிலப்பதிகாரத்தைப் பற்றியும் இளங்கோ வடிகளாரைப் பற்றியும் பாரதி பெருமைபடக் கூறுகிறார். சங்கர மடத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட கட்டுரைப் போட்டிக்காக, சிலப்பதிகார ஆய்வில் ஆழ்ந்து ஈடுபட்டு இந்த நூலை எழுதலானேன். இக்கட்டுரைக்கு சங்கரமடத்தின் ஆறுதல் பரிசு கிடைத்தது.

இது இந்நூலின் சிறப்புக்கு ஒரு சான்றாகும்.

இந்நூலைச் சரிபார்க்கவும், தமிழ் மொழி திருத்தமும் செய்வதற்கு உதவிய எனது மகள் திருமதி.பகீரதி பி.ஏ. பி.எட்.எம்.ஏ (தமிழ்)-க்கும் இந்த நூலைப்படி எடுக்கவும், தமிழ் வளர்ச்சித் துறைக்கு சமர்ப்பிக்கவும், உதவியாகவும், நூலை எழுதுவதற்கும் இதர உதவிகளுக்கும் உறுதுணையாக இருந்த எனது துணைவியார் திருமதி.நாகலட்சுமிக்கும் எனது நன்றி யைப் பதிவு செய்து கொள்கிறேன்.

இந்த நூலை அச்சிட்டு வெளியிடுவதற்காக நிதி உதவி கேட்டு மாநில அரசின் தமிழ் வளர்ச்சித்துறைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு தமிழ் வளர்ச்சி சிறந்த நூல்கள் வெளியிட நிதி உதவித் திட்டத்தின்கீழ் இந்த நூல் தேர்வு செய்யப்-பட்டுள்ளதற்காக தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டுள்ளதற்காக தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய மாணவர் மறுதோன்றி அச்சகத்திற்கு எனது உளமார்ந்த நன்றி.

இந்த நூல் தொடர்பாக எனக்குப் பல வகையிலும் ஊக்கமளித்து உதவி செய்துள்ள அனைத்து நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் எனது நன்றியைப் பதிவு செய்து கொள்கிறேன்.

ஏற்கனவே நான் எழுதி வெளியிட்டுள்ள, பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி பாரதியின் புதிய ஆத்திசூடி - ஒரு விளக்கவுரை, ஆகிய இருநூல்களும் கல்வி நிலையங்களிலும், பொது மக்களிடமும் தமிழ் அறிஞர்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்த நூலையும் வாங்கிப்படித்தும் அடுத்து வரும் நூல்களுக்கும் ஆதரவளித்து ஊக்க மூட்டும்படி வாசகர்களையும் கேட்டு தமிழ் கூறும் நல்லுகத்திற்கு இந்நூலை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

**அ.சீனிவாசன்**
நூலாசிரியர்

# 1. தோற்றுவாய்

சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என தமிழ் இலக்கியத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. வடமொழியில் பஞ்ச காவியங்கள் என்னும் பெயரில் இலக்கியங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. அதுபோல் தமிழில் ஐம்பெரும் காப்பியங்கள் உள்ளன. ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை மிகவும் பிரபலமாகத் தமிழில் நிலைபெற்றுள்ளன. சீவக சிந்தாமணி வடமொழி தொடர்பான கதையைக் கொண்டது என்று கூறப்படுகிறது. வளையாபதி, குண்டலகேசி ஆகிய நூல்கள் முழுமையாக இன்னும் கிடைக்கவில்லை. இந்த ஐம்பெருங் காப்பியங்கள் சமண, பௌத்த நெறிகளை ஆதாரமாகக் கொண்டதும், வணிகர் குலத்திற்கு முக்கிய இடம் கொடுத்தும் உள்ள நூல்களுமாகும்.

சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களுள் முதன்மையானது. முழுமையானது. முத்தமிழையும், முத்தமிழ் நாடுகளையும், மூவேந்தர்களையும் தழுவியது. சோழ, பாண்டிய, சேர நாடுகளின் தலை நகரங்களான பூம்புகார், மதுரை, வஞ்சி ஆகிய பெரு நகரங்களைக் களங்களாகக் கொண்டது. அந்நகரங்களின் பெயராலேயே புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களைக் கொண்ட நூலாகவும் அமைந்துள்ளது. சிலப்பதிகாரம் கண்ணகியின் கற்பின் வலிமையைக் காட்டும் நூலாகும். கற்பின் வலிமைக்கு பாரத நாட்டில் தனிச்சிறப்பும் இடமும் உண்டு. கற்புடைப் பெண்டிரையும், கற்புடை ஆண்களையும் தெய்வ நிலைக்கு உயர்த்தியது பாரதநாடு.

இருபதாம் நூற்றாண்டின் புரட்சிகர ஜனநாயகப் பெரும்புலவன் பாரதி "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர். மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்றும் "யாமறிந்த புலவரிலே, கம்பனைப் போல வள்ளுவர் போல, இளங்கோவைப் போல், பூமிதனில் யாங் கணுமே பிறந்ததில்லை" என்றும்,

சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும், திருக்குறளுறுதியும் தெளிவும், பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும் எல்லையொன்றின்மை யெனும் பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும், முன்பு நான் தமிழ்ச் சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று உறுதி கொண்டிருந்தேன் என்றும் குறிப்பிடுகிறார். இவ்வாறு பாரதி சிலப்பதிகார நூலின் சிறப்பையும், அதன் ஆசிரியர் பெருந்தகை இளங்கோவடிகளாரின் பெருமையைப் பற்றியும் மிக உயர்த்தித் தமிழின் பெருமையுடன் இணைத்துப் பெருமையுடன் பேசியுள்ளதைக் காண்கிறோம்.

இளங்கோவடிகளாரின் சமய நிலை பற்றிப் பல கருத்துக்களும் கூறப்படுகின்றன. ஆயினும் சிலப்பதிகார நூலை வைத்துப் பார்க்கும்போது, அவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது தெளிவாகும். அதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை. அவர் தனது கதை நெடுகிலும், பல முக்கிய இடங்களிலும், சமணத்தின் அறப்பள்ளிகள், சாரணர் மற்றும் சமணத்துறவிகளையும் மிகவும் சிறப்பித்துக் கூறுகிறார். அவர் கண்ணகியை ஒரு சிறந்த பாத்திரமாகப் படைத்துள்ளார். சிறந்த பாத்திரம் மட்டுமல்ல கண்ணகியே முதன்மையான பாத்திரமும் முழு முதல் பாத்திரமுமாகும். அவள் தனது கற்பு நிலையின் வலிமையில் தெய்வ நிலைக்கு உயர்ந்தவள். கண்ணகி மிகவும் உறுதியான சமண சமயப்பற்று கொண்டவளாகவே அடிகளார் முதன்மைப் படுத்தியுள்ளார்.

இளங்கோவடிகளார் சமண சமயச் சார்புள்ளவராக இருப்பினும் அவர் பிற சமயங்கள் பால் வெறுப்புக் காட்டவோ, பிற சமயங்களைப் புறக்கணிக்கவோ இல்லை. சிறந்த மனிதாபிமானமும் பொதுக் கருத்துக்களும் நிறைந்த மாபெரும் தமிழ்ப் பாவலனாகத் தலை சிறந்த அறிவுச் செல்வராகவே திகழ்ந்தார். அவர் காலத்தில் பாரத நாட்டில் புத்த சமணக் கருத்துகளும் அற நெறிகளும் பரவியிருந்தன. அத்துடன் ஏற்கனவே மக்களிடையில் இந்து தர்மம் என்று அழைக்கப்படும். சநாதன தர்மமும் வேத நெறிகளும், இராமாயணம் மகாபாரதம் புராணங்கள் முதலியவை

செல்வாக்குப் பெற்றும் பரவியிருந்தன. அத்துடன் நாடு முழுவதிலும் பல இடங்களிலும் சமய வாதங்களும் சமயம் சார்ந்த பட்டிமண்டபங்களும் நடந்து கொண்டிருந்தன. இந்து சமயத்திலும் பல வாதங்களும், கருத்து மோதல்களும் மாற்றங் களும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

வேத காலத்தில், குறிப்பாக ரிக் வேதத்தில் இந்திர வழி பாடும் ஐந்திரமும் முதலிடம் பெற்றிருந்தது. சிலப்பதி- காரத்தில் கூட இந்திர விழா முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம். ஆயினும் பிற்காலத்தில் இந்திரன் பின்னுக்குத் தள்ளப்பட்டுச் சாதாரண தேவர்களில் முதன்மை பெற்றவனாகவே இன்று கருதப்படுகிறான். தமிழகத்தில் இந்திரன் இருந்த இடத்தில் முருகன் தேவசேனாபதியாக இந்திரன் மகள் தேவயானியைத் திருமணம் செய்துகொண்டு, முக்கிய இடம் பெற்றிருக்கிறான். தமிழகத்தில் முருகனுக்கு ஆறுபடை வீடுகளிலும், இதர பல பெரிய கோயில்கள் பலவும் ஏற்பட்டு விட்டன. தமிழகத்தில் முருகனைப் பற்றிய கந்தபுராணம் முக்கிய இடத்தைப் பெற்று விட்டது. சூரசம்ஹாரம் முக்கிய விழாக்களின் ஒன்றாக இடம் பெற்றுவிட்டது.

அக்னி வழிபாடும் ஆக்நேயமும் வேத காலத்தில் இருந்த முக்கியத்வத்தைப் பின்னர் இழந்துவிட்டது என்று கூறலாம். ஓரளவு ஆக்நேயம் சிவத்தில் அடங்கிவிட்டது என்று கூறலாம். அக்னி வழிபாடு, சூரிய வழிபாடு முதலியவை அன்றாட பழக்கங்களிலும் சடங்குகளிலுமான சம்பந்தத்துடன் சுருங்கி விட்டன என்று கூறலாம். ஆயினும் சக்தி வழிபாட்டின் பகுதியாக அக்கினி மிதித்தல், அக்கினிசட்டி தாங்குதல், தீப ஒளி விழா முதலியன சாதாரண மக்களின் வழிபாட்டுப் பகுதியாக நிலை பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

இந்து தர்மத்தின் விளக்கங்களின்படி மும்மூர்த்திகளில் ஒருவராகப் பிரம்மா இடம் பெற்றிருக்கிறார். படைப்புக் கடவுளாகப் பிரம்மா இன்றும் மக்களால் போற்றப்படுகிறார். ஆயினும் பிரம்மாவிற்கென பெரிய கோயில்கள் நாட்டில் இல்லை.

ஆயினும் பிரம்மாவுக்குக் கோவில் அரசமரத்தடியில் பிள்ளையார் கோவிலாக ஊர்தோறும் ஏற்பட்டிருக்கிறது என்றும் வேதத்தில் பிரம்ம தேவனையே கணபதி என்று ரிஷிகள் வணங்கினர். அவரே ப்ரஹ்மணஸ்பதி அவரே பிரஹஸ்பதி என்றும், விநாயகர் பிரணவ மந்திரத்தைக் காட்டுவது, அறிவின் குறி கண நாம்த்வா கணபதிம் வா வா மஹேற என்று சமான்ய வழக்கத்தில் உள்ள வேத மந்திரத்தில் பிள்ளையாரைப் பிரம்ம தேவனென்று காட்டி-யிருப்பது தெரிந்து கொள்ளுக என்று பாரதியார் தனது கட்டுரைத் தொகுதியில் குறிப்பிட்ருப்பதைக் காண்கிறோம்.

இந்த நிலையில் திருமால் வழிபாடும் சிவன் வழிபாடும், சக்தி வழிபாடும், முருகன் வழிபாடும் இன்று மக்களிடையில் மிகவும் பிரபலமடைந்து நிலைபெற்று இருக்கிறது. இந்த தெய்வங்களுக்கான பெரிய கோயில்களையும் நாம் காண்கிறோம். ஆயினும் பாரத நாடு முழுவதிலும் சிவன், விஷ்ணுவிற்கான கோயில்கள் தான் பெரிய கோயில்களாக விளங்குகின்றன. முருகனுக்கான பெரிய கோயில்கள் பெரிதும் தமிழகத்தில் மட்டுமே இருக்கின்றன. சிவன் கோயில்களிலும் இந்திய நாட்டில் மிகவும் பிரபலமான மதுரை, காஞ்சி, காசி கோயில்களில் முறையே மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி ஆகிய சக்தி தெய்வங்களே முக்கியமாக முதலிடம் பெற்று மக்களிடம் பிரபலம் அடைந்-திருக்கின்றன.

நாட்டு மக்களுடைய இத்தகைய பல்வேறு முறையான வழிபாட்டு முறைகளை இளங்கோவடிகளார் தனது காப்பியத்தில் குறிப்பிட்டுக் கூறியுள்ளதைக் காண்கிறோம்.

இந்து சமயம் என்று இன்று கூறப்படுவதை இந்து தர்மம் அல்லது பாரத தர்மம் எனக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். தர்மம் என்பது விரிவான பொருளைக் கொண்டது. அதைத் தமிழில் அறம், கடமை என்று குறிப்பிடலாம். இந்து சமயம் என்பது ஒரு வாழ்க்கை முறையேயாகும். அதனால் அதைத் தர்மம் எனக் குறிப்பிடுவது சாலப்பொருத்தமேயாகும்.

இந்து சமயம் என்பது வேறு சில சமயங்களைப் போல ஒரு தனி நபரால், ஒரு ஞானியால், ஒரு தேவதூதரால், ஒரு தீர்க்க தரிசியால், ஒரு மகானால் உருவாக்கப்பட்ட கோட் பாடுகளை போதனைகளைக் கொண்டதல்ல என்பதை அறிவோம். காலத்தாலும் மக்களின் அனுபவ ஞானத்தாலும், அறிவாற்றல் திறனாலும், பல ஞானிகள், முனிவர்கள், அறிஞர்கள், சித்தர்கள், பலரும் வாழையடி வாழையாய்த் தோன்றி உருவாக்கி நிலை நிறுத்திய வாழ்க்கை நெறிமுறைகளும், வழிபாட்டு முறைகளுமே இந்து தர்மமாக பல்வேறு வடிவங்களில் மக்களிடையில் வேர் விட்டு நிலை பெற்றிருக்கின்றன. இந்து தர்மத்தின் கடவுள் கொள்கையும் பிரபஞ்சமயமானது எனப்பல சான்றோரும் குறிப் பிட்டுள்ளனர்.

**“எல்லாம் கடவுள் மயம். எல்லா தோற்றங்களும், எல்லா வடிவங்களும், எல்லா உருவங்களும், எல்லாக் காட்சிகளும், எல்லாக் கோலங்களும், எல்லா நிலைமைகளும் எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும், எல்லா சக்திகளும், எல்லா நிகழ்ச்சிகளும் எல்லா செயல்களும் - எல்லாம் ஈசன் மயம்”** என்று பாரதி இந்து தர்மத்தின் கடவுள் கொள்கையைப் பற்றி குறிப்பிடுகிறார். அதுவே கீதையின் காட்சியாகும்.

பிரபஞ்சத்திலுள்ள, அதாவது இந்தப் பேருலகத்தில் உள்ள சகல விதமான பொருள்களும் பரமாணு முதல் பேரண்டம் வரை-யிலான அனைத்தும், உயிர்ப் பொருள்களும் ஜடப் பொருள்களும் இடைவிடாத இயக்கத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த இடைவிடாத இயக்கத்தினால் இடைவிடாத மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

இந்தப் பிரபஞ்சத்தில் அதாவது இந்தப் பேருலகத்தின் தோற்றங்களில் ஒன்று மனிதனும் மனித சமுதாயமுமாகும். ஒவ்வொரு மனிதனும் தனி மனிதனாக எதிலும் தொடர்பில்லாமல் தன்னந்தனியே இருப்பதில்லை. ஒவ்வொரு தனி மனிதனும் கூட மனித சமுதாயத்தோடும் இயற்கையோடும் தொடர்பும் கொண்டே வாழ்கிறான். இந்தத் தொடர்பும் பரஸ்பரம் இணைந்து பிணைந்தும்

பரஸ்பரம் ஒன்றையொன்று நிர்ணயித்தும் ஒரு உயிர்த் தொடர்புடன் கூடிய உறவாக அமைத்துக் கொண்டே வாழ்கிறான். இந்த உறவும் பரஸ்பரம் ஒன்றுபட்டும். முரண்பட்டும் உடன் பட்டும் முன் சென்று கொண்டேயிருக்கிறது. இதுவே இயற்கையின் மனிதனின், மனித சமுதாயத்தின் வளர்ச்சி விதியாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

உதாரணமாக சிவக்குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். சிவனும் பார்வதியும் நெருப்பும் நீருமாகும். சிவனுடைய வாகனம் காளை, பார்வதி சக்தியின் வாகனம் சிங்கம், சிவன் சக்தியின் பிள்ளைகள், விநாயகரும் முருகனும். விநாயகர் கருப்பு நிறம் பெருத்த வயிறு யானை முகம் பார்வைக்கு அசிங்கம் ஆனால் அறிவு கூர்மை பிரணவம், முருகன் பொன்னிறம், அழகன், ஆயினும் அவசரக்குடுக்கை. வினாயகரின் வாகனம் முஞ்சூறு, சிவன் கழுத்தில் பாம்பு. முருகனின் வாகனம் மயில் சிவனுடைய நிறம் சிவப்பு, பார்வதியின் நிறம் கருப்பு. இவையனைத்தும் ஒன்றுபட்டும் முரண்பட்டும் உடன்பட்டும் ஒரு மாபெரும் சக்தியாக ஒரு குடும்பத்தில் அடங்கி நிற்பதை அத்தத்துவத்தில் காண்கிறோம்.

மனிதன் ஒரு சமுதாயப் பிராணியாகவே இருக்கிறான். பிர பஞ்சத்தின் இதர பொருள்கள் எல்லாம் இடைவிடாத இயக்கத்தில் இருப்பதைப் போலவே மனிதனும் மனித சமுதாயமும் இடை விடாத இயக்கத்தில் இடைவிடாத செயல்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. மனிதனின், மனித சமுதாயத்தின் இயக்கத்தில் அதன் செயல்பாட்டில் மய்யமாக இருப்பது அவன் செய்யும் தொழிலாகும். ஒவ்வொரு தனி மனிதனும் மனிதக்குழுவும் மற்றவர்கோளடு சேர்ந்தே அத் தொழில்களைச் செய்கிறார்கள். அவ்வாறு தொழில் செய்யும் போது ஒரு தனி மனிதனும் சரி, மனிதக்குழுக்களும் சரி, தனக்காவும், தங்களுக்காகவும் மட்டுமன்றி சமுதாயத்திற்காகவும், உலகிற்காகவும், உலகிலுள்ள இதர உயிர்ப்பொருள்களுக்காகவும் இயற்கையின் நலன்களுக்காகவும் சேர்ந்தே, இணைந்தே செய்கிறார்கள்.

மனிதன் அவ்வாறு தொழில் செய்யும்போது உடல் உழைப்பின் மூலமான தொழில்கள் மட்டுமல்லாமல் அறிவின் மூலமாகச் செய்யப்படும் மூளை உழைப்பும் உழைப்பே-யாகும். சாகுபடி செய்தல், பயிரிடுதல், நெசவு நெய்தல், மீன் பிடித்தல், கைத்தொழில்கள் செய்தல், எழுதுதல், படித்தல், பாடுதல், கவிதை புனைதல், ஆடுதல், படம் வரைதல், ஓவியம் தீட்டுதல், சிலைகள் செய்தல், கற்பித்தல், வைத்தியம் செய்தல், வண்டி ஓட்டுதல் முதலிய அனைத்தும் தொழில்களேயாகும். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்யாமல் இருக்க-முடியாது. தொழில் செய்வது மனிதனின் இயல்பாகும். அவ்வாறு அவன் தொழில் செய்யும்போது அத்தொழில் தனக்காக மட்டு மல்லாமல் சமுதாயத்திற்காகவும், உலகத்திற்காகவும் இணைந்தே செய்வதாக அமைகிறது அது எவ்வாறு?

எடுத்துக்காட்டாக நிலத்தில் சாகுபடி செய்யும் ஒரு விவசாயி தனது பயிர்தொழிலை செய்யும்போது, மலை, காடு, ஆறு, நீர், நிலம், காற்று, தீ, ஆகாயம், தாவரங்கள், விலங்குகள் முதலியவற்றுடன் தொடர்பு கொள்கிறான். பயிர்த்தொழில் மூலம் உணவுப்பொருள்களும், பருத்தி, காய்கனிகள் முதலியவை-களையும் சாகுபடி செய்து உற்பத்தி செய்கிறான். அவை சாகுபடி செய்பவர்களுக்கு மட்டுமல்லாமல், இதர மனிதர்களுக்கும், மனித சமுதாயத்திற்கும் உலகிற்கும் பயன்படுகிறது. அத்துடன் சுற்றிலும் உள்ள புழு, பூச்சி, எறும்பு, எலி, வண்டுகள், பறவைகள், விலங்குகள் முதலிய இதர ஜீவராசிகளுக்கும் உணவு கிடைக்கிறது. சாகுபடித் தொழில் மூலம் காற்றைச் சுத்தப்படுத்தத் துணை புரிகிறான். தாவர வளர்ச்சிக்கும் பெருக்கத்திற்கும் உதவுகிறான். உணவு தான்யங்கள் உற்பத்தி செய்யப்பட்டு களத்தில் குவிக்கப்பட்டிருக்கும்போது சாகுபடிப் பணிகளில் ஈடுபட்ட இதர பணியாளர்களுக்கு ஊதியமாகக் கொடுப்பதுடன், கிராமப் பணியாளர்கள் கோயில் ஊழியர்கள், கணக்கர்கள், காவல்காரர்கள், அரசுப் பணியாளர்கள், முதலிய பலரும் ஊதியமாகவும், இனாமாகவும் கூட தானியம் வினியோகமாகிறது. சில சமயம் திருடர்களும் பொதுவானவர்களும் கூட பலனை எடுத்துக் கொண்டும் அபகரித்துக் கொண்டும் செல்கிறார்கள்.

அவர்களுக்கும் சாகுபடியின் உற்பத்தி பயன்படுகிறது. இன்னும் அரசிற்கும் வரி, திரையாகச் செல்கிறது. மீதமுள்ளதை விவசாயிகள் தங்களுக்கும் எடுத்துக்கொண்டு, உபரியை சமுதாயத்தின் பயன்பாட்டிற்காக சந்தைக்கும் பண்டமாற்றத்-திற்கும் பணமாற்றத்திற்கும் கொண்டு செல்கிறார்கள். இதே போல் சாகுபடி செய்யப்படும் காய்கள், கனிகள், பூக்கள் முதலியனவும் சமுதாயத்தின் பயன்பாட்டிற்காகக் கொண்டு செல்லப்படுகிறது. அதே போல் பருத்தி, வேர்கடலை, கரும்பு, தேங்காய் முதலிய விவசாய உற்பத்திப் பொருள்களும் தொழில்களுக்கும் மறு உற்பத்திக்கும் தேவையான, அவசியமான மூலப்பொருள்களாக சமுதாயத்திற்கும் பயன்படுகின்றன.

இதேபோல் உலகில் நடைபெறும் இதர தொழில்களும், மனிதத் தேவைகளுக்கான, உலகின் தேவைகளுக்கான உணவு, உடை, வீடு, கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு, விளையாட்டு, போக்குவரத்து, கால்நடை பராமரிப்பு. இயற்கைச் சூழல் பாதுகாப்பு முதலிய அத்தியாவசியமான தேவைகளுக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களும் சமுதாய நலன்களுக்கும் வளர்ச்சிக்குமாகவே செய்யப்படுகின்றன. லோக க்ஷேமத்திற்காகவே இவையனைத்தும் நடைபெறுகின்றன. நெசவுத் தொழில், மீன் பிடித்தல், கட்டிட வேலை செய்தல், வைத்தியம், சுகாதாரம் பேணுதல், கல்வி கற்பித்தல், சாலைகள், நீர் நிலைகள் நிர்மாணித்தல் பராமரித்தல், கோவில் கட்டுதல் பராமரித்தல், போக்குவரத்து சாதனங்கள் செயல்படுத்துதல் முதலிய தொழில்கள் பலவும் சமுதாய நலன்களுக்கும் உலக நலன்களுக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் உலக வளர்ச்சிக்குமாகவே செய்யப்படுகின்றன. நிர்வகிக்கப்படுகின்றன.

அறிவு உழைப்பும் இத்தகையதே! சிந்தித்தல், பேசுதல், எழுதுதல், பாடுதல், ஆடுதல், மற்றும் சட்டங்கள் செய்தல், சாத்திரங்கள், கவிதைகள், பாடல்கள், நாடகங்கள், கதைகள், காவியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சூத்திரங்கள், வேதங்கள், சாத்திரங்கள், படைத்தல் முதலிய அறிவு உழைப்பால் வெளிவரும், இனியும் வரும் அறிவுச் செல்வங்கள் அனைத்தும்

சமுதாயத்தின் பயன்பாட்டிற்காகவும் உலக நலனுக்காகவும் செய்யப்பட்டனவேயாகும்.

இவ்வாறு மனிதனும், மனிதக்குழுக்களும் கூட்டங்களும் தொழில் செய்யும்போது அது தனக்காகவும், தங்களுக்காகவும், சமுதாயத்திற்காகவும், உலக நலனுக்காகவும் செய்வது என்பது, இயல்பாகவே அமைந்த ஒரு சமுதாய செயல்போக்காகவே அமைந்திருப்பதைக் காண்கிறோம். நவீன காலத்திய பல தொழில்களில் ஊதிய நோக்கம், லாப நோக்கம் ஆகியவை முக்கியமாக முன்வைக்கப்படுகின்றன. இந்த லாப நோக்கம், ஊதிய நோக்கம் என்பது தொழிலில் உழைப்பில் ஊக்கமளிப்பதற்காகவன்றி சமுதாய நலனை உலக நலனை உலைப்பதற்காக அல்ல. எனவே தான் ஒவ்வொரு மனிதனும் தொழில் செய்யும் போது அதனுடைய பலன்களைப் பற்றிக் கருதாமல் கவலை கொள்ளாமல் இடைவிடாமல் தொழில் செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதை கீதை வற்புறுத்துகிறது. அதன் பொருள் தொழில் செய்யும்போது எந்தவிதமான குறிக் கோளும் இல்லாமல் கண்ணை மூடிக் கொண்டு தனது தொழிலைச் செய்து கொண்டிருக்கவேண்டும் என்பதல்ல. போர்க்களத்தில் நின்று போர் செய்யும்போது எந்தவிதமான குறிக்கோளும் இல்லாமல் கண்ணை மூடிக்கொண்டு கணைகளை விட்டுக் கொண்டிருக்குமாறு கண்ணன் பார்த்தனுக்கு உபதேசம் கூறவில்லை. ஊசலாட்டம் இல்லாமல் உறுதியாக நின்று வெற்றிக் குறிக்கோளோடு எதிரில் நிற்பவர் யாராயினும் சுடுசரம் விடுத்து, வீழ்த்தும் படிதான் கண்ணன் தெளிவுபடக் கூறுவதைக் காண்கிறோம். உயர்ந்த நோக்கத்தோடும் அர்ப்பணிப் போடும் குறிக்கோள்களோடும், உலக நன்மை கருதி. சமுதாய நன்மை கருதி தனது கடமைகளைத் தொழிலை இடைவிடாமல் செய்து கொண்டேயிருக்க வேண்டிய இயல்பையே கீதை வற்புறுத்துவதாகக் கொள்ளவேண்டும்.

ஒருவன் தொழில் செய்யும்போது அத்தொழிலில் அவன் தன்னை அர்ப்பணித்து அதன் உடனடிப்பலன்களைப் பற்றி அதிகமாக கவலைப்படாமலும் மகிழ்ச்சியடையாமலும் எந்த விதமான ஊசலாட்டமும் தயக்கங்களும் காட்டாமல் அறிவு

பூர்வமாக அத்தொழிலைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும். அவ்வாறு ஒருவன் தனது தொழிலில் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு தனது உள்ளத்தையும் செயலையும் ஒருமுனைப்படுத்திக் கொண்டு இடைவிடாமல் தனது தொழிலைச் செய்து கொண்டே இருக்கும்போது அவன் கர்மயோகியாகி விடுகிறான். அத்தொழிலில் அவன் அறிவு சார்ந்த ஞானியாகி விடுகிறான். அதன்மூலம் அவன் இதர தயக்கங்கள் தடைகளிலிருந்து விடுதலை பெற்றவனாகிவிடுகிறான். அமரத்துவம், சாகா நிலை பெற்று விடுகிறான் என்பது கீதையின் சாரமாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

தனி மனிதனும் மனிதக்குழுக்களும் கூட்டங்களும் தங்களுடைய இயல்பான தொழில்களைச் செய்யும்போது இயற்கை நிலைகளுடனும் சமுதாயத்தின் இதர பிரிவினர்களுடனும் இதர மனிதர்களுடனும் தொழில் வகையான சில வகை உறவுகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். அத்தகைய உறவுகள் சமுதாய வளர்ச்சிக்கும் தனி மனித வளர்ச்சிக்கும் இசைவாக அமைய ண்டியது அவசியமாகும். இவ்வாறான தொழில்களையும் செயல்பாடுகளையும் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலும், மனிதர்களுக்குக்கிடையிலும், மனிதக்குழுக்கள் பிரிவுகளுக்கிடையிலும் உள்ள உறவுகளையும் நெறிப்படுத்துவதற்காகவே கருத்துக்களும் சாத்திரங்களும் சூத்திரங்களும் தத்துவங்களும் சட்ட திட்டங்களும் விதிமுறைகளும் உருவாக்கப் பட்டுள்ளன.

பாரத நாட்டில் காலத்தாலும் மனிதனுடைய அனுபவத்தாலும் அறிவாலும் எண்ணற்ற ஞானிகளும், முனிவர்களும், சித்தர்களும், அறிஞர்களும், புலவர்களும், யோகிகளு,ம் மனிதனையும் மனித வாழ்க்கையையும் சமுதாய வாழ்வையும் உலகையும், உலக வாழ்வையும் நெறிப்படுத்தவும் முறைப்படுத்தவும் உருவாக்கியதே படைத்ததே இந்து தர்ம சாத்திரங்களும் சூத்திரங்களும் வேதங்களும் உபநிடதங்களும், புராணங்களும் இதிகாசங்களும், இலக்கியங்களும் காவியங்

களும் காப்பியங்களும் எண்ணற்ற இதர பல அறிய நூல்களுமாகும்.

சமுதாய வளர்ச்சியை ஒட்டி புதிய நிலைமைகளுக்கேற்ப, புதிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பழைய சாத்திரங்களின் இலக்கியங்களின் தொடர்ச்சியாக புதிய சாத்திரங்கள், புதிய இலக்கியங்கள், புதிய கலைகள், புதிய சித்தாந்தக் கருத்துக்கள் வளர வேண்டும்.

இத்தகைய வழிகாட்டும் நூல்களில் தமிழில் ஐம்பெருங்காப்பியங்களும் இடம் பெறுகின்றன. அவைகளில் இளங்கோவடிகளாரின் சிலப்பதிகாரக் காப்பியம் முதல் இடம் பெறுகிறது. பல சிறந்த கருத்துக்களை அழகுபட மெருகிட்டு நமக்கு வெளிப்படுத்திக்காட்டுகிறது. சிலப்பதிகாரக் காப்பியத்தின் பதிகத்தில்:

**"அரசியல் பிழைத் தோர்க்கறங் கூற்றாவதூம்**
**உரைசால் பத்தினிக் குயர்ந்தோரேத்தலும்**
**ஊழ்வினை உருத்து வந்தூடும் என்பதும்**
**சூழ் வினைச் சிலம்பு காரணமாகச்**
**சிலப்பதிகாரம் என்னும் பெயரால்**
**நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்**
**யுளென**
**முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியதாக**
........................................................................
........................................................................
**உரைசால் அடிகள் அருள"** என்றும்
குறிப்பு காண்கிறோம்.

இந்தக் காப்பியத்தின் மூலம் இளங்கோவடிகளார் மூன்று உண்மைகளை நிலை நிறுத்துகிறார் அத்துடன் பல முக்கிய அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்களையும் குறிப்பிட்டுக் கூறுகிறார். பல நிகழ்ச்சிகளையும் காட்சிகளாகக் காட்டுகிறார்.

சிலப்பதிகாரக் காலத்தில் நாட்டில் நிலையான அரசுகள் ஏற்பட்டுவிட்டன. குறுநில மன்னர்கள் சிறுநில மன்னர்கள் என்று வளரச்சி பெற்று பெருநில மன்னர்களாக தமிழகத்தில் மூவேந்தர்கள் நிலை பெற்று நல்லாட்சி நடத்தி வந்தனர்.

மனிதன் காடுகளிலும் மலைகளிலும் காட்டு மனிதர் களாகவும், பழங்குடி மக்களாகவும், உணவு சேகரித்துக் கொண்டும், வேட்டையாடிக் கொண்டும் மர உரிதரித்துக் கொண்டும் நாகரிகம் அறியாதவர்களாக இருந்த நிலை மாறி கால்நடைகளை மேய்த்துக் கொண்டு நாடோடிகளாக இடம் விட்டு இடம் போய்க்கொண்டும் நாடுவிட்டு நாடு, நிலம் விட்டு நிலம் மாறிக் கொண்டிருந்த காலமும் மாறி விரிவான நிலங்களில் சாகுபடி செய்தும், மந்தை மந்தையாக நிலை பெற்ற கால்நடைப் பண்ணைகளை உருவாக்கியும், நீர்ப்பாசன நிலைகளை நிர்மாணித்தும் பல்வேறு தொழில்கள் வளர்ச்சி பெற்றும், வாணிபம் பெருகியும் மனித நாகரிகம் வளர்ச்சி பெற்ற காலத்தில் சமுதாயத்தை ஒழுங்கு முறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்ட காலத்தில் அரசுகளும் அரசியல் நெறிமுறைகளும் தோன்றி வளர்ந்து நிலை பெற்றன. அதில் பாரதம் முதலிடம் பெற்றிருக்கிறது.

அரச நீதி பற்றி நமது அரிய சாத்திரங்கள் இலக்கியங்கள் இதிகாசங்கள் பலவும் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. அவைகளில் பிழைபடாத அரசியல் வலியுறுத்தப்படுகிறது. அரசு என்பது அறத்தின் பால்பட்ட அரசியலை செங்கோல் ஆட்சியை நடத்த வேண்டும் என்பதாகும். அதற்கு மாறாக அரசு பிழைபடும் போது அறமே கூற்றாகி அப்பிழைபட்ட அரசு நீக்கப்படுகிறது என்னும் உண்மையை சிலம்புக்கதை நமக்கு எடுத்துக் கூறுகிறது.

**"நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி**
**நலம்பு ரிவாள் எங்கள் தாய் - அவர்**
**அல்லவராயின் அவரை விழுங்கிப்பின்**
**ஆனந்தக் கூத்திடுவாள்"**

என பாரதத்தாயின் அரசியல் மரபையும் திறனையும் பாரதி எடுத்துக் காட்டுவதைக் காணலாம்.

இரண்டாவதாக உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல் என்னும் உண்மையை சிலப்பதிகாரக் காப்பியம் எடுத்துக் கூறுகிறது.

ஆதி மனிதன் வரலாறு பூர்வமாக இனக்குழுக்களாகவும், இனக்கூட்டங்களாகவும் தாய் வழிச் சமுதாயங்களாகவும் தந்தை வழிச் சமுதாயங்களாகவும் கூட்டுக் கலப்பு வாழ்க்கை வாழ்ந்த நிலை மாறி உழவும் தொழிலும் பெருகி நாகரிகம் வளர்ந்து மனிதன் கிராமங்களையும் நகரங்களையும் அமைத்தபோது சமுதாயத்தின் முதல் நிலை அமைப்பாக குடும்பங்கள் உருவாயின. முதல் கூறான குடும்பம் முறையாக அமையும்போது சமுதாயமும் சிறப்படைகிறது. குடும்ப அமைப்பில் இல்லறத் தையும் இல்வாழ்க்கையையும் பற்றிய சீரிய நெறி முறைகளை நமது சாத்திரங்களும் சூத்திரங்களும் இலக்கியங்களும் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. குடும்பத்தில், குடும்பத்தலைவிக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. இல்லத்தரசி எனப் பெயர் வழங்கப்படுகிறது. அக்குடும்பத்தலைவிக்கு அதிகமான பொருப்பு களும் கடமைகளும் வகுக்கப் பட்டிருக்கின்றன.

**தற்காத்து தற்கொண்டான் பேணி தகை சான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண்**

என்பது வள்ளுவர் வாக்கு.

இதில் பத்தினிப்பெண்டிர் முதலிடம் பெறுகின்றனர். தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர். கற்பு நிலை என்பது ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானது என்பது இராமன் கதை கூறும் உண்மையாகும். கற்பு நிலைப் பெண் சக்தி வடிவம் பெறுவதை சிலப்பதிகாரக் காப்பியம் கூறும் உண்மையாகும்.

கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக உரைசால் பத்தினியாக மக்களும் மன்னர்களும் தேவர்களும் முனிவர்-

களும் போற்றுகின்றனர் என்னும் பேருண்மையை நமது சாத்திரங்கள் வழியில் சிலப்பதிகாரக் காப்பியம் எடுத்துக் கூறுகிறது.

மூன்றாவதாக ஊழ்வினை உகுத்து வந்து ஊட்டும் என்னும் கருத்தை இக்காப்பியம் மிகவும் வலுவாக எடுத்துக் கூறுகிறது. ஊழ்வினையெல்லாம் விதி வழியென்றும் விதி வலியென்றும் நமது சாத்திரங்கள் பல கதைகள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளன.

முன் செய்த தீவினைகளின் பலன் அடுத்த காலத்தில் வந்தே தீரும் என்னும் எச்சரிக்கை மனித வாழ்க்கைக்குத் தேவைப் படுகிறது. அதற்கு யாரும் விதிவிலக்கு இல்லை. நேற்றைய நல்வினை தீவினைகளின் பலன் இன்றும், இன்றைய நல்வினை தீவினைகளின் பலன் நாளையும் விளையும் என்னும் உண்மையை நமது சாத்திரக்கதைகள் பலவற்றில் காண்கிறோம்.

இராமன் காட்டிற்குச் சென்றதும், சீதை அசோக வனத்தில் சிறைப்பட்டதும் விதியின் பிழையென கம்பன் கூறுகிறார்.

இராமனுக்குப்பட்டமில்லை, அதைவிடுத்துக் காட்டிற்குச் செல்ல வேண்டும் என்பது அரசன் ஆணை என்பதைக் கேள்விப்பட்டு இலக்குவன் வெகுண்டெழுந்தான் தம்பியை அதிைப்படுத்துவதற்காக இராமன் கூறுகிறான்.

**நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே**
**பதியின் பிழையன்று பயந்து நமைப்புரந்தான்**
**மதியின் பிழையன்று மகன் பிழையன்று மைந்த**
**விதியின் பிழை, நீ இதற்கு என்கொல் வெகுண்டது?**
என்றான்.

என்பது கம்பனது அழகு மிகுத் தமிழ்க் கவிதை வரிகளாகும்.

காட்டில் சீதையை அரக்கன் தூக்கிச் சென்றதாகக் கேள்விப்பட்டு இராமன் கலங்கிக்கதரிய போது "விதியின் தன்மை

பழுதில் விழுந்ததன்றோ" என்று இலக்குவன் கூறுவதையும் கம்பன் காட்டுகிறார்.

விதியின் வலியால், ஊழ்வினையின் வலியால் தீமைகள் விளையும் போது அத்தீமைகளை எதிர்த்து விதியை மதியாலும் உடலாற்றல் வலுவாலும் அறிவாற்றல் திறனாலும் வென்றும் தீர்வு கண்டும் மக்களுக்கு நமது கதைகளும் காவியங்களும் காப்பியங்களும் நம்பிக்கையூட்டுகின்றன.

முன் செய்த தீவினை உருக்கொண்டு வந்து தன் பயனை நுகர்விக்கும் என்று சிலப்பிதிகாரக்காப்பியம் எடுத்துக் காட்டினாலும் கண்ணகி ஆவேசம் கொண்டு, வழக்குரைத்து, நீதியை நிலைநாட்டி, சக்தி வடிவாகி, மதுரையை எரித்து மதுரை மாதெய்வத்தால் சினம் தணிந்து பின்னர் பதினான்காம் நாளில் தேவர்களின் உதவியால் தெய்வ வடிவத்தில் தனது கணவனுடன் நல்லுகத்திற்குச் செல்வதாக இளங்கோ வடிகளாரும் ஒரு நம்பிக்கையையும் ஆறுதலையும் அளிக்கிறார்.

**"விதியின் தன்மை பழுதில் விழுந்த தன்றோ?** என்று இராமனுக்கு ஆறுதல் கூறும் இலக்குவன் மேலும் தொடர்ந்து

**"நின்று இனி நினைவது என்னே? நெருங்கி**
**அவ்வரக்கர் தம்மைக்**
**கொன்றபின் அன்றோ வெய்ய கொடுந்**
**துயர் குளிப்பது"**

என்றும் உறுதி கூறி இறுதியில் அரக்கரை அழித்து சீதா தேவியை சிறைமீட்ட காவியத்தைக் கம்பன் விரிவுபட எடுத்துக்கூறியும் நம்பிக்கை ஊட்டுகிறார்.

நல்வினை தீவினை என்று கூறும் போது இங்கு வினை என்பதற்கு செயல் என்று பொருள் கொண்டு நல்ல செயல்களையே செய்ய வேண்டும் அதுவே இன்றோ நாளையோ நல்ல பலன்களை அளிக்கும். தீய செயல்கள் கேடுகளை விளைவிக்கும் என்னும் கருத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதில் ஊழ்வினை, விதியின் வலி என்று பூர்வ ஜன்மக்கர்மங்களுடன் இணைத்து அளவுக்கு மீறி அவை மூட நம்பிக்கையாக வளரும் அளவுக்குக் கொண்டு செல்வது நல்லதல்ல. அது தன்னம்பிக்கையை, செயலாக்கத்தை அழித்து விடும்.

இந்தப் பூர்வ ஜன்மசித்தாந்தத்தைச் சற்று அளவுக்கு மீறி அடுத்து வந்த புத்த சமணக் கருத்துக்கள் பிற்காலத்தில் அதிகமான கதைகளில் கொண்டு வந்து மனித வாழ்க்கையில் சில எதிர் விளைவுகளையும் உண்டாக்கிவிட்டது. எனவே விதியை மதியால் வெல்லலாம், விடாமுயற்சியால் இடையூறுகளைத் தாண்டலாம் என்றும் நம்பிக்கையூட்டும் நல்ல கருத்துக்களும் பின்னர் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு இளங்கோவடிகளாரின் இணையற்ற காப்பியத்தை நாம் ஆழ்ந்து கற்றுப் பலனடைய வேண்டும், பயனடைய வேண்டும்.

## 2. மங்கல வாழ்த்துப் பாடல் காதையில்

பொதுவாக நூல்களின் தொடக்கமாக கடவுள் வாழ்த்துப் பாடல் இடம் பெறுவது நமது இலக்கிய மரபாகும். சில நூல்களில் இக்கடவுள் வாழ்த்துப்பாடல் பொதுவாகவும் சில நூல்களில் குறிப்பிட்டும் பாடப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

கம்பன் தனது இராமாவதாரக் காவியத்தின் கடவுள் வாழ்த்துப்பாடலாக

**“உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்**
**நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகு இலா விளையாட்டுடையார் அவர்**
**தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே!**

என்று மிகப் பொதுவாகவும்

**“ஆதி அந்தம் அரியென, யாவையும்**
**ஓதினார் அலகில்லன உள்ளன**
**வேதம் என்பன, மெய்ந்நெறி நன்மையான்**
**பாதம் அல்லது பற்றிலர் பற்று இலார்”**

என்று சற்று தெளிவு படுத்தியும் பாடியுள்ளதைக் காண்கிறோம்.

வள்ளுவப் பெருமானும் தனது புகழ் மிக்க அறநூலான திருக்குறளில்

**அகர முதல எழுத் தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

என்று தொடங்கி பத்து குறள் பாக்களிலும் பொது நெறியான இறைத்தன்மையைக் குறித்துப்பாடுகிறார். அத்துடன் பாயிரத்தில் கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக வான் சிறப்பையும், நீத்தார் பெருமையையும் அறன்வலியுறுத்தலையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளதைக் காண்கிறோம்.

சேக்கிழார் பெருமான் தனது பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம் என்னும் பெருநூலின் கடவுள் வாழ்த்துப்பாடலாக.

"உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகு இல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவோம்"

என்று தொடங்குகிறார்.

"ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்
தேன் அடைந்த மலப்பொழில் தில்லையுள்
மாநடம் செய்வரதர் பொன் தாள் தொழ"

என்றும் தொடர்ந்து அடுத்து விநாயகப் பெருமானையும், அடியார் பெருமையயும் குறிப்பிட்டும் தனது பாயிரத்தில் பாடுகிறார்.

பாரதி தனது பாஞ்சாலி சபதம் என்னும் காவியத்திற்குக் கடவுள் வாழ்த்தாக பிரமஸ்துதி என்னும் தலைப்பில் :

"ஒமெனப் பெரியோர்கள் - என்றும்
ஓதுவதாய், வினை மோதுவதாய்
தீமைகள் மாய்ப்பது வாய் - துயர்
தேய்ப்பதுவாய், நலம் வாய்ப்பதும் வாய்
நாமமும் உருவுமற்றே - மனம்
நாடரிதாய்ப் புந்தி தேடரிதாய்
ஆமெனும் பொருளனைத்தாய் - வெறும்
அறிவுடனாநந்த வியல் புடைத்தாய்"

என்று தொடங்கி மேலும் சரஸ்வதி வணக்கமும் பாடி காவியத்தைத் தொடங்குகிறார்.

இளங்கோவடிகள் தனது காப்பியத்தை மங்கல வாழ்த்துப் பாடல்களுடன் தொடங்குகிறார். அம்மங்கல வாழ்த்துப் பாடல்-களில் திங்கள், ஞாயிறு, மாமழை பூம்புகார் ஆகியவை போற்றப் படுவது தனிச்சிறப்பாக அமைந்துள்ளது.

ஞாயிறும் திங்களும் உலகுக்கு ஒளி கொடுப்பன. மாமழை உலகனைத்திற்கும் உயிர் கொடுப்பன. சூரியனுடைய ஒளியும் மழையும் இல்லாவிட்டால் உயிர்கள் இல்லை. இந்த இயற்க்கை சக்தியைப் போற்றி அடிகளார் தனது காப்பியத்தைத் தொடங்குகிறார்.

பூம்புகார் நாட்டை ஆளும் மன்னனின் நகரம். இவை இங்கு இடம் பெற்று போற்றப்படுகின்றன.

**"திங்களைப் போற்றுதும் திங்களைப்**
**போற்றுதும், என்றும்**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**என்றும்,**
**மாமழை போற்றுதும் மாமழை போற்றதும்**
**என்றும்,**
**பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்"**

என்றும் மங்கல வாழ்த்துப்பாடல்கள் தொடங்குகின்றன.

சதுர்வேதங்களில் முதல் வேதமான ரிக் வேதத்தில் இயற்கை சக்திகளைக் குறிக்கும் தேவர்களும் தேவதைகளும் இந்திரனும் அதிகமாகப் போற்றப்படுகின்றனர். அந்த வழியில் சிலப்பதிகாரக் காப்பியமும் திங்களையும், ஞாயிற்றையும் மழையையும் போற்றுகிறது. பூம்புகாரைப் போற்றுவது நாட்டுப் பற்றைக் குறிக்கிறது. நான்கு பாடல்களிலும் சோழனின் ஆணைச் சிறப்பைக் குறிப்பிடுவது ராஜபக்தியை சிறப்பித்துக் காட்டுவதாக உள்ளது.

கண்ணகியைக் குறிப்பிடும்போது திருமகளுக்கும் அருந்ததிக்கும் ஒப்பிட்டு.

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள்பெயர் மன்னும் கண்ணகியென்பாள்"

என்று குறிப்பிடுகிறது. காப்பியம்

இந்த வரிகளுக்குத் தாமரைப் பூவிற் பொருந்திய திருமகளின் புகழுடைய வடிவு இவள் வடிவையொக்கும் என்றும் குற்றமில்லாத அருந்ததியின் கற்பு இவள் கற்பையொக்கும் என்றும், உலகின் மாதரார் தன்னைத் தொழுதேத்தும்படி விளங்கிய பெருங்குணங்களைக் காதலிப்பவள் கண்ணகி என்னும் பெயருடையாள் என்று பொருளாகிறது. பெருங்குடி மகளிரை திரு மகளுக்கும் தீதிலா அருந்ததிக்கும் ஒப்பிடுவது இந்து சமய மரபாகும்.

# 3. மனையறம் படுத்த காதையில்

இக்காதையில் மூன்று முக்கிய கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

ஒன்று, கண்ணகியின் அழகிய நுதலுக்கு இறைவனின் பிறை மதியையும், இடைக்கு இந்திரனுடைய வஜ்ஜிரப் படையையும், விழிகளுக்கு முருகனுடைய வேல் படையையும் ஒப்பிட்டுக் கூறுகிறார் அடிகளார். இதில் இறைவனே தனது பிறை மதியைக் கண்ணகியின் நுதலுக்காகக் கொடுத்தான் என்றும், இந்திரனே முன்வந்து தனது தெய்வக்காவல்படையைக் கண்ணகியின் இடைக்காகக் கொடுத்தான் என்றும் ஆறுமுகனே தனது சுடர் நெடுவேலை கண்ணகியின் கண்களுக்காக இரண்டாக ஈந்தான் என்றும் குறிப்பிடுவது சிறப்பாகும்.

இங்கு பிறை சூடிய இறைவனும், தெய்வீகக் காவல் படையைக் கொண்ட இந்திரனும் நெடிய கூர்மையான வேல் படையைக் கொண்ட முருகனும் நமக்குக் காட்டப்படுகிறார்கள்.

**"குழவித்திங்கள் இமையவர் ஏத்த**
**அழகொடு முடித்த அருனமத்தாயினும்**
**உரிதின் நின்னோடுடன் பிறப்புண்மையின்**
**பெரியோன் தருக திருநுதலாகென"**

என்றும்

**"மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்**
**தேவர் கோமான் தெய்வக் காவல்**
**படை நினக்களிக்க வதனிடை நினக்கிடையென,**

எனவும்

**"ஆறுமுக ஒருவனோர் பெறு முறையின்றியும்**
**இறு முறைகாணும் இயல்பினின் அன்றே**
**அருஞ்சுடர் நெடுவேல் ஒன்று நின்முகத்துச்**
**செங்கடை மழைக்கண் இரண்டா வீத்தது"**

எனவும் இளங்கோவடிகள் ஒப்பிட்டுக் கூறுவது சிறப்புமிக்கதாகும்.

இரண்டாவதாக, அடிகளார், வணிகர் பெருமக்கள் பொருளீட்டுவது குறித்துக் குறிப்பிடும்போது குலவொழுக்கம் பற்றியும் அற வழியில் பொருளீட்டுவதாகவும் குறிப்பிடுகிறார். வணிகப் பெருமக்களின் குலவொழுக்கமாகிய தொழில் ஒழுக்கம் அறவழியில் பொருளீட்டுவதாகும் என்னும் கருத்தை சிலப்பதி காரக் காப்பியம் எடுத்துக் கூறுவது இன்னாள் வாணிபத் திற்கும் மிகவும் பொருந்துவதாகும்.

வணிகர்களில் குல ஒழுக்கத்தைப் பற்றி

**"நெடுநுகத்துப் பகல்போல, நடுவு நின்ற**
**நன்னைஞ்சினோர், ஒடுவஞ்சி வாய்**
**மொழிந்து, தமவும் பிறவும் ஒப்ப**
**நாடிக் கொள்வ தாம் மிகை கொளாது**
**கொடுப்பதூஉங் குறை கொடாது**
**வாணிபம் செய்தலாகும்"**

எனப்பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. இந்த வாணிப நெறிமுறை இன்றைய சமுதாயச் சீர் ஒழுக்கத்திற்கு எத்தனை தேவைப் படுகிறது என்பது நன்கு விளங்குவதாகும்.

**"குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்**
**அத்தகு திருவின் அருந்தவ முடித்தோர்**
**உத்தரகுருவின் ஒப்பத் தோன்றிய**
**கயமலர்க்கண்ணியும் காதற் கொழுநனும்"**

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்

வணிகர்களின் குல ஒழுக்கத்தில் குன்றாக உள்ள நற்குடியினராகிய செல்வர்கட்கு அங்ஙனம் அறத்தின் ஈட்டிய பொருள்களாலே தலைப்பழு தானத்தைச் செய்தோர் எய்தும் உத்தர குருவை (போக பூமியை) அந்நகர் (புகார் நகரம்) ஒக்கும் படி தோன்றிய பெரிய மலர் போலும் கண்ணினை உடையாளும் (கண்ணகியும்) அவளால் காதலிக்கப்டும் கொழுநனும் (கோவலனும்) என்பது அவ்வரிகளின் பொருளாகிறது.

"கோதகன்ற தொழில்" என்றும் "வஞ்சமற்ற தொழில் புரிந்து உண்டு வாழும் மாந்தர்" என்றும் "மிஞ்ச நாற்பொருள் வாணிகஞ்செய்வோர்" என்றும் பாரதி கூறுகிறார்.

மூன்றாவதாக :

இல்லறத்தையும், இல்லறத்தின் சிறப்புக் கூறுகளையும காப்பியம் எடுத்துக் கூறுகிறது.

**"வாரொலி கூந்தலைப் பேரியற்கிழத்தி**
**மறப்பரும் கேண்மை யோடறப் பரிசாரமும்**
**விருந்து புறந்தரூம் பெருந்தண் வாழ்க்கையும்**
**வேறுபடு திருவின் வீறு பெறக் காண**
**உரிமைச் சுற்ற மோடொரு தனி புணர்க்க**
**யாண்டு சில கழிந்தன இற் பெருங் கிழமையிற்**
**காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென"**
என்பது காப்பிய வரிகளாகும்.

நீண்ட தழைத்த கூந்தலையுடைய இருநிதிக் கிழவன், மனைக்கிழத்தி மறத்தல் அரிய சுற்றந்தழாலோடே அறநெறி யாளரை ஓம்பலும்,விருந்தினரைப் பேணுதலுமாகிய இவற்றுடன் கூடிய பெருமையுடைய இல்வாழ்க்கையை நானா விதமான செல்வத்தோடே நடத்திக் கை வந்து உயர்ச்சி பெறுதலைக் காணவேண்டி உரிமைச் சுற்றங்களோடு வேறாக இருக்கச் செய்ய காணத்தக்க சிறப்பினையுடைய கண்ணகிக்குப் பெருமையுடைய இல்லறத்தை நடத்தும் உரிமைப்பாட்டுடன் சில ஆண்டுகள் கழிந்தன என்பது பொருளாகும்.

இதில் இல்லறத்தின் கடமையாக அறப்பரிசாரமும், விருந்தினரைப் பேணுதலும் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. அறப்பரிசாரம் என்பதில் அறவோர்க் களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல் முதலியவை அடங்கும் என விரிவடையும் இக்கருத்தையே கொலைக் களக்காதையில் கண்ணகியின் கூற்றாக **"அறவோர்க்க ளித்தலும், அந்தணரோம்பலும், துற வோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்**

கோடலும் இழந்த என்னை" என்று இல்லற வாழ்வை இழந்த அவலத்தைக் காப்பியம் குறிப்பிடுகிறது.

இல்லறத்தின் கடமைகளையும் பெருமைகளையும் பற்றி வள்ளுவப் பெருமான் மிகச்சிறப்பாகக் கூறுகிறார்.

பிரம்மச்சாரிகள், வானப்பிரத்தர்கள், துறவிகள், பாது காப்பிலிருந்து கைவிடப்பட்டவர்கள், வறுமை உற்றவர்கள், துணையில்லாமல் தன்னிடம் வந்து இரந்தவர்கள், தனது முன்னோர், தெய்வம், விருந்தினர் சுற்றத்தார், தான் தனது குடும்பம் முதலியவர்களைக் காத்தலும் அவர்களுக்குத் துணையாக இருப்பதும் இல்லறத்தின் முக்கிய கடமைகளாக வள்ளுவர் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

# 4. அறங்கேற்று காதையில்

சிலப்பதிகாரக் காப்பியத்தில் இக்காதை தனித்தன்மையும் தனிச்சிறப்பும் மிக்கதாக அமைந்துள்ளது. இந்திய சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியின் உயர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இக் காதையின் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இக்காதையில் விவரிக் கப்படும் ஆடல், பாடல், இசை, நாடகம் ஆகியவைகளின் பலவகைப் பாணிகளும் இயல்புகளும் அவற்றிற்கு அங்கமான-வைகளும் மிகவும் விரிவாகவும் நுட்பமாகவும் கூறப்பட்டுள்ளன.

இந்து சமயம், குறிப்பாக பக்தி இயக்கம் தோன்றிய பின்னர், இசையை தெய்வீக நிலைக்கு மேலும் உயர்வாக உயர்த்தியது. இசையும், பாட்டுகளும் நாடகம், நாட்டியம், கூத்துகளும், விழாக்களும், சிறிய பெரிய திருவிழாக்களும் பொங்கல் விழாக்களும் இந்து வாழ்க்கை முறையின் வழியாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

பிறக்கும்போது தாலாட்டு முதல் மறையும் போது ஒப்பாரி வரை வாழ்க்கையின் அத்தனை நிகழ்ச்சிகளிலும் ஆடல், பாடல், இசை ஆகியவை இடம் கொண்டிருக்கின்றன. சமுதாய வளர்ச்சியில் மகிழ்ச்சியும் எழுச்சியும் உணர்ச்சி வேகமும் அதிகரிக்கும்போது ஆடல், பாடல், இசை, கூத்து ஆகியன மனித வாழ்க்கையில் முக்கிய இடம் பெறுகின்றன. வளர்ச்சி பெறுகின்றன. அவை சமுதாய உணர்வு நிலையை, பிரக்ஞையை உயர்த்துவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் சிறப்பாகப் பயன் படுவதையும் காண்கிறோம்.

உலகமே நாட்டிய வடிவத்தில் இயங்கிக் கொண்டிருப்பதை இந்திய சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. அந்த நாட்டியத்தின் உயர்ந்த வடிவத்தில் நடராஜப் பெருமானும் கண்ணபிரானும் இந்திய மக்களின் வாழ்க்கையில் நீங்காத இடம் பெற்றிருக்கிறார்கள். பஞ்ச பூதங்களின் அசைவுகளும் செடிகொடி மரங்களின் அசைவுகளும் விலங்கினங்களின் சப்தங்களும்

பறவைகளின் குரலோசைகளும் இதர இயற்கை சக்திகளின் அசைவுகளும் இசை வடிவத்தில் இயங்கிக்கொண்டிருப்பதை இந்து சமயம் காண்கிறது.

நுண்கலை, ஆற்றல் திறன் மிக்க ஆடலாசான்கள், இசையாசிரியர்கள், இயல் தமிழ்புலவர்கள், குழலாசிரியர்கள், யாழாசிரியர்கள், தண்ணுமை முதல்கள், ஒப்பனைக் கலைஞர்கள், அரங்க அமைப்பாளர்கள், ஓவிய ஆசான்கள், சிற்பத் திறன் வல்லுனர்கள், மற்றும் பலவகை கலைப் பணியாளர்கள், பலரும், அரசவைகளிலும், மக்களவைகளிலும், ஊரவைகளிலும், கோவில் மண்டபங்களிலும் இருந்து எண்ணற்ற அருங்கலைஞர்களை உருவாக்கி அழகிய நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், விழாக்கள், கூத்துக்கள் மூலம் அரிய கருத்துக்களை எடுத்துக் கூறி மக்களை நல்வழிப்படுத்தப்பாடு பட்டிருக்கிறார்கள். கலைகளின் எல்லா வடிவங்களும் பயன்பாட்டில் நிலை பெற்றிருக்கின்றன.

நாரதரும், தும்புருவும், நந்தியும், கலை மகளும் இசை வடிவங்களாக நமது வாழ்க்கையின் முன் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

திருமுறைகளும் திவ்யப் பிரபந்தங்களும் இசை வடிவில், மக்கள் மனதில் பதிந்து மனிதனை உயர்த்தியிருக்கிறது. ஆண்டவனே நித்திரையில் இருப்பதாகக் கற்பித்து அந்த ஆண்டவனை எழுப்புவதற்காக பள்ளியெழுச்சிப் பாடல்களையும், பாவைப் பாடல்களையும், சுப்ரபாதங்களையும் பாடியுள்ளனர். அவையெல்லாம் நமது வாழ்க்கின் பகுதியாக அமைந்துள்ளன. இவற்றின் பல வடிவங்களையும் நாம் சிலப்பதிகாரக் காப்பியத்தில் அழகுறக் காணலாம்.

**"எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண் நான்கும்**
**பண்ணின்ற கூத்து பதினொன்றும் - மண்ணின் மேல்**
**போக்கினாள் பூம்புகார் பொற்றொடி மாதவிதன்**
**வாக்கினால் ஆடலரங்கில் வந்து"**

என இக்காதையின் கடைசியில் வரும் வெண்பாவில் குறிப்பிடுகிறார் அடிகளார்.

இந்த மாதவி யார்? கணிகையர் குலத்தில் தோன்றியவள் எனக் கதையில் வந்த போதிலும் வானவர் மகளிரான உருப்பசியின் மரபில் வந்தவளாகக் காப்பியம் குறிப்பிடுகிறது.

**"தெய்வமால் வரைத் திருமுனியருள**
**எய்திய சாபத்து இந்திரச் சிறுவனோடு**
**தலைக் கோல்தானத்துச் சாபம் நீங்கிய**
**மலைப்பருஞ்சிறப்பின் வானவர் மகளிர்**

**சிறப்பிற்கு குன்றாச் செய்கையொடு பொருந்திய**
**பிறப்பிற்குன்றாப் பெருந்தோள் மடந்தை**
**தாதவிழ் புரி குழல் மாதவி"**

எனக்காப்பியவரிகள் குறிப்பிடுகின்றன.

இவ்வரிகள் "தெய்வத்தன்மைமிக்க பெரிய மலையாகிய பொதிகையின் கண் உள்ள அகத்திய முனிவன் அருளால் முன்பு சாபமெய்திய இந்திரகுமாரனாகிய சயந்தனேயாகும், நாடக அரங்கின் கண்ணே சாபம் நீங்கப்பெற்ற, மாறுபாடுகளில்லாத, சிறப்பினையுடைய அரம்பையரின் வரிசையில் குன்றாத நாடகத் தொழிலோடு பொருந்திய உருப்பசியாகிய அம்மாதவி மரபில் வந்த பிறப்பில் குறையில்லாத பெரிய தோள்களையுடைய மடந்தையாகிய, தாது விரியும் பூக்களை அணிந்த கடை குழன்று சுருண்ட கூந்தலையுடைய மாதவி என்று பொருள்படுகிறது. இங்கு வானவர் மகளிரான ஊர்வசியின் மரபில் வந்தவள் மாதவி" என்று உறுதிப்படுத்தப்படுகிறது.

# 5. இந்திர விழவூ ரெடுத்த காதையில்

சிலப்பதிகாரக் காப்பியத்தில், இந்திர விழாவைப் பற்றி விவரிக்கும் இந்தக் காதை மிகவும் பிரபலமானதாகும். இந்திர விழாவைப் பற்றிய மிகவும் சிறப்பான செய்திகளையும், சிலப்பதிகாரக் கதையில் மிக முக்கியமான திருப்பதைப் பற்றிய செய்திகளையும் இக்காதை குறிப்பிடுவதால், கதையின் இப்பகுதி மிகவும் பிரபலமடைந்திருக்கிறது.

சிலப்பதிகாரக் காப்பிய காலத்தில் இந்திரவிழா மிகவும் பிரபலமாக நடைபெற்றிருக்கிறது. இவ்விழா சித்திரை மாதம் பௌர்ணமி நாளில் நடைபெற்றிருப்பதாக சிலப்பதிகாரக் கதை கூறுகிறது. இன்றைய நாளில் கூட சித்திரா பௌர்ணமி நாளில் தமிழகத்தில் பல ஊர்ளிலும் மக்கள் திரளாகக் கலந்து கொள்ளும் விழாக்கள் நடைபெறுகின்றன. மதுரையில் இன்றும் கூட வைகை ஆற்று மணலில் சித்திரை முழுநிலா நாளில் பல லட்சம் மக்கள் குதூகலமாகக் கூடுகின்றனர். வைகை நதிக் கரைகளில் உள்ள எல்லா ஊர்களிலும் இவ்விழாக்கள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் உள்ள பல ஆற்றுப்படுகைகளிலும் சித்திரைத் திருவிழா மிகவும் பிரபலமாக நடைபெறுவதை இன்றும் காண்கிறோம்.

இவ்விழாக்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் குதூகல மாகக் கூடிக்களிக்கிறார்கள். எனினும் இக்காலத்தில் அவ்விழா இந்திரவிழா என் றுஅழைக்கப்படவில்லை. பொதுவாக மக்கள் அதை சித்திரைத் திருவிழா என்று இக்காலத்தில் பிரபலமாக அழைக்கிறார்கள்.

இருக்கு வேத காலத்தில் இந்திரன் முதன்மையான தெய்வங்களில் ஒன்றாக் கருதப்பட்டிருக்கிறது. தேவேந்திரன் என்றும் தேவகுலத்தின் அரசன் என்றும் புகழ் பெற்றிருந்தான். அதன் செல்வாக்கு அக்காலத்தில் மிக அதிகமாக இருந்திருப்பது தெரிய வருகிறது. எனவே இந்திரவிழாக் காட்சிகள் மிக விரிவாகக், காப்பியத்தின் இக்காதையில் விளக்கப்பட்டிருக்கிறது. இந்திர

விழாவை மய்யமாக வைத்து மக்களின் பல்வேறு வழிபாடுகளும், கேளிக்கைகளும், விளையாட்டுகளும், விழாக்கோலங்களும் படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. புகார் நகரப் பகுதிகள், வீதிகள், மக்கள், மக்கள் பிரிவுகள். முதலியோர்களின் செயல் பாடுகள் பற்றியெல்லாம் விரிவாகக் காப்பியத்தில் விவரிக் கப்பட்டிருக்கிறது.

இந்து சமயம் மிகவும் விசாலமானது. மிகவும் விரிவானது மிகவும் பரந்த வழிபாட்டு முறைகளைக் கொண்டது. இக்காலச் சொல் முறையில் கூறுவதானால் மிகப்பரந்த வழிபாட்டு சுதந்திரம் கொண்டது என்று கூறலாம். இந்து சமயக் கோயில்கள் பலவும் கூட வெறும் வழிபாட்டு நிலையங்களாக மட்டும் அல்லாமல் மக்கள் கூடும் சபைகளாகவும், சபா மண்டபங்களாகவும் பலவேறு நூல்களையும் கலைகளையும் கற்கும் கல்வி நிலையங்களாகவும் பல்கலைக் கழகங்களாகவும் கோட்டைகளாகவும் விளங்கி-யிருக்கின்றன.

உலகனைத்தையும், உலகப் பொருள்கள் அனைத்தையும் தெய்வ வடிவங்களில் காணும் தத்துவங்கள் நிறைந்த வேதங்கள், உபநிடதங்கள், சூத்திரங்கள், சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், நிறைந்த வாழ்க்கை நெறிமுறையின் வழி காட்டியாக இந்து சமயம் இருப்பதால் குலதெய்வங்கள், இஷ்ட தெய்வங்கள், சிறு தெய்வங்கள், வனதெய்வங்கள், காவல் தெய்வங்கள், மற்றும் இயற்கை சக்திகளின் வடிவிலான பல வேறு தெய்வங்களும், அவற்றிற்குரிய வழிபாடுகளும், விழாக்களும் நிறைந்துள்ளன. மனித வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான மனித வாழ்க்கையுடன் நெருக்கமான தொடர்பும் இணைப்பும், பரஸ்பர சார்பும் கொண்டுள்ள உயிரினங்கள், பூத சக்திகள், தாவர இனங்கள், விலங்கினங்கள், பறவை இனங்கள் முதலியனவும், தெய்வீக சக்தியாக மதிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. அந்த வழியில் மனிதன் உருவாக்கிய தொழில்களும் கலைகளும் இலக்கியங்களும் தெய்வீகத் தன்மையுடன் பயிலப்பட்டு பேணிகாத்து வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய விரிவினை, விரிவின் பகுதிகளை இக்காதையில் காணலாம்.

புகார் நகரில் வாழும் மக்களைப் பற்றி விவரிக்கும் போது பல வேறு தொழில்களைச் செய்யும் தொழில் பிரிவினர்களையும், அறிவுத்துறை மற்றும் ஆட்சித்துறைப் பிரிவினர்களையும், பற்றி இளங்கோவடிகளார் கூறியிருப்பது மிகவும் சிறப்புமிக்கதாகும். பழுது இல்செயல்வினையால் கெழு மாக்களும் எனக் குறிப்பிடுகிறார் குற்றமற்ற பல கைத்தொழில்களைச் செய்யும் பலவேறு பிரிவு மக்கள் என்பது அதன் பொருளாகும்.

**“திறமை கொண்ட தீமையற்ற**
**தொழில் புரிந்த யாவரும்**
**தேர்ந்த கல்வி ஞான மெய்தி**
**வாழ்வம் இந்த நாட்டிலேயே”**
என்பது பாரதியின் பாடலாகும்.

**“கலம் தரு திருவின் புலம் பெயர் மாக்கள்”**
என்றும்

**“வண்ணமும் சுண்ணமும் தண்ணறும்**
**சாந்தமும்**
**பூவும் புகையும் மேவிய விரையும்**
**பகர்வனர்........................................”**
என்றும்,

**“காழியர், கூவியர், கண்ணொடையாட்டியர்,**
**மீன் விலைப்பரதவர், வெள்ளுப்புபகருவர்**
**பாசவர் வாசவர் பன்னிணவிலைஞர்**
**ஓசுனர்..................................................”**
என்றும்,

**“கஞ்ச காரரும் செம்பு செய்குனரும்,**
**மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்,**
**கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும்**
**பொன்செய் கொல்லரும், நன்கலந் தருநரும்**
**துன்னகாரரும்,தோலின் துன்னரும்**

கிழியினும் கிடையினும் தொழில் பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்"

"குழலினும் யாழினும் குரன் முதலேழும்
வழுவின்றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும் பெறன் மரபின் பெரும்பாணர்" - என்றும்,
சிறு குறுங்கை வினைப்பிறர் வினையாளர்
மறுவின்றி விளங்கும் மருவூர்ப்பாக்கம்"

என்றும் மருவூர் பாக்கத்தில் வாழும் பலவகைத் தொழில் செய்வோரைப் பற்றி சிலப்பதிகாரக் காப்பியம் சிறப்பித்து கூறுகிறது.

இனிப் பட்டினப்பாக்கத்தில், அரசு குலத்தோரும், பெருங்குடி வணிகரும், மறையோரும் யாவரும் விரும்பும் குடியினரான உழவர்களும், மருத்துவ நூலோரும், காலக்-கணிதரும், வேகடி வேலை செய்வோரும், நாழிகைக் கணக்கரும், சாந்திக் கூத்தரும், காவல் கணிகையரும், ஆடல் கூத்தியரும் பலவகை வாத்தியக்காரர்களும், நாற்படை வீரர்களும் மற்றும் பெருமை பொருந்திய சிறப்பினையுடைய பெரியோரும் நிறைந்து வாழ்ந்தனர் எனவும் காப்பிய வரிகள் விவரித்துக் கூறுகின்றன.

நகரின் இரு பகுதிகளிலும் சிறப்புமிக்க தொழில் புரிவோர் பல பிரிவினர்களும் ஒற்றுமையுடனும் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வந்தனர் என்பது எடுத்துக்காட்டப்-பட்டுள்ளது.

மருவூர்ப்பாக்கத்துக்கும் பட்டினப்பாக்கத்துக்கும் இடைப்-பட்ட பகுதியில் நெருங்கிய மரங்கள் நிறைந்த சோலை. அச்-சோலையில் சித்திரைப் பூரணையின்போது மக்கள் கூடுவர். அங்கு கடைகள் நிறைந்து கண் கொள்ளாக்கட்சியாக இருக்கிறது.. அங்குதான் காவல் பூதப்பீடிகை இருக்கிறது. நாளங்காடி என்று அங்குள்ள கடைகள் அழைக்கப்படுவதால் அந்தக் காவல் தெய்வத்திற்கு **நாளங்காடி பூதம்** என்று பெயராகும். அந்தக் காவல்

தெய்வத்திற்கு இருபகுதி மக்களும் சேர்ந்து பொங்கல் இட்டு மன்னனை வாழ்த்தி, நாடு முழுவதிலும்,

"பெரு நில மன்ன னிரு நில மடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க"

என்று வாழ்த்தி மக்களும் மாதரும் முழங்குவர் என்பது சிலப்பதிகாரக் காப்பிய வரிகள் கூறுகின்றன. இதுவே இப்பெருங் காப்பியத்தின் கொள்கை வெளியீடாகும்.

"நடுக்கின்றி நிலை இய நாளங்காடியில்
சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென
வெற்றிவேல் மன்னற் குற்றதை ஒழிக்கெனத்
தேவர் கோமான் ஏவலிற் போந்த
காவல் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலும் நோலையும் விழுக்குடைமடையும்
"பூவும் கையும் பொங்கலும் சொரிந்து
துணங்கையர் குரவையரணங் கெழுந்தாடிப்
பெருநில மன்னன் இருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
மாதர் கோலத்து வல வையினுரைக்கும்"

என்று சிலப்பதிகாரக் காப்பிய வரிகள் கூறுகின்றன.

"செரு வெங்காதலின் திருமாவளவன்
வாளும் குடையும் மயிர்க் கண்முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெருகவிம்
மண்ணக மருங்கினென் வலி கெழு தோளெனப்
புண்ணிய திசை முகம் போகிய அந்நாள்"

என இளங்கோவடிகள் கூறுகிறார்.

போரில் மிகவும் விருப்பம் கொண்ட திருமாவளவன், வாள் குடை முரசு முதலியவற்றை ஒரு நல்ல நாளிலே புறப்படச் செய்து, என் வலி பொருந்திய தோள்கள் எத்திசையிலாயினும் பகை வரைப்

பெறவேண்டும் என்று தன் வழிபடு தெய்வத்தை அதாவது தனது இஷ்ட தெய்வத்தை, குல தெய்வத்தை வணங்குவது என்பதும் வட திசையைப் புண்ணிய திசை எனக் குறிப்பிடுவதும் இந்து சமய மரபாகும்.

காவல் தெய்வத்திற்கு சதுக்கம் இருப்பதைப் போலவே பிற தெய்வங்களுக்கும் சதுக்கங்களும் மன்றங்களும் பீடங்களும் இருப்பதும் இந்து சமய மரபாகும். அவை விரிந்து சிறிய பெரிய கோயில்களும் அவைகளையொட்டிய குளங்களும், மண்டபங்களும் பிரகாரங்களும் மாட வீதிகளும் ரத வீதிகளும் தோன்றி காலத்தால் வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

மக்களுடைய நலன்களுக்காக பல வேண்டுதல்களும் தெய்வங்களின் பால் செய்யப்படுகின்றன. அவைகளில் பொது நலன்கள் மிகவும் சிறப்பாகக் கருதப்படுகின்றன.

நாளங்காடிச் சதுக்கத்தில் **"இந்தப் பெரிய நிலம் முழுவதிலும் பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளமும் சுரக்க"** என வேண்டுதல் செய்யப்பட்டது போல மக்கள் நலனுக்காக, நாட்டு நலனுக்காக உலக நலனுக்காக தெய்வங்களை வேண்டுதல் நமது நாட்டின் சீரிய மரபாகும்.

**"கூனும், குறளும், ஊமும், செவிடும்**
**அழுகு மெய்யாளரும் முழுகினராடிப்**
**பழுதில் காட்சி நன்னிறம் பெற்று**
**வலஞ்சியாக் கழியும் இலஞ்சி மன்றமும்"**

என்று கூறப்படும் சிலப்பதிகார வரிகள் மூலம், கூனர், குருடர், குறுகிய உடம்பினர், ஊமையர், செவிடர், தொழுநோய், தோல் நோய் போன்ற அழுகல் நோய்கள் கொண்ட உடம்பினர், தங்கள் நோயும் குறையும் தீர முழுகி, நீராடி, பழுதில்லாத தோற்றத்தைப் பெறுவதற்குரிய புண்ணிய தீர்த்தங்களும் வலம் செய்து நீராடி வழிபாடு செய்வதற்கான இலஞ்சி மன்றங்கள் இருந்தன என்பதையும் அறிகிறோம். இவ்வரிகள் மூலம் உடல் ஊன

முற்றோர்பால் பரிவு கூறி அவர்களுடைய நலன்களைக் காப்பதற்கு சமுதாயம் ஆற்ற வேண்டிய கடமையை சுட்டிக் காட்டுவதாக இப்பாடல் வரிகள் அமைந்தள்ளன.

**"வஞ்ச முண்டு மயற்பகையுற்றோர்**
**நஞ்ச முண்டு நடுங்கு துயருற்றோர்**
**அழல்வாய் நாகத்தா ரெயிறமுந்தினர்,**
**கழல் கண்கூளிக்கடு நவைப்பட்டோர்**
**சுழல வந்து தொழத்துயர் நீங்கும்**
**நிழல்கால் நெடுங்க நின்ற மன்றமும்"**

என்று கூறப்படும் வரிகள் மூலம், .

வஞ்சனையால் சிலர் மருந்தூட்டப்பட்டு பித்துப் பிடித்தவர்கள், தெரிந்தோ தெரியாமலோ நஞ்சுதனை உண்டு. அதனால் நடுங்கும்படியான துன்பம் அடைந்தவர்கள், விஷப் பாம்புகளினால் கடிக்கப்பட்டு, கலக்கமடைந்தோர், பேய்களினால் பாதிக்கப்பட்டு கொடுந்துன்பம் அடைந்தோர்கள் ஆகியோர்கள் தங்கள் துயர் நீங்குவதற்கு வலம் வந்து வழிபாடு நடத்துவதற்கான நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும் இருந்ததை அறிகிறோம்.

**"தவமறைந் தொழுகும் தன்மையிலாளர்**
**அவமறைந்தொழுதும் அலவற்பெண்டிர்**
**அறை போகமைச்சர், பிறர்மனை நயப்போர்,**
**பொய்க்கரியாளர், புறங்கூற்றாளரென்**
**கைக் கொள் பாசத்துக் கைப்படுவோரெனக்**
**காத நான்கும் கடுங்குரல் எழுப்பிப்**
**பூதம் புடைத்துணும் பூதச்சதுக்கமும்"**

என்று கூறப்படும் வரிகள் மூலம்

தவ வேடத்தில் மறைந்து நின்று கூடா ஒழுக்கத்தில் ஒழுகும் தவத்தன்மையில்லாதவரும், மறைமுகமாக தீய நெறியில் ஒழுகும் அவலப் பெண்டிரும், கீழறுத்து துரோகம் செய்யும் அமைச்சரும், பிறர் மனைவியை விரும்புவோரும், பொய்சாட்சி கூறுவோரும், புறங்கூறுவோரும் ஆகியோர்கள் தனது கைகளில் உள்ள பாசக் கயிறுகளில் சிக்குவார்களாயின், நான்குகாத தூரம் கேட்கும் அளவில் கடுங்குரல் எழுப்பி அத்தீயோரைப் பாசத்தாற்

கட்டி நிலத்தில் புடைத்து உண்ணும் பூதம் நிற்கும் பூதச் சதுக்கமும் இருந்ததாகக் காப்பியத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வரிகளில் குறிப்பிடப்படும் பாவச் செயல்களுக்கு தண்டனை உண்டு என்று அச்சம் காட்டி, மக்கள் அத்தகைய தீய நெறிகளில் போகாமல் நல்ல நெறிகளில் செல்லுமாறு தூண்டுவதற்காகக் கூறப்படும் கருத்துக்களேயாகும் இவை-யெல்லாம்.

இராமன் அரசுப் பட்டம் துறந்து காட்டிற்குச் செல்வதற்கு தனது தாய் காரணமானது கேட்டுத் துடித்துப்போன பரதன் பதபதைத்துக் கூறுவதைக் கம்பன் மிக அழகாக எடுத்துக் காட்டுவதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

**"அறம் கெட முயன்றவன் அருளில் நெஞ்சினன்,**
**பிறன் கடை நின்றவன், பிறரைச் சீறினோன்,**
**மறம் கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்**
**துறந்த மாதவர்க்கு அருந்துயரம் சூழ்ந்து ளோன்**
**தாய்ப்பசி உழந்துயிர் தளரத் தான் தனிப்**
**பாய் பெரும் பாழ் வயிறு அளிக்கும் பாவியும்**
**நாயகன் பட நயந்தவனும் நண்ணும் அத்**
**தீஎரி நரகத்துக் கடிது செல்க யான்"**

என்றும்

**"பொய்கரி கூறினோன், போருக்கு அஞ்சினோன்**
**கைக்கொளும் அடைக்கலம் கரந்து வவ்வினோன்,**
**எய்த்திடத்து இடர் செய்தோன் என்று இன்னோர் புகும்**
**மெய்கொடு நரகி டை விரைவின் வீழ்க யான்,"**

என்றும்,

**"அந்தணன் உறையுளை அனலி ஊட்டினோன்**
**மைந்தரைக் கொன்றுளோன், வழக்கில் பொய்த்துளோன்**
**நிந்தனை தேவரை நிகழ்த்தினோன் புகும்**
**வெம்துயர் நரகத்து வீழ்கயானுமே"**

என்றும்,

**"கன்றுயர் ஒய்ந்துகக்கறந்து பால் உண்டோன்,**
**மன்றிடைப் பிறர் பொருள் மறைந்து வவ்வினோன்**

நன்றியை மறந்திடும் நயமில் நாவினோன்
என்றிவர் உறும் நரகு என்னதாகவே''

என்றும்,

''ஆறு தன் உடன்வரும் அஞ்சொல் மாதரை
ஊறு கொண்டலைக்கத்தன் உயிர் கொண்டே கினோன்
சோறு தன் அயல் உளோர் பசிக்கத்துய்த்துள்ளோன்
ஏறும் அக்கதியிடையானும் ஏறவே'',

என்றும்,

''அழிவரும் அரசியல் எய்தி ஆகும் என்று
இழிவரு சிறுதொழில் இயற்றி ஆண்டு தன்
வழிவரு தர்மத்தை மறந்து மற்றொரு
பழிவரு நெறிபடர் பாதகன் ஆகயான்''

என்றும்,

''கன்னியை அழிசெயக் கருதினோன், குரு
பன்னியை நோக்கினோன், பருகினோன் நறை
பொன் இதழ் கனவினில் பொருந்தினோன் எனும்''
இன்னவர் உறுகதி என்னதாகவே,

என்றும்,

''ஏற்றவர்க்கு ஒரு பொருள் உள்ளது இன்று என்று,
மாற்றலன் உதவலன், வரம்பில் பல் பகல்
ஆற்றினன் உழற்றும் ஓர் ஆதன் எய்தும் அக்
கூற்றுறு நரகின் ஓர் கூறு கொள்கயான்''

என்றெல்லாம், பாவச் செயல்களையும் அதற்குரிய நரகத்தையும் அடுக்கடுக்காய் பரதன் கூறுவதைக் கம்பன் மிக அருமையாக எடுத்துக்காட்டுவதை இங்கு ஒப்பிடுவது பொருத்தமேயாகும். அடுத்தபடியாக,

''அரைசு கோல் கோடினும் அறங்கூறவையத்து
உரைநூல் கோடி ஒரு திறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவை நீருகுத்துப்
பாவை நின்றழு உம் பாவை மன்றமும்''

என்று கூறப்படும் காப்பிய வரிகள் மூலம்,

அரசனது செங்கோல் சிறிது வளைந்தாலும் அறம் கூறப்பட வேண்டிய அவையத்தில் அவர் உரைக்கும் உரை ஒரு சிறிது நேர்மை திரிந்து ஒரு பக்கம் பற்றினும் நாவால் கூறாமல் துன்பக் கண்ணீர் சொரிந்து அழும் அறப்பாவை மன்றமும் இருந்ததை அறிகிறோம்.

இவ்வாறு மெய்வகை உணர்ந்த விழுமியோர் ஏத்தும் ஐவகை மன்றங்களிலும் மக்கள் கூடிக் கலந்து பொங்கலிட்டு வழிபாடுகள் பலவும் செய்தனர் என்றும் சிலப்பதிகாரப் பெருங்காப்பியம் விரித்துரைக்கிறது.

ஆறுகுளம் போன்றவைகளில் நீராடுதலைப் புனித நீராடுதலாக இந்து சமய நெறிகள் கூறுகின்றன. நீராடுதல் மூலம் உடல் சுத்தமாகிறது என்பது மட்டுமல்லாமல் உள்ளமும் அமைதி பெறுகிறது. எனவே பல துறைகளிலும் நீராடுதல் புண்ணியமானது என்னும் நம்பிக்கையும் பழக்கமும் நம் நாட்டு மக்களிடையில் நிலை பெற்றிருப்பதைக் காண்கிறோம். இவ்வாறு புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல் தீர்த்த மூடம் என்னும் சமணக்கருத்துக்களை அடிகளார் சில பாத்திரங்கள் மூலம் காப்பியத்தில் குறிப்பிட்ட போதிலும் மக்களிடமுள்ள இந்து சமயப்பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைக் கருத்துக்களையும் அடிகளார் பல இடங்களிலும் குறிப்பிடுகிறார். அது போலவே, விழாக்கள், பொங்கல் இடுதல் போன்ற வழிபாட்டு முறைகளையும் அடிகளார் தமது காப்பியத்தில் பல இடங்களிலும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இன்னும்

**"தண்ணறுங்காவிரித்தாது மலிபெருந்துறைப்**
**புண்ணிய நன்னீர் பொற்குடத்தேந்தி**
**மண்ணகம் மருள வானகம் வியப்ப**
**விண்ணவர் தலைவனை விழு நீராட்டிப்**
**பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்**
**வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**
**நீல மேனி நெடியோன் கோயிலும்**
**மாலை வெண்குடைய மன்னவன் கோயிலும்**
**மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ**

நான்மறை மரபின் தீ முறையொருபால்
நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்தப்பகுதித் தோற்றத்து
வேறு வேறு கடவுள் சாறு சிறந்தொரு பால்''

என்று இளங்கோவடிகளார் கூறும் சிறப்பு மிக்க காப்பிய வரிகளில்

ஆயிரம் பொற்குடங்களில் புண்ணிய காவிரி நீர் கொண்டு வந்து, உலகோர் புகழ, வானோர் வியப்ப இந்திரனுக்கு விழு நீராட்டியும் மற்றும் மகாதேவனாகிய இறைவன் கோயில், ஆறுமுகனான முருகன் கோயில், பல தேவன் கோயில் நீல மேனியனான திருமால் கோயில்,இந்திரன் கோயில் ஆகிய கோயில்களில் நான்கு வேதங்களில் சொல்லியபடி வழிபாடுகளும் விழாக்களும் நடைபெற்றன என்றும், அத்துடன்

நால்வகைப்பட்ட தேவர்கள் மற்றும் பதினெண் வகைப் பட்ட கணங்களுக்கும் மற்றும் இதர பல வேறு கடவுளர்களுக்கும் விழாக்கள் நடைபெற்றன என்றும் இந்து சமய வழிபாடுகளைப் பற்றி சிறப்பித்துக் கூறுகிறார்.

இங்கு, இந்திரன், மகாதேவன், முருகன், பலதேவன், திருமால் கோயில்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை பெரிய கோயில்களாகும் .அத்துடன் வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நால்வகை தேவர்கள், பதினெட்டு கணங்கள் பற்றியும் அவர்களுக்கு நடைபெற்ற விழாக்கள் பற்றியும் காப்பியம் குறிப்பிடுகிறது.

நால்வகைத் தேவர்கள் என்பது வசுக்கள் எண்மர், ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொரு பேர், மருத்துவர் இருவர் என்று வேதங்கள் குறிப்பிடும் தேவர்களாகும். பதினெண் கணங்கள் என்பது கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர், கருடர், தேவர், அசுரர், முனிவர், இயக்கர், இராக்கதர், கந்தருவர், சாரணர், சித்தர், ஆகாச வாசிகள், நாகர், பூதம் வேதாளம், தாராகணம், போக பூமியர் என்று வேதங்கள் குறிப்பிடுகின்றன.

இளங்கோவடிகள் தொடர்ந்து,

**"அறவோர் பள்ளியும், அறனோம் படையும்**
**புறநிலைக் கோட்டத்துப் புண்ணிய தானமும்"**

என்றும் அருகர் புத்தர் பள்ளிகள் அறத்தைப் போற்றும் அறச் சாலைகள் ஆகியவற்றில் அறம் போதிக்கும் சிறப்புகளும் நடைபெற்றதைப் பற்றியும் குறிப்பிட்டு சிறப்பாகக் கூறுகிறார்.

**"திறவோர் உரைக்கும் செயல் சிறந்தொருபால்"** என்று அறவோர் பள்ளிகள் மற்றும் அறச்சாலைகளின் பணிகளைப் பற்றி சிறப்பித்துக் கூறியுள்ள போதிலும், நாட்டு மக்களிடையில் பழக்கத்தில் உள்ள வழிபாடுகளையும் விழாக்களையும் மிகவும் விரிவுபட அடிகளார் கூறுவதைக் காண்கிறோம்.

அதில் வேதங்களில் குறிப்பிட்டுள்ள முக்கிய கடவுளர் களையும், தேவர்களையும் கணங்களையும் பற்றியும் கூறுவதைக் காண்கிறோம்.

## 6. கடலாடு காதையில்

இக்காதையில் மாதவியின் ஆடல் திறன் பற்றிய விரிவான குறிப்புகள் வருகின்றன. பதினோரு வகையான பாணிகளில் மாதவி ஆடல்கள் நிகழ்த்துவதாகக் கூறப்பட்டுள்ளது.

**"அவரவர் அணியுடன் அவரவர் கொள்கையின்**
**நிலையும் படிதமும் நீங்கா மரபில்**
**பதினோராடலும் பாட்டின் பகுதியும்**
**விதிமாண் கொள்கையின் விளங்கக்காணாய்"**

என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

இந்தப் பதினோரு ஆடலுள் இறைவன் ஆடிய இரண்டினை முன் வைத்தும் மாயோன் ஆடிய இரண்டினையும் முருகன் ஆடிய இரண்டினையும் முறையே அவற்றின் பின் வைத்தும் வென்றி பற்றி நிகழ்ந்த இக்கூத்துகளின் பின், காமத்தால் சிறைப்பட்ட அநிருத்தனை மீட்டல் காரணமாக மாயோன் ஆடிய வினோதக் கூத்தினையும்,அதன் பின் அவன் மகனாகிய காமன் ஆண்மை திரிந்து பேடியுருக் கொண்டு ஆடிய கூத்தினையும் பின்னர் பெண் தெய்வங்களுள்ளே, மாயவளும் திருமகளும், அயிராணியும் ஆடியவற்றையும் வைத்தும் அவரவர் தகுதிக்கும் ஆண்மை பெண்மை கட்கும் கூத்துகளின் இயல்புகளுக்கும் பொருந்த முறைப்படுத்தியுள்ள இளங்கோவடி- களின் திப்பிய புலமை மாண்பு செப்பு தற்கரிய தொன்றாகும் என்று உரையாசிரியர் பண்டித நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மாதவியின் ஆடல்களின் பாணியைப் பற்றி சிலப்பதிகாரக் காப்பியம் கூறுவது

**"மாயோன் பாணியும், வருண பூதர்**
**நால்வகை பாணியும், நலம் பெறும் கொள்கை,**
**வானூர் மதியமும் பாடிப்பின்னர்"**

என்று முதலில் குறிப்படுகின்றன. இவை முதலில் தொடங்கும். அவை வாழ்த்துப் பாடல் போன்றதாகும். இவை தேவபாணி எனப்படுகிறது.

* பாரதி யாடிய பாரதி அரங்கத்துத்
திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவாளன் ஒரு திறனாக வோங்கிய
இமையவன் ஆடிய கொடு கொட்டி ஆடலும்

* தேர் முன் நின்ற திறை முகன் காணப்
பாரதி ஆடிய வியன் பாண்டரங்கமும்

* கஞ்சன் வஞ்சம் கடத்தற்காக
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்

* அல்லியத் தொகுதியும் அவுணற்கடந்த
மல்லின் ஆடலும் மாக்கடல் நடுவண்
சூர்த்திறங்கடந்தோன் ஆடிய துடியும்

* படை வீழ்த்தவுணர் பையுள் எய்தக்
குடைவீழ்த்தவர் முன் ஆடிய குடையும்

* வாணன் பேரூர் மருகிடை நடந்து
நீணிலம் அளந்தோன் ஆடிய குடமும்

* ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி ஆடலும்
காய்கின அவுணர் கடுந்தொழில் பொறாஅள்
மாயவன் ஆடிய மரக்கால் ஆடலும்

* செருவேங்கோலம் அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்
வயலுழை நின்று வடக்கு வாயிலுள்
அயிராணி மடந்தை ஆடிய கடையமும்

ஆகியவைகள் சிலப்பதிகாரக்காப்பியம் குறிப்பிடும் மாதவியின் ஆடல் பாணிகளாகும்.

இதில் இமையவள், உமையவள், அஞ்சனவண்ணன், சூர்த்திறம் கடந்தோன் (முருகன்) நீணிலம் அளந்தோன் (திருமால்) காமன், மாயவள், திருவின் செய்யோன் (திருமகள்), பாரதி, அயிராணி ஆகியோரெல்லாம் இந்து சமயம் வழிபடும் தெய்வ வடிவங்களாகும்.

இறைவனும் இமையவளும், நான்முகனும் பாரதியும், திருமாலும் (கண்ணன்) திருமகளும், முருகனும், காமனும், அயிராணியும் ஆடல் வடிவங்களில் நமக்குக் காட்சியளிப்பதைக் காண்கிறோம்.

# 7. நாடுகாண் காதையில்

கோவலன், மாதவியைவிட்டு நீங்கி, தனது இல்லம் வந்து கண்ணகியுடன் அதிகாலையில் விடியா முன்னரே புகார் நகரை விட்டு நீங்கி மதுரைக்குப் பயணமானார்கள்.

**"வான்கண் விழியாவைகரையமந்து**
**மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்**
**காரிருள் நின்ற கடை நாட்கங்குல்**
**ஊழ்வினைக் கடைஇ உள்ளத்துரப்ப"**

வைகரையாமத்திலேயேமிக அதிகாலையிலேயே இருட்டுள்ள போதே ஊழ்வினை வழிகாட்ட ஊரைவிட்டுச் சென்றார்கள். புகார் நகரின் எல்லையக் கடந்தவுடன்

**"நீ ணெடு வாயில் நெடுக்கடை கழிந்தாங்கு**
**அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த**
**மணிவண்ணன் கோட்டம் வலஞ் செயலாக்கழிந்து"**

என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

பாம்புப் படுக்கையில் அறிதுயில் கொண்டுள்ள மணிவண்ணனாகிய திருமாலின் கோயில் வலம் வந்து அங்கிருந்து போயினர் என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் மேற்கு நோக்கிச் செல்லும்போது செழிப்பு மிக்க பல ஊர்களையும் கடந்து செல்கிறார்கள். வழியில்

**மழைக் கருவுயிர்க்கும் அழற்றி கழட்டில்**
**மறையோர் ஆக்கிய ஆவுதி நறும்புகை**
**இறையுயர் மாட மெங்கணும் போர்த்து**

**மஞ்சு சூழ் மலையின் மாணத் தோன்றும்**

**மங்கல மறையோர் இருக்கை களைக்**

**காண்கிறார்கள்.**

பல காத தூரம் நடந்து ஆறு சூழ்ந்த அழகிய திருவரங்கம் வந்து சேர்கிறார்கள். அங்கு அறவோர்கள் அறிஞர்கள் பலரின் ஆசிபெற்றார்கள் என்று காப்பியம் குறிப்பிடுகிறது.

## 8. காடுகாண் காதையில்

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் உறையூரை அடைந்து, அங்கிருந்து தெற்குநோக்கி சென்று ஒரு அழகிய சோலையை அடைந்தனர். அங்கு பாண்டிய மன்னனை வாயார வாழ்த்திக் கொண்டு ஒரு முதிய அந்தணன் வந்து சேர்ந்தான். அவனிடம் தாங்கள் யார், இங்கு வரக்காரணம் யாது என்று கோவலன் கேட்க அம்மாமுது மறையோன் கூறியது :

**"தீது தீர் சிறப்பின் தென்னனை வாழ்த்தி**
**மாமுது மறையோன் வந்திருந்தோனை**
**யாது நும் ஊர் ஈங்கென்வரவெனக்**
**கோவலன் கேட்பக் குன்றாச் சிறப்பின்**
**மாமறையாளன் வரும் பொருள் உரைப்போன்"**

திருவரங்கத்தில் திருமால் கிடந்த வண்ணத்தையும், திருவேங்கடத்தில் நின்ற வண்ணத்தையும் காண வந்தேன் என அம்மாமுது மறையோன் கூறியதை இளங்கோவடிகள் மிகவும் சிறப்பாக விவரித்துத் தனது பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார்கள்.

**"நீலமேகம் நெடும் பொற் குன்றத்துப்**
**பால்விரிந்தகலாத்து படிந்தது போல**
**ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்**
**பாயற் பள்ளிப்பலர் தொழுதேத்த**
**விரிதிரைக்காவி ரிவியன் பெருந்துருத்தித்**
**திருவமர் பார்பன் கிடந்த வண்ணமும்**
**வீங்கு நீர் அருவி வேங்கட மென்னும்**
**ஓங்குயர் மலையத்துச்சி மீமிசை**
**விரிகதிர் ஞாயிறுந்திங்களும் விளங்கி**
**இரு மருங்கோங்கிய இடைநிலைத்தானத்து**
**மின்னுக் கோடியுடுத்து விளங்குவிற்பூண்டு**
**நன்னிற மேகம் நின்றது போலப்**
**பகையணங்காழியும் பால் வெண்சங்கமும்,**
**தகை பெறு தாமரைக் கையினேந்தி**
**நலங்கிளர் ஆரம்மார்பிற் பூண்டு**

பொலம்பூ வாடையின் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்
என் கண்காட் டென்று என்னுள்ளங்கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட்டுள்ளேன்
தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும்
கண்மணி குளிர்ப்பக் கண்டே னாதலின்
வாழ்த்தி வந்திருந்தேன்.''

என்ற வாறுள்ள காப்பிய வரிகளில் அரங்கனின் அழகையும் வேங்கடவனின் சிறப்பையும் விவரித்துக் கூறுவது தனி அழகாக அமைந்துள்ளது.

தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும் கண்டு வந்தேன் என்று அந்த மாங்காட்டு மறையோன் கூறியதால் அவனிடம் மதுரைக்குச் செல்லும் வழியைக் கோவலன் கேட்டான். அதற்கு அவ்வந்தணன் கூறிக் காட்டிய வழியைப் பற்றிக் குறிப்பிடுபோது:

''அறியும் பொறையும் ஆரிடை மயக்கமும்
நிறை நீரு வேலியும் முறைபடக் கிடந்த இந்
நெடும்போர் அத்தம் நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்ட கம் புக்கால்
பிறைமுடிக்க கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்தருதெறி கவர்க்கும்''
எனக் காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

கற்பாறை, சிறுமலை, ஏரிக்கரை கடந்து கொடும்பாளூர் அருகில் உள்ள நெடுங்குளத்தின் கரையைக் கடந்தால் பிறை சூடிய பெருமானாகிய இறைவன் ஏந்தியுள்ள திரிசூலத்தைப் போல மூன்று பிரிவாக வழி பரிந்து செல்கிறது என்று அந்தணன் வாயிலாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

வழி மூன்று பிரிவாகப்பிரிந்து செல்வதைச் சிவ-பெருமானின் திரிசூலத்திற்கு ஒப்பிடுவது இங்கு சிறப்பானதாகும்.

"இந்த மூன்று பாதைப் பிரிவுகளில் வலப்பக்கம் உள்ள பாதையில் சென்றால் வயல்வெளிகளையும் திணைப் புலங்களையும் கடந்து பாண்டியன் சிறுமலையைத்தாண்டி இடப் பக்கத்தில் குளங்கள் தாழ்த்த வயல்கள், குளிர்ந்த பூஞ்சோலைகளையும் கடந்து சென்றால் திருமாலிருஞ்சோலை மலையாகிய அழகர் மலையை அடையலாம். அங்கு இடைவிடாத பல சிறப்புகளைக் கொண்ட மூன்று பொய்கைகள் புண்ணியத் தீர்த்தங்கள் உள்ளன. என்று மாங்காட்டு மறையோன் கோவலனிடம் விவரித்துக் கூறுகிறார்.

"அவைகளாவன, புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி ஆகியவைகளாகும். அவைகளில் நீராடினால் ஐந்திரம் அறிவீர், முற்பிறவியினை உணர்வீர், இட்ட சித்தி பெறுவீர்" என்றும,

அங்குள்ள பிலத்தின் கண் போக விரும்பினால் அம்மலையில் எழுந்தருளியுள்ள மேலோனாகிய திருமாலை வணங்கி, அவனது திருவடிகளை உள்ளத்தின் கண் வைத்து அம்மலையை மூன்று முறைவலம் வந்து, புலத்தின் கண் புகுந்தால் ஒரு இயக்கமாது தோன்றி இம்மைக்கு இன்பமும் மறுமைக்கு இன்பமும். அவ்விரண்டு மின்றி எப்போதும் ஒரே தன்மையுள்ள தூயதாக உள்ள பொருளைக் கூறினால், தகுதியுள்ள உமக்கு பிலத்தின் கதவுகளைத் திறந்து விடுகிறேன் என்றும் கூறும்" என்றும்,

அவைகளுக்கு பதில் கூறி பிலத்திற்குள் புகுந்தால் அதனுள்ளே உள்ள பல கதவுகளையும் தாண்டிச் சென்று முடிவிலா இன்பம் யாது என்று உரைப்பீராயின் முப்பொருளினும் விரும்பிய பொருளினைப் பெறலாம்" எனவும்,

"அவ்வாறு அப்பிலம் புக விரும்பாவிடில் இயக்கமாது காட்டும் மூன்று புண்ணிய தீர்த்தங்களில் ஐந்தெழுத்து, எட்டெழுத்து மந்திரங்களை மனதில் நினைத்தும் கூறியும் நீராடிப் பிறவிப் பயன் விரும்பாவிட்டால், அம்மலை மீது நிற்கும்

திருமாலின் திருவடிகளை வணங்கிப் பிறவித்துன்பங்களைத் தீர்த்துக் கொள்வீர்களாக" என்றும்,

"அவ்வாறு அந்த வலப்பக்க வழியில் போக விரும்பாவிடில் மற்ற இரண்டு வழிகளில் இடைப்பட்ட வழியில் செல்லலாம் என்று மதுரை செல்லும் வழிகளைப் பற்றிய விவரங்களை விரிவாகக் கூறுகிறார் மாங்காட்டு மாமுது மறையோன்.

"வலம் படக்கிடந்து வழிநீர்த் துணியின்
அலறு தலை மராமும் உலறுதலை ஓமையும்
"பொரியரை உழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்,
வரிமரல் திரங்கிய கரிபுறக் கிடக்கையும்
நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளிக்கும்
கானமும் எயினர்கடமும் கடந்தால்
ஐவன வெண்ணெலும் அறைக்கண் கரும்பும்
கொய்பூந்தினையும் கொழும்புனவரகும்,
காயமும் மஞ்சளும் ஆய்கொடிக் கவலையும்
வாழையும் கமுகும் தாழ் குலைத்தெங்கும்
மாவும் பலாவும் சூழடுத்து ஓங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்,
அம்மலை வலங்கொண்டு அகன்பதிச் செல்லுமின்,

அவ்வழிப்படரீராயினிடத்துச்
செவ்வழிப் பண்ணிற் சிறைவண்டரற்றும்
தடந்தாழ்வயலொடு தண்பூங்காவொடு
கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவிராயின்
பெருமால் கெடுக்கும் பிலமுண்டாங்கு
விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபிற்
புண்ணிய சரவணம் பவகாரணியோடு
இட்ட சித்தியெனும் பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்று ளவாங்குப்

புண்ணிய சரவணம் பொருந்து விராயின்
விண்ணவர் கோமான் விழுநூலெய்துவிர்
பவகாரணி படிந்தாடுவீராயிற்
பவகாரணத்திற் பழம் பிறப்பெய்துவிர்
இட்ட சித்தி எய்து விராயின்

இட்ட சித்தி எய்துவிர் நீரே
ஆங்குப் பிலம்புக வேண்டுதிராயின்
ஓங்குயிர் மலையத்துயர்ந்தோற்றொழுது
சிந்தையில் அவன்றன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ்செய்தால்,
நிலம்பக வீழ்ந்த சிலம் பாற்ற கன்றலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங்கூந்தற்
கடிமலர் அவிழ்ந்த கன்னிகாரத்துத்
தொடி வளைத் தோளி ஒருத்தி தோன்றி
இம்மைக் கின்பமும்மறுமைக் கின்பமும்
இம்மையும் மறுமையும் இரண்டுமின்றியோர்
செம்மையில் நிற்பதுஞ் செப்புமின் நீயிர்இவ்
வரைத்தாள் வாழ்வேன்வரோத்தமை என்பேன்,
உரைத்தார்க்குரியேன் உரைத்தீராயின்,
திருத்தக்கீர்க்குத் திறந்தேன்கதவெனும்,
கதவந்திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலவுள போகிடைகழியன,
ஓட்டுப் புதவமொன்று ண்டதனும்பர்
வட்டிகைப் பூங்கொடிவந்து தோன்றி
இறுதியில் இன்பம் எனக்கீங்குறைத்தால்
பெறுதிர் போலும் நீர் பேணிய பொருள் எனும்,
உரையீராயினும் உறுகண் செய்யேன்
நெடுவழிப்புறத்து நீக்குவல் நும்மெனும்
உரைத்தால் உளரெனின்உரைத்த மூன்றின்
கரைப் படுத்தாங்குக் காட்டினன் பெயரும்
அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்
வருமுறை எழுத்தின் மந்திரமிரண்டும்

ஒரு முறையாக உளங்கொண்ட டோதி
வேண்டிய தொன்றின் விரும்பினீராடிற்
காண்டகுமாபின வல்லமற்றவை
மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்,
பொற்றாமரைத்தாள் உள்ளம் பொருந்துமின்,

உள்ளம் பொருந்து விராயின் மற்றவன்
புள்ளணி நீள் கொடி புணர் நிலை தோன்றும்
தோன்றிய பின்னவன் துணை மலர்த்தாளிணை,
ஏன்று துயர்கெடுக்கம் இன்பம் எய்தி
மாண்புடை மரபின் மதுரைக்கேகு மின்''

என்று சிலப்பதிகாரக் காப்பிய வரிகள் கூறுகின்றன.

ஒரு அந்தணர் வாயிலாக திருமாலிருஞ்சோலையின் சிறப்பினையும் அங்கு அக்காலத்தில் இருந்த மக்களின் பழக்கத்தில் இருந்த இந்து சமய வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், புண்ணிய தீர்த்தங்கள் அவைகளின் பயன்கள், பலன்கள், ஆகியவற்றை இளங்கோவடிகளார் சிறப்பித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

கணிகையர் வாழ்க்கை மிகவும் இழிவானது, பிணியைப் போன்றது. மேலோரும் நூலோரும் நன்மை தீமைகளை நன்கு அறிந்தோரும் அத்தகைய வாழ்க்கையை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்னும் நன்னெறியை அடிகளார் கீழ்க்கண்ட காப்பிய வரிகளில்

''மேலோராயினும் நூலோராயினும்
பால்வகை தெரிந்த பகுதி யோராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட்டொழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மென்''

என்று குறிப்பிட்டுக் கூறுகிறார்.

# 9. வேட்டுவரிக்காதையில்

இக்காதையில் அடிகளார் கொற்றவையின் அழகிய கோலத்தை மிகவும் நயம்பட எடுத்துக் கூறுகிறார்.

பிறையாகிய வெள்ளிய இதழைச் சூடும் சென்னி-யினையும், விழித்த இமையாத கண்ணினையும் பவளம் போன்ற வாயினையும், ஒளி வீசும் நகையினையும், நஞ்சினை உண்டதனால், கருத்த கண்டத்தினையும் உடையவள். கொடிய சினத்தையுடைய வாசுகி என்னும் பாம்பாகிய நாண்பூட்டி மேருவாகிய பெரிய மலையை வளைத்தவள், நஞ்சு பொருந்திய துளையுள்ள எயிற்றினையுடைய பாம்பாகிய கச்சணிந்த முலையினையுடையவள். வளையல் அணிந்தகையில் சூலத்தை ஏந்தினவள், யானையின் தோலைப் போர்த்து, சிங்கத்தின் தோலை மேகலையாக உடுத்தவள், இடப்பகத்து சிலம்பும், வலப்பக்கத்து வீரக்கழலும் ஒலிக்கும் சிறிய அடிகளையும் மேலான வெற்றியையும் செயல் திறனையும் கொண்ட வாளினையும் உடைய கொற்றவை.

தலையும் உடலும் இரு வேறு வடிவினையுடைய திரண்ட தோள்களையுடைய அவுணனது தலையில் நின்றவள், யாவரும் வணங்கும் இறப்பில்லாதவள், இளமை பொருந்தியவள், கௌரநிறத்தைக் கொண்டவள், போரில் வல்லவள், சூலம் ஏந்தியவள், நீலநிற முடையவள், திருமாலுக்கு இளையவள், தலைவி, திருமகள், கொடிய வாளினைப் பெரிய கையில் தாங்கியதாகவும், கலையை ஊர்தியாகவும் கொண்ட பாவை, ஆராயும் கலைகளை உணர்ந்த வீரவளைகளையும் அரிய அணிகலன்களையும் அணிந்த பாவை போன்றவள் திருமாலும் நான்முகன் முதலியோரும் வணங்கத்தோன்றிய கன்னியின் கோலத்தைக் கொண்டவள் என்பதை,

**"மதியின் வெண் தோடு சூடும் சென்னி**
**நுதல் கிழித்து விழித்த இமையாநாட்டத்துப்**
**பவள வாய்ச்சி, தவள வாள் நகைச்சி,**
**நஞ்சுண்டு கருத்த கண்டி வெஞ்சினத்து**

அரவு நாண்பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை யெயிற்று ரகக்கச் சுடை முலைச்சி
வளையுடைக் கையில் சூலமேந்தி
கரியின் உரிவை போர்த்தணங்காகிய
அரியின் உரிவை மேகலையாட்டி
சிலம்பும் கழலும் புலம்புஞ்சீறடி
வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை
இரண்டு வேறுருவில் திரண்ட தோள் அவுணன்,
தலைமிசை நின்ற தையல் பலர் தொழும்
அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவர்க்கிளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப்பாவை
ஆய்கலைப்பாவை அருங்கலப்பாவை
தமர் தொழவந்த குமரிக்கோலத்து
அமரிளங் குமரியும் அருளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததால் எனவே''

என்று குறிப்பிடுகிறது காப்பியவரிகள்.

வேட்டுவர்கள் கொற்றவையைப் பலவாறு புகழ்ந்து பாடுவதை இளங்கோவடிகள் மிகவும் அழகாக சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். இந்த வேட்டுவ வரிப்பாடல்கள் சிலப்பதிகாரச் சிறப்புகளிலே ஒன்றாகும்.

''நாகம் நாறும் நரந்தம் நிரந்தன
ஆவும் ஆரமும் ஓங்கின வெங்கணும்
சேவும் மாவும் செறிந்தன கண்ணுதல்
பாகம் ஆளுடையாள் பலி முன்றிலே''
''செம்பொன் வேங்கை சொரிந்தனசேயிதழ்
கொம்பர் நல்லிலவங்கள் குவிந்தன
பொங்கர் வெண்பொரி சிந்தின புன்இளந்
திங்கள்வாழ் சடையாள் திருமுன்றிலே''

"மரவம் பாதிரி புன்னை மனங்கமழ்
குரவம் கோங்கம் மலர்ந்தன கொம்பர்மேல்
அரவ வண்டினம் ஆர்த்துடன் யாழ் செய்யும்,
திருவமாற்கிளை யாள் திருமுன்றிலே"

நெற்றியில் கண்ணையுடைய சிவபெருமானது இடப்-பாகத்தை ஆள்பவளாகிய கொற்றவையின் பீடத்தின் முன்பு, பிறை தாங்கிய சடையனது அழகிய பீடத்தின் முன்பு, திருமாலுக்கு இளையவளது பீடத்தின் முன்பு, புன்னையும் நார்த்த மரங்களும், ஆச்சாவும் சந்தன மரங்களும், சேமரங்களும் மாமரங்களும் நெருங்கி வளர்ந்து நின்றன. வேங்கை மரங்களும், இலவமரங்களும் தமது சிவந்த மலர்களையும் புங்கை மரங்கள் தமது வெண்மையான மலர்களையும் கொட்டிக்குவித்தன. கடம்பு பாதிரி, புன்னை, குரா, கோங்கு முதலிய மரங்கள் பூத்துக்-குலுங்கின. அவற்றின் மீது வண்டுகள் ரீங்காரம் செய்து யாழ் போல இசைத்தன, என்று மிகவும் அழகாக வர்ணனை வரிகள் ஒலிக்கின்றன.

அடுத்து கொற்றவை எவ்வாறு கம்பீரமாய் நிற்கிறாள் என்பதைக் காப்பிய வரிகள் சிறப்பித்துக் கூறுகின்றன.

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத்தெருமைக் கருந்தலை மேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக்கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்"

"வரிவளைக் கை வாளேந்தி மாமயி டற் செற்றுக்
கரியதிரி கோட்டுக்கலை மிசை மேல் நின்றாயால்
அரியரன் பூமேலோனன் அகமலர் மேல் மன்னும்,
விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்"
"சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால் சினவிடை மேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுத லோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்தவே நிற்பாய்"

ஆங்குக்

"கொன்றையும் துளவமும் குழுமத்தொடுத்த
துன்று மலர்ப்பிணையல் தோள் மேலிட்டாங்கு
அசுரர் வாட அமரர்க்காடிய
குமரிக் கோலத்துக் கூத்துள்படுமே"

என இளங்கோவடிகளாரின் பெரும் காப்பிய வரிகள் மிக அழகாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இவ்வாறு அசுரர் வாடத் தேவர்களுக்கு வெற்றி கிடைக்க மரக்கால் கூத்து ஆடிய கொற்றவையை வணங்கித் தொழுது வேட்டுவர்கள் ஆடிப்பாடியதை அக்கால வழக்கத்தின்படி ஆடிப்பாடியதை அடிகளார் தனிச்சிறப்பாக இக்காதையில் கூறுகிறார்.

"சுடரொடு திரிதரு முனிவரும் அமரரும்
இடர் கெட அருளும் நின் இணையடி தொழுதேம்"

எனவும்,

"வம்பலர் பல்கிவழியும் வளம்பட,
அம்புடை வல்வில் எயின்கடன் உண்குவாய்
சங்கரி, அந்தரி, நீலி, சடாமுடிச்
செங்கண் அரவு பிறையுடன் சேர்த்துவாய்"

என்றும்,

"விண்ணோர் அமுதுண்டுஞ்சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய்"

என்றும்

"மருதின் நடந்து நின்மாமன் செய்வஞ்ச
உருளும் உதைத்தருள் செய்குவாய்"

என்றெல்லாம் ஆடிப்பாடி

"மறைமுது முதல்வன் பின்னர் மேய
பொறையுயர், பொதியிற் பொருப்பன பிறர் நாட்டுக்
கட்சியும் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல் வெய்யோனே"

என்று, வேதங்களை அருளிச் செய்த முழு முதல் கடவுளாகிய சிவபெருமானுக்குப் பின் னோனாகிய அகத்தியன் எழுந்தருளியுள்ள பொறை நிறைந்த உயர்ந்த பொதிகை மலைக்கும் உடையவனான பாண்டி மன்னன், பகைவரின் முனையிடமும் அவர் நின்ற மீட்கும் தொழிலும் பாழ்பட விரும்பும் அம்மன்னன் வெற்றி மாலை சூடுவானாக என்று இக்காதையை இந்து சமய மணத்துடன் முடிக்கிறார் அடிகளார்.

கொற்றவை பற்றி கூறப்படும் அத்தனை எடுத்துக்காட்டுகளும் அடைமொழிகளும் சான்றுகளும் இந்து சமயச் சார்பானவைகளும் அக்கால மக்கள் சமுதாயத்தின் சமயப்பழக்க வழக்கங்களுக்குட்பட்டதாகவும் அமைந்துள்ளதைக் காண்கிறோம். இளங்கோவடிகள் மிகவும் நுட்பமாக நாட்டு மக்களிடையில் நிலவியிருந்த பல வேறு சமயப் பழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும், கோவில்களையும் விழாக்களையும் காப்பியத்தில் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

# 10. புறஞ்சேரியிருந்த காதையில்

கோவலனும், கண்ணகியும், கவுந்தியடிகளும் இரவெல்லாம் நடந்து ஒரு நாள் அதிகாலையில்,

**"வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூல் மார்பர் உறைபதிச் சேர்ந்து"**

என,வேதநூல்களைப் பயின்று அதன் படியான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் அந்தணர்கள் குடியிருக்கும் ஊர் ஒன்றை அடைந்தனர் என்று அடிகளார் குறிப்பிடுகிறார். இங்கு மறை நூல்கள் படிப்பதும் அதன் நெறிமுறைகளின்படி நடப்பதும், அன்றைய நடப்பில் இருந்த இந்து சமய நெறி முறைப் பழக்கங்களை அடிகளார் மிகவும் சிறப்பாகவே குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

கோவலனைப் பிரிந்த காவிரிப் பூம்பட்டினம், இராமனைப் பிரிந்த அயோத்தியைப் போல மக்கள் அறிவு மயங்கி நின்றதாக உதாரணம் காட்டி அடிகளார் குறிப்பிடுகிறார்.

**"பெருமகன் ஏவலல்லதி யாங்கணும்
அரசே தஞ்ச மென்ற ருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும் பேதுற்றதும்"**

என்று சிலப்பதிகாரச் செய்யுள் குறிப்பிடுகிறது.

கோவலனை இழந்த பூம்புகார் நகரம் இராமனை இழந்த அயோத்தி நகரம் போல் இருந்தது என்பது அடிகளார் வரிகள். இராமனை இழந்த அயோத்தி பற்றி,

**"ஏர்துறந்தவயல், இளமைந்தர் தோள்
தார்துறந்தன, தண்தலை நெல்லினும்
நீர்துறந்தன, தாமரை நீத்தெனப்
பார்துறந்தனள் பங்கயச் செவ்வியே"**

என்றும்,

"நகையிழந்தன வாள்முகம் நாறு அகில்
புகையிழந்தன மாளிகை, பொங்கு அழல்
சிகை இழந்தன தீவிகை, தேமலர்த்
தொகையிழந்தன தோகையர் ஓதியே"
எனவும்,

"தேரும், மாவும்,களிறும் சிவிகையும்,
ஊரும் பண்டியும் ஊருநர் இன்மையால்
யாரும் இன்றி எழீல் இல வீதுகள்
வாரி இன்றிய வாலுக ஆற்றினே"

என்றும் கம்பன் கவிதைகள் மிகவும் அற்புதமாக எடுத்துக் கூறுகின்றன.

இளங்கோவடிகள் இராமன் இல்லாத அயோத்தியை ஒப்பிட்டது தனிச்சிறப்பு மிக்கதாகும். இராம காதையின் இதிகாசச் சான்று குறிப்பிடத்தக்கதாகும்.

மதுரை மாநகரைக் குறிப்பிடும்போது

"அருந்தெறற் கடவுள் அகன் பெருங்கோயிலும்
பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்
பால் கெழு சிறப்பிற் பல்லியஞ்சிறந்த
காலை முரசக்கனை குரல் ஓதையும்
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்"
என்று நகரின் சிறப்பையும்,

"உலகு புரந்தூட்டும் உயர்பேரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி"
என்று வையை ஆற்றின் சிறப்பையும்,

"அறம்புரிமாந்தர் அன்றிச் சேரா புறஞ்சிறை
மூதூர்" என்றும் அடிகளார் குறிப்பிட்டிருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

# 11. ஊர்காண் காதையில்

அதிகாலையில் மதுரை நகரைச் சுற்றிப் பார்க்கக் கோவலன் செல்ல விருக்கிறான். அந்த அழகிய மதுரையம் பதியைக் குறிப்பிடும்போது, இளங்கோவடிகளார், இறைவனது கோயிலும், திருமாலின் கோயிலும், பலராமன் கோயிலும் முருகன் கோயிலும், அத்துடன் அறவோர் பள்ளியும், மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும் இருந்தனவென்றும் அவ்விடங்களிலிருந்து எழுப்பப்பட்ட காலை முரசுகளும் பாட்டுகளும் மதுரை மக்களைத் துயில் எழுப்பியது என்றும் குறிப்பிடுகிறார்.

நமது கோயில்களில் அதிகாலையில் பள்ளியெழுச்சிப் பாடல்களும் பாவைப்பாடல்களும் சுப்ரபாதங்களும் பாடுவதும் காலை பூசைக்கான முரசுகள் வாத்தியங்கள் முழங்குவதும் இந்து சமய மரபாகும்.

**"வேந்துதலை பனிப்ப ஏந்து வாட் செழியன்**
**ஓங்குயர் கூடல் ஊர்துயி லெழுப்ப**
**நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்**
**உவணச் சேவல் உயர்ந்தோன் நியமமும்**
**மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்**
**கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்**
**அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்**
**மறத்துறை விளங்கிய மன்னவன் கோவிலும்**
**வால் வெண்சங்கொடு வகை பெற்றோங்கிய**
**காலை முரசும் கனை குரல் இயம்ப"**

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

அந்த அதிகாலை நேரத்தில் கோவலன், கவுந்தி அடிகளிடம் சென்று நான் நல்லொழுக்க நெறியினின்று நீங்கியோன் ஆகி, நறுமணம் மிக்க மலர்களைப் போன்ற மேனியை உடைய கண்ணகியைத் துயரத்தில் ஆழ்த்தி, இப்போது முன்பின் அறியாத ஊருக்கு வந்து சிறுமை-யடைந்துள்ளேன். இந்நகரத்தில் உள்ள வணிகப் பெருமக்களுக்கு

எனது நிலையை உணர்த்தி நான் திரும்பும் வரை இவள் உங்களிடம் இருக்கட்டும் என்று மனவருத்த முற்று விடை கேட்டான். இங்கு கோவலன் தான் செய்த தவறுகளை நினைந்து வருந்தி நல்வழி காணவும் மீண்டும் நல்ல நிலைக்கு வருவதற்கு விரும்பியும் மனம் விட்டுப் பேசுவதை அடிகளார் மிகவும் நயமாக எடுத்துக் கூறுகிறார்.

**"நெறியின் நீங்கியோர் நீர்மையேனாகி**
**நறுமலர் மேனி நடுங்கு துயரெய்த**
**அறியாத் தேயத் தாரிடையுழந்து**
**சிறுமை யுற்றேன் செய்தவத் தீர்யான்**
**தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு**
**என்னிலை யுணர்த்தி யான் வரும் காறும்**
**பாதக் காப்பினள் பைந்தொடியாகலின்**
**ஏத முண்டோ அடிகளீங்கென்றலும்"**

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன

அதற்குக் கவுந்தியடிகள், கோவலனைத் தேற்றுகிறார். பல அறிவுரைகளையும், அறவுரைகளையும் எடுத்துக் கூறுகிறார். சென்றதை எண்ணிப் பலன் இல்லை. பாவ நெறியினின்றும் நீங்க வேண்டும். அப்படி நீங்காவிட்டால் அப்பாவச் செயல்கள் பல துன்பங்களை விளைவிக்கும். அவ்வாறு நிகழும் துன்பங்களைக் கண்டு அற நூல்களைக் கற்றறிந்த அறிஞர்கள் துவளமாட்டார்கள்.

கொண்ட மகளிரைப் பிரிவதும் அதனால் விளையும் துன்பங்களும் தனித்த வாழ்க்கை நடத்துவோர்க்கு இல்லையே தவிர, பெண்டிரும் உண்டியும் தான் இன்பம் தரத்தக்க பொருளாம் என்று கருதியவர், அடைந்த பிரிவுத் துன்பங்கள் இன்று மட்டுமல்ல முற்காலத்திலும் நடந்திருக்கின்றன என்று கூறி, இராமன் சீதையைப் பிரிந்து வருந்தியதையும், நளன் தமயந்தியைப் பிரிந்து வாழ்ந்த கதையையும் எடுத்துக்கூறி அவை யெல்லாமல் வினைப் பயனேயாகும், ஆயினும் அவர்களைப்

போல் நீ உன் மனைவியைப் பிரியவில்லை. பிரியா வாழ்க்கை பெற்றிருக்கிறாய். எனவே கவலையின்றி நகருக்குச் சென்று உனது வேலைகளைக் கவனித்து முடித்துக்கொண்டு திரும்புவாயாக என்று அறிவுரை கூறி அனுப்புகிறார்.

இங்கு கவுந்தியடிகள் வெறும் பெண்டிரும் உண்டியும் மட்டுமே இன்பமெனக் கருதிக் துன்பமடைந்தோர் பலருண்டு என்று அறிவுரை கூறுவதும், இராமன் சீதை கதையையும், நளன் தமயந்தி கதையையும் எடுத்துக்காட்டாகக் கூறுவதும் இளங்கோவடிகளின் காப்பியச் சிறப்பாகும். இதில் அமைந்துள்ள பொதுக்கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

“பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவிலாளன் ஒறுக்குந்துன்பமும்
புரிகுழல் மாதர்ப்புணர்ந்தோர்க்கல்லது
ஒரு தனிவாழ்க்கை உரவோர்க்கில்லை
பெண்டிரும் உண்டியும் இன்பமென்றுலகில்
கொண்டோர் உறுவும்கொள்ளாத்துன்பம்
கண்டனராகிக் கடவுளர் வரைந்த
காமம் சார்பாக் காதலின் உழந்தாங்கு
ஏமஞ்சாரா இடும்பை எய்தினர்
இன்றேயல்லால் இறந்தோர் பலரால்
தொன்றுபட வரூஉம் தொண்மைத் தாதலின்
தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலிநீங்கக் கடுந்துயருழந்தோன்
வேத முதல் வன்பயந் தோனென்பது
நீயறிந்திலையோ நெடுமொழியன் றோ”

“வல்லாடாயத்து மண்ணரசிழந்து
மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன்
காதலிற்பிரிந்தோனல்லன் காதலி
தீ தொடு படுஉம் சிறுமையள் அல்லள்
அடவிக் கானகத்தாயிழை தன்னை
இடையிருள் யாமத்திட்டு நிக்கியது

வல்வினையன் றோமடந்தை தன் பிழையெனச்
சொல்லலும் உண்டேற் சொல்லாயோ நீ
அனையும் அல்லை ஆயிழைதன்னொடு
பிரியாவாழ்க்கை பெற்றனையன்றே
வருந்தாதேகி மன்னவன் கூடல்
பொருந்துழியறிந்து போதீங் கென்றலும்''

என்று, வல்வினை காரணமாகத் துன்பம் ஏற்பட்டுள்ள-தென ஆறுதல் கூறியதை இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

## 12. அடைக்கலக்காதையில்

மதுரையின் ஆட்சியின் அரசியல் கொள்கை நிலை பற்றிய குறிப்புடன் தொடங்குகிறது இக்காதை. இளங்கோவடிகளார் இப்பெருங்காப்பியத்தில் கூறும் அரசியல் பொதுக்கருத்துக்கள் பலவும் இன்றும் கூட மக்களுக்கு வழிகாட்டும் கோட்பாடுகளாக உள்ளன.

மன்னராட்சியானாலும் மக்களாட்சியானாலும் ஆட்சி முறைக்குப் பொதுவான பல கொள்ளைகளும் நெறிமுறைகளும் அமைந்துள்ளன. நாட்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் மற்றும் இதர உயிர்கள் அனைத்திற்கும் வேண்டிய உணவையும் வாழ்க்கைக்கு அவசியமான இதர பொருள்களும் கிடைக்குமாறு ஆட்சிச்சக்கரம் அமைய வேண்டும். ஆட்சியின் செம்மை, தண்மை, கொற்றம் ஆகியவை சீராக அமையும் கொள்கை நிலை பெற்றிருக்க வேண்டும். நாட்டில் வாழும் மக்களுக்கு வேண்டிய அனைத்தும் கிடைத்து , பிழைப்பிற்கு வேற்றிடம் போகாத நிலை இருக்க வேண்டும் என்பதைப் பாண்டியராட்சியின் மதுரையைப் பற்றி சிலப்பதிகாரக் காப்பியம் குறிப்படுகிறது.

**''நிலந்தரு திருவின் நிழல்வாய் நேமி**
**கடம் பூண்டு ருட்டுங் கௌரியர் பெருஞ்சீர்க்**

**கோலின் செம்மையும் குடையின் தண்மையும்**

**வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்**

**பதியெழு வறியாப் பண்பு மேம்பட்ட**
**மதுரை மூதூர் ......................................''**

என்று இளங்கோவடிகளின் காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.''.

மதுரையின் புறநகர்ப் பகுதி பற்றி

**"அறந்தருநெஞ்சின் அறவோர் பல்கிய**
**புறஞ்சிறை மூதூர் என்றும் குறிப்பிடப்படுகிறது.**

கோவலன் மதுரை நகரைச் சுற்றிப்பார்த்து விட்டுத் திரும்பி வந்து மாதவத்தாட்டியான கவுந்தியடிகளிடம் நகரின் சிறப்புகளைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தபோது ஏற்கனவே கோவலனுக்கு அறிமுகமாகி யிருந்த மாடலன் என்னும் மறையோன் அங்கு வந்து சேர்ந்தார்.

அம்மறையோனை அடிவணங்கி செய்தி கேட்டது பற்றி:

**"தாழ்நீர் வேலித்தலைச் செங்கானத்து**
**நான்மறை முற்றிய நலம்புரிக் கொள்கை**
**மாமறை முதல்வன் மாடலன் என்போன்**
**மாதவ முனிவன் மலை வலங்கொண்டு**
**குமரியம் பெருந்துறைக் கொள்கையின் படிந்து**

**தமர் முதற் பெயர்வோன் தாழ் பொழிலாங்கண்,**
**வருந்து செல்வருத்தத்து வான்றுயர் நீங்கக்**
**கவுந்தி இடவறின் புகுந்தோன் தன்னைக்**
**கோவலன் சென்று சேவடி வணங்க"**

என்று காப்பிய வரிகள் குறிப்பிட்டுக் கூறுகின்றன.

இந்து சமயத்தின் மூலவேர் நான் மறைகளாகும். அவைகளின் கொள்கைகள் மக்களுக்கு நலம் பயப்பனவாகும். அதை "**நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை**" என்று காப்பியம் குறிப்பிடுவது சிறப்பாகும். இந்து சமய வழிபாடுகளில், வழிபாட்டு முறைகளில் மலைவலம் வருவதும் புண்ணிய தீர்ததங்களில் நீராடுவதும் அடங்கும். அவை மனிதனின் உடலுக்கும் உள்ளத்திற்கும் நலம் பயப்பனவாகும். அதை இவ்வரிகளில் "**மாதவ முனிவன் மலை வலம் கொண்டு, குமரியம் பெருந்துறை கொள்கையிற்படிந்து**" மாமறை முதல்வன் மாடலன்

வந்தது பற்றி மிகவும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

கோவலனைப் பற்றி நன்று அறிந்திருந்த மாடல மறையோன், அவனுடைய பெருமைகளைப் பற்றியும் அவன் செய்துள்ள நல்லகாரியங்களைப் பற்றியும் சிறப்பித்தும் கூறுகிறான். அவையனைத்தும் மக்களை நல்வழிப் படுத்துவதற்கு எடுத்துக்காட்டாக அமைந்த நல்வினைகளாகும்.

தனவணிகர்களின் முக்கிய பண்புகளில் ஒன்று புண்ணிய தானங்கள் செய்வதாகும். பொருள் உள்ளோர் அனைவருக்கும் இந்த உரைபொருந்தும். அவ்வாறு தானம் செய்தோருக்கு துன்பம் நீங்கி துயர்க்கட லொழியும் என்னும் கருத்துப்பட

**"உன்பெரும் தானத்து உறுதி யொழியாது**
**துன்பம் நீங்கி துயர்க் கட லொழிகென"**

கோவலனுடைய முன்னோர் ஒருவருக்கு அவர்களுடைய வழிபடு, தெய்வம் உதவியதாகக் காப்பியக்கதை கூறுகிறது.

மக்களுக்கு ஆபத்து எற்படும்போது அவற்றைத் தடுத்து அம்மக்களைப் பாதுகாப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதும் வறுமைப்பட்டவர்களுடைய பசிப்பிணியைப் போக்குவதும் இல்லாதோருக்கு உதவுவதும் மனிதனுடைய நற்பண்புகளாகும். இவைகளுக்குக் கோவலன் முன்னுதாரணமாக இருந்தான் என்பதைக் காட்டும் வகையில் அவனுடைய சீரிய பண்புகளைக் குறிக்கும் மூன்று முக்கிய நிகழ்ச்சிகளை மாமறை முதல்வன் மாடலன் கூறுவதைச் சிலப்பதிகாரப் பெருங்காப்பியம் குறிப்பிடுகிறது.

கோவலனிடம், ஞான நன்னெறி மிக்க ஒருமாமுது மறையோன் தானம் பெறுவதற்கு வந்தபோது, ஒரு மதம் பிடித்த யானை அந்த மறையோனைத் துன்புறுத்த வந்தபோது கோவலன் அந்த யானையைத் தடுத்து அதன் மதத்தை அடக்கி, அந்த

முதியமறையோனையும் மற்றவர்களையும் அம்மத யானைத் தாக்குதல் அபாயத்திலிருந்து காப்பாற்றினான் என்பதை

"கடக்களிறடக்கிய கருணை மறவ" என்று காப்பியக்கதை சிறப்பித்துக் கூறுகிறது.

வீட்டிலிருந்த கீரிப்பிள்ளையைக் கொன்று விட்டாள் என்று தனது மனைவியைக் கைவிட்டு ஒரு அந்தணன் காடு சென்று விட்டான். அதனால் பாதிக்கப்பட்ட அந்த அந்தணப் பெண்ணிற்கு அவளுக்கேற்பட்ட துன்பத்தைத் துடைக்க,

"தீத்திறம் புறிந்தோள் செய்துயர் நீங்கத்
தாணம் செய்து அவள்தன் துயர் நீக்கிக்
காணம் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத்துறு பொருள் கொடுத்து
நல்வழிப்படுத்த செல்லாக் செல்வ",

என்று கூறும் அளவிற்கு கோவலன் அவர்களுக்கு உதவி செய்து நல்வழிப்படுத்தினாள் என்பதையும் மாடல மறையோன் நினைவுபடுத்திக் கூறுகிறான்.

மற்றொரு சமயம் வறுமையால் துன்படைந்த ஒருவன் பொய்க்கரி கூற, பூதம் அவனைக் கொன்றுவிட, அவனுடைய மெயதான தாயும் சுற்றமும் வறுமையில் வாட அவர்களுடைய பசிப்பிணி போக்க கோவலன் உதவுகிறான்.

"அழிதரும் உள்ளத்தவ ளொடும் போந்தவள்
சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரின் பசிப்பணியறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்"

என்றும் கோவனுடைய சிறப்பு குணங்களை மாடலன் புகழ்ந்து கூறுகிறார்.

புறநகரின் பகுதியின் கண், கவுந்தியடிகளும், மாடல மறையோனும் கோவலன் கண்ணகியும் இருந்தபோது இசக்கி தெய்வத்திற்கு பால்சோறு படைக்க வந்த ஆயர் முதுமகள் மாதரியென்பாள் கவுந்தியடிகளைக் கண்டு வணங்கினாள். தென் பாண்டிய நாட்டில் இருக்கும் சமயம் சார்ந்த மக்களிடம் இசக்கி தெய்வதை வழிபடும் பழக்கம் இன்றும் இருந்து வருதைக் காண்கிறோம். அப்பழக்கம் அன்றும் இருந்ததைச் சிலப்பதிகாரக் காப்பியத்தால் அறிகிறோம். இவ்வாறான சிறிய செய்திகளையும் பல்வேறு மக்கள் பகுதியினரின் வழிபாட்டு முறைகளையும் மிகவும் நுட்பமாக அடிகளார் எடுத்துக்காட்டுகிறார். அத்துடன் ஆயர் குல மகளிரான மாதரி, இசக்கி தெய்வத்திற்கு பால் சோறிட்டு வழிபடுவதும், கண்ணனைப் போற்றி திருமாலைப்-பாடுவதும், கவுந்தியடிகளை வணங்கி மறியாதை செய்வதுமான பரந்த சமய மனப்பான்மை, சாதாரண மக்களிடம் இருப்பதை எடுத்துக்காட்டுவதாகவும் உள்ளது.

> **''அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய**
> **புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்**
> **பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்**
> **ஆயர் முதுமகள் மாதரி என்போள்**
> **கவுந்தி ஐயையைக் கண்டடி தொழலும்''**

எனக் காப்பிய வரிகள் கூறுகின்றன.

கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாக அவளது இல்லத்தில் தங்கவைக்குமாறு கூறுகிறார்.

அப்போது சிறந்த அறிவுரைகளாகப் பத்தினிப் பெண்டிர் சிறப்பு பற்றியும், அடைக்கலப் பொருளைக் காக்கும் அறனைப் பற்றியும், தனக்கென வாழாத வாழ்க்கையின் குறைவிலா இன்பத்தைப் பற்றியும் உலக மக்களுக்கு வழிகாட்டி யாக உள்ள சிறந்த கருத்துக்களைச் சிலப்பதிகாரப் பெருங்காப்பியம் முன் வைக்கிறது.

"இன்துணை மகளிர்க்கின்றியமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண்டிலமால்
வானம் பொய்யாது, வளம் பிழைப்பறியாது
நீணில வேந்தர் கொள்ளம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடென்னும்
அத்தகு நல்லுரை அறியாயோ நீ"

என்றும்

"தவத்தோர் அடைக்கலம் தான் சிறிதாயினும்
மிகப்பேரின்பம் தருமது கேளாய்"

என்றும்,

"சாரணர் கூறிய தகை சால் நன்மொழி
ஆரணங்காக அறந்தலைப் பட்டோர்
அன்றப்பதியுள் அருந்தவ மாக்களும்
தன் தெறல் வாழ்க்கைச் சாவக மாக்களும்
இட்ட தானத்து எட்டியும்மனைவியும்
முட்டா இன்பத்துமுடிவுல கெய்தினர்"

கற்புடைப் பெண்டிர் தெய்வத்திற்கு ஈடானவர்கள், எல்லாவகை ஒழுங்கங்களும் நிறைந்த மக்கள் வாழும் நாட்டில் வானம் பொய்க்காது, வளம் குறையாது அரசியல் கொற்றம் சிதையாது என்றும் அடைக்கலப் பொருளைக் காக்கும் பணி இன்பம் தரத்தக்கது என்றும் அறவாழ்க்கை முழுமையான இன்பமளிக்கும் என்னும் கருத்துக்கள் இன்று சமுதாயத்தின் பொதுக் கருத்தக்களாகியுள்ளன.

# 13. கொலைக்களக்காதையில்

கவுந்தியடிகளின் அறிவுரைப்படி இடைக்குல மடந்தையான மாதரி, கோவலனையும் கண்ணகியையும் தனது மனைக்கு அழைத்துச் சென்று தனி வீடு கொடுத்து இருக்கச் செய்தாள். பாத்திரங்கள், அரிசி, பருப்பு, காய்கறிகள் கொடுத்து உதவினாள். தனது மகளான ஐயையை கண்ணகிக்குத் துணையாக இருக்கச் செய்தாள். கண்ணகியும் நன்கு சமையல் செய்து தனது கணவனுக்கு உணவளித்தாள்.

கண்ணகி உணவு பரிமாற, கோவலன் தடுக்கில் அமர்ந்து உண்ணும் காட்சியை ஆயர்பாடியில் கண்ணனும் நப்பின்னையும் சேர்ந்து வாழ்ந்த காட்சியைப் போல இருந்ததாக மாதரியும் ஐயையும் கருதி பெருமகிழ்ச்சி பெற்று பூரிப்பு அடைந்ததாக இளங்கோவடிகள் ஒப்பிட்டு எடுத்துக் கூறுகிறார்.

''தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்கு
அமுத முண்க அடிகளீங்கென
அரசர் பின்னோர்க்கருமறை மருங்கின்
உரியவெல்லாம் ஒரு முறை கழித்தாங்கு
ஆயர்பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுதுண்ணும் நம்பியீங்குப்
பல்வளைத் தோழியும் பண்டு நம் குலத்துத்
தொழுனை யாற்றினுள்தூமணி வண்ணனை
விழுமந்தீர்த்த விளக்குக் கொல்லென
ஐயையுந்தவ்வையும் விம் மிதமெய்திக்
கண்கொளா நமக்கிவர் காட்சியீங்கென''

என்று கண்ணன் காட்சியாகக்காப்பிய வரிகளில் ஒப்பிட்டுக் கூறியிருப்பது சிறப்பாகும்.

உணவுக்குப்பின் கோவலன் கண்ணகியின் அருகில் அமர்ந்து தான் செய்த தவறுகளை நினைந்து வருந்தி, வருமொழி யாளரோடும் வம்பரத்தைய ரோடும் கூடினேன். மற்றவர்களுடைய ஏளனத்திற்குள்ளானேன். நல்லொழுக்- கத்தினைக் கெடுத்தேன். தாய் தந்தையருக்கு சேவை செய்யும் வாய்ப்புகளை இழந்தேன். உனக்கும் தீமை செய்தேன்'' என்றெல்லாம் மனம் வருந்திக் கூறுகிறான்.

''வருமொழியாள ரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழி கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப்புண்டு பொருளுரையாளர்
நச்சுக் கொன்றேற்கும் நன்னெறியுண்டோ
இருமுதுக் குரவரேவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்கு சிறுமையும் செய்தேன்''

என்று காப்பிய வரிகள் குறிக்கின்றன.

இவையெல்லாம் மற்றவர்களுக்குப் படிப்பினையாக இருக்கக்கருதி இவ்வரிகள் கூறப்படுவதாக உள்ளது.

இல்லறத்தின் சிறப்பாக அடிகளார் கூறும் கருத்து நமது சமுதாயத்தின் இல்வாழ்க்கை மற்றும் குடும்ப அமைப்புக் கடமைகளின் மரபாகும்.

''அறவோர்க் களித்தும் அந்தணரோம்பலும்,
துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்''

இல்லறம் நடத்துவோரின் கடமையாகும் என்பதை சிலப்பதிகாரப் பெருங்காப்பியம் நன்கு உணர்த்துகிறது.

இல்லறத்தில் உள்ளோரின் கடமைகளைப் பற்றி நமது சாத்திரங்களும் அறநூல்களும் மிகவும் தெளிவாகவும் விளக்கிக் கூறுகின்றன. வள்ளுவர் தனது அறத்துப் பாலின் முதல் பகுதி

இல்லறத்தின் சிறப்புகளைப் பற்றியும் கடமைகளைப் பற்றியும் மிக விரிவாகக் கூறுகிறார். பொருளீட்டுதல் குழந்தைகளைப் பராமரித்தல் அவர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்க ஏற்பாடு செய்தல், முதியோர்களைப் பராமறித்தல், சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்தல் முதலிய அறங்கள் சிறப்புற எடுத்துக்காட்டப்படுகின்றன.

மாதரியின் இல்லத்தில் தங்கியிருந்த நாளில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் சிறந்த பல நல்ல கருத்துக்கள் நிறைந்தனவாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

கண்ணகி கோவலனுடன் மதுரைக்குப் புறப்பட்டபோது அவளுடைய சுற்றத்தாரையும், வேலைக்காரர்களையும் விட்டு விலக்கி, ''நாணமும் மடனும், நல்லோரின் வாழ்த்துக்களையும், பாதுகாத்துப் பேணிய கற்பினையும் மட்டும்'' துணையாகக் கொண்டு தன்னுடன் வந்ததாகக் கோவலன் கூறுகிறான்.

''குடி முதல் சுற்றமும் குற்றிளையோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னோடு போந்து ............''

என்று கோவலன் வாயிலாகக் காப்பியவரிகள் குறிப்பிடுவது பெண்ணின் பெருமையைப் பற்றியதாகும்.

இராமன் வனம் சென்றபோது, அயோத்தியைக் கடந்தவுடன் சுமந்திரனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு தனது தம்பியுடனும் ஜானகியுடனும் காட்டுக்ப் புறப்பட்டதைக் கம்பன் தனது கவிதையில்

''தையல் தன் கற்பும், தன்தகவும் தம்பியும்
மையறு கருணையும், உணர்வும் வாய்மையும்

**செய்ய தன் வில்லு மே சேமம் ஆகக்கொண்டு**
**ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே''**

என்று மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

இங்கு இளங்கோவடிகளும் கம்பனும் நம்மை ஒரு இடத்தில் நிறுத்துகிறார்கள். கண்ணகியின் கற்பின் பெருமையும் சீதையின் கற்பின் சிறப்பும் இருவரின் இதர சீலங்களும் நம்முன் நிற்கின்றன.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் கொலைக் களக்காதை அவலத்தின் உச்சமாகும். அக்காதை வரிகளின் முடிவாக வரும் வெண்பா மூலம் இளங்கோவடிகள் உலகோர்க்கு ஒரு அறிவுரை கூறுகிறார்.

உரையாசிரியர் உயர்திரு பண்டித நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கீழ்க்கண்டவாறு தனது உரையில் கூறிகிறார்.

''பாண்டியன் முன் செய்த தீங்கின் பயனாகி வந்த தீவினையால் இவ்வுலகத்தில் வளையாத அவனுடைய செங்கோல் கண்ணகியின் கணவனாகிய கோவலன் முன்னிலையாக வளைவுற்றது. ஆகலான் நீவிர் செய்த இரு வினைப்பயனும் உம்மை வந்து பொருந்தும் என்பதனை அறிந்து உலகத்தீர் நல்வினையைச் செய்யுங்கள்''.

**''நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே**
**கண்ணகி தன் கேள்வன் காரணத்தான் மண்ணில்**
**வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை**
**விளைவாகி வந்த வினை''**

என்பது இக்காதையின் முடிவில்வரும் வெண்பாவாகும்.

இதுவே சிலப்பதிகாரப் பெருங்காப்பியம் உலகோருக்கு வற்புறுத்திக் கூறும் மிக முக்கிய அறிவுரைகளில் முக்கியமான ஒன்றாகும்.

காரணமும் விளைவும் என்பது தத்துவ ஞானக் கூறுகளாகும். பாண்டியன் அரசியலில் பிழை செய்தான்.அதன் விளைவாக அவனது செங்கோல் வளைந்தது. அதற்குக் கோவலன் காரணமாகிறான். கோவலன் தனது பழ வினையால் மதுரையில் கொலையுண்டான். அதற்குப் பாண்டிய மன்னன் காரணமா-கிறான். எனவே தீவினைகளை ஒழித்து நல்வினைகளைக் காணுங்கள் என்று சிலப்பதிகாரச் செய்தி கூறுகிறது.

பெருமழைப்புலவர் உயர்திரு போ.வே.சோமசுந்தரனார் அவர்கள் தனது விளக்கவுரையில்:

''பாண்டியன் முற்பகலில் தன் அரசியிலில் பிழைத்துச் செய்த தீவினை பிற்பகலே வந்தெய்தி அவனது செங்கோலை வளைத்தது. கண்ணகி கேள்வன் முற்பிறப்பில் செய்த தீவினை இப்பிறப்பில் வந்து அவனைக் கொலைக் களத்தே வீழ்த்தியது. அவ்வாறு வீழ்த்தும் போது அதற்குக் கருவியாக அப்பொழுது பிழை செய்த பாண்டியனைக் கருவியாக்கிக் கொண்டது. பாண்டியன் கோலை வளைக்கக் கோவலனைக் கருவியாக்கிக் கொண்டது. இங்ஙனம் கோடல் ஊழின் இயல்பு என்றவாறு இவ் வுண்மையை உணர்ந்து கொள்மின்! தீவினையை விட்டொழி-மின்! இங்ஙனமே நல்வினையின் பயன் நன்மை யாகவே வந்தெய்தும். ஆதலால் நல்லறமே நண்ணுமின் என்றவாறு'' என்று கூறுகிறார்கள்.

மேலும் எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும் என்பதும் இக்காதையின் முக்கிய படிப்பினையாகும்.

# 14. ஆய்ச்சியர் குரவைக் காதையில்

சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்தில் வரும் ஆய்ச்சியர் குரவைப் பாட்டுகள் மிகவும் அருமையான உள்ளத்திற்கினிய பாடல்களாகும். தனித்தன்மையான, சிறப்பு மிக்க பக்திச்-சுவைமிக்கப் பாடல்களாகும். இந்தப் பாடல்கள் தனிக் காதையாக அமைந்து காப்பியத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இப்பாடல்கள் திருமாலின் சிறப்புகளைப் பாடும் சிறந்த கவிதைகளாகும். ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு ஈடாக இப் பாடல்கள் அமைந்துள்ளன. இவை முன்னிலையாகவும் படர்க்கைப்பாடல்களாவும் பாடப்பட்டிருக்கின்றன.

ஆயர் குலமக்கள் கண்ணனைப் பாடும் அழகு தனிச்சிறப்பு மிக்கதாக அமைந்துள்ளது. திவ்யப்பிரபந்தப் பாடல்களுக்கு முன்னோடியாக அமைந்தள்ளது. நாட்டுப் புறப்-பாடல்களின் சாயல் அவைகளில் காணப்படுகிறது. இந்து சமய பக்தி நெறியின் வழிபாட்டு முறைகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் மிகவும் சிறப்பாக இளங்கோவடிகளார் இப்பாடல்களை நமக்கு அளித்துள்ளார்கள். இப்பாடல்கள் நமது நெஞ்சத்தைத் தொடுகின்றன. இவை ஆயர்குல மக்களிடம் இயல்பாய் எழுந்துள்ள சொற்களாக அனைவருக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளன.

கோவலன் கொலையுண்டான், அந்த செய்தி ஆயர்பாடிக்கு இன்னும் தெரியாது. ஆயினும் பல தீய நிமித்தங்கள் தென்படுகின்றன. பல வகை உத்பாதங்கள் நிகழ்கின்றன. தங்கள் சேரிகளில் உத்பாதங்கள் நிகழும் போதும் தீய நிமித்தங்கள் தென்படும் போதும் தங்கள் குடியிருப்புகளையும் ஆநிரைகளை-யும் காத்தருளுமாறு தங்கள் குல தெய்வங்களான கண்ணனையும் பலராமனையும் வேண்டுதல் செய்து ஆயர்பாடிப் பெண்கள் குரவைக் கூத்து வகையில் கூட்டாகச் சேர்ந்து பாடுவது வழக்கமாகும். அந்த வகையில் சிலப்பதிகாரக் காப்பியத்திலும் ஆய்ச்சியர் குரவைப் பாட்டுக்கள், ஆயர்குல தெய்வத்தின் மீதான கூத்துப் பாடல்களாகக் கூறப்பட்டுள்ளன.

குடத்துப்பால் உறையவில்லை. கன்றுகளின் கண்களிலிருந்து நீர் வருகிறது. வெண்ணெய் சரியாக உருகவில்லை. ஆடுகளும் குட்டிகளும் துள்ளி விளையாடாமல் சோர்ந்து கிடக்கின்றன. பசு மாடுகள் காரணமின்றிக் கத்துகின்றன. பசுக்களின் கழுத்து மணிகள் அறுந்து கீழே விழுகின்றன. இந்தத் தீய நிமித்தங்களால் நமக்கு சில தீங்குகள் வரக்கூடும். எனவே கண்ணகியும் காணும் வண்ணம் அவள் முன்னர் ஆயர் பாடியில் எருமன்றத்தின் கண், கண்ணனும் அவனுடைய முன்னோனாகிய பலராமனும் விளையாடிய பால சரித நாடகங்களில் ஒன்றாகிய நப்பின்னையுடன் ஆடிய குரவைக் கூத்தினை பசுக்களும் கன்றுகளும் துன்பம் ஒழியன வென்று நாம் ஆடுவோம் என்று மாதரி தனது மகளை நோக்கிக் கூறுகிறாள்.

**குடத்துப் பாலுறையாமையும்**
**குவியிமிலேற்றின் மடக்**
**கண்ணீர் சோர்தலும் உறியில்**
**வெண்ணெய் உருகாமையும்**
**மறிமுடங்கி யாடாமையும்**
**மான்மணி நிலத்தற்று**
**வீழ்தலும் வருவதோர் துன்ப முண்டென**
**மகளை நோக்கி**
**மனமயங்காதே மண்ணின்**
**மாதர்க் கணியாகிய கண்ணகியும்**
**தான் காண ஆயர்பாடியில்**
**எருமன்றத்து மாயவனுடன்**
**தம்முன் ஆடியவால சரிதை நாடகங்ளில்வேல்**
**நெடுங்கண் பிஞ்ஞை யோடாடிய குரவையாடுதும்**
**யாம் என்றாள் கறவை கன்று துயர்**
**நீங்குக வெனவே**

என்று காப்பியவரிகள் குறிப்பிடுகின்றன.

குரவைக் கூத்து என்பது ஆயர் மகளிர் கண்ணன், பலராமன், நப்பின்னை வேடங்கள் பூண்ட கூட்டாகக் கூடி ஆடும் கூத்தாகும்.

வஞ்சத்தால் வந்து நின்ற ஆவின் கன்றினைக் குணிலாகக் கொண்டு அங்ஙனமே நின்ற விளவின் கனியை உதிர்த்த கண்ணன் மேருமலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் சுற்றியும் பாற்கடலைக் கடந்த மாதவன், நமது கொல்லையில் வஞ்சத்தால் வந்து நின்ற குருந்த மரத்தினை முறித்துச் சாய்த்த மாயக்கண்ணன், நமது வழிபாட்டால், நமது ஆவின் கூட்டத்தில் வருவானாகில் அவனுடைய தீங்குழல் இசையைக் கேட்போம் தோழி எனப்பாடி ஆடுகின்றனர்.

அந்த யமுனைத் துறைவனின் அழகையும் அவனோடு சேர்ந்து ஆடும் நப்பின்னையின் அழகையும் நாம் சேர்ந்து கூடி புகழ்ந்து பாடுவோம் என்றும் பாடி ஆடுகின்றனர்.

மிகவும் அழகான இனிமையான பாட்டுகளில் இளங் கோவடிகள் இவ்வடிகளைக் கூறுகிறார். இப்பாடல்களில் சாதாரண மக்களின் எளிய வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து அவர்களுடைய உள்ளத்தின் உண்மை உணர்வால் எழுகின்ற வார்த்தைகளின் நாட்டுப்பாடல் இனிமையை நாம் காண்கிறோம். வாழ்க்கையோடு கூடி இணைந்த இந்து சமய வழிபாட்டு இசையின் இனிமையை இப்பாடல்களில் நாம் காண்கிறோம்.

1. ''கன்று குணிலாக்கனி யுதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ

2. ''பாம்பு கயிறாக்கடல் கடைந்த மாயவன்
ஈங்கு நம் ஆனுள்வருமேல் அவன் வாயில்
ஆம்பலந்தீங்குழல் கேளாமோ தோழீ''

3. ''கொல்லை யஞ்சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லை நம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ''
தொழுனைத் துறைவனோ டாடிய பின்னை
அணிநிறம் பாடுகேம் யாம்''
என்பது காப்பியத்தில் காணப்படும் பாடல்களாகும்.

**அன்றிவ்வுலக மளந்தாய் அடி போற்றி**
**சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி**
**பொன்றச் சகட முதைத்தாய் புகழ் போற்றி**
**கன்று குணிலா வெறிந்தாய் கழல் போற்றி**
**குன்று குடையாவெடுத்தாய் குணம் போற்றி**
**வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி**
**என்றென்றுன் சேவகமே யேத்திப்பறை கொள்வான்**
**இன்றுயாம் வந்தோ மிரங்கே லோ ரெம் பாவாய்**

என்று ஆண்டாள் பாவைப்பாட்டில் குறிப்பிடுகிறார்.

**''இறுமென் சாயல் நுடங்க நுடங்கி**
**அறுவை ஒளித்தான் வடிவு என் கோயாம்**
**அறுவை ஒளித்தான் அயர அயரும்**
**நறுமென் சாயல் முகம் என் கோயாம்''**

ஆடைகளை எடுத்து ஒளித்து வைத்த கண்ணனின் வடிவழகைப் பாடுவோமோ அல்லது ஆடையின்மை கண்டு தளர்வுற்ற அந்த ஆயர் குலப் பெண்களின் அழகைப் பாடுவோமா என்றும்,

2. **''வஞ்சம் செய்தான் தொழுனைப் புனலுள்**
**நெஞ்சம் கவர்ந்தாள் நிறையென் கோயாம்**
**நெஞ்சம் கவர்ந்தாள் நிறையும் வளையும்**
**வஞ்சம் செய்தான் வடிவு என் கோயாம்''**

யமுனை யாற்றில் தன்னை வஞ்சித்தவனுடைய உள்ளம் கவர்ந்தவளைப் பாடுவோமோ அல்லது அந்த உள்ளம் கவர்ந்தாளின் அழகையும் வளையலையும் கவர்ந்தானது வடிவழகைப் புகழ்ந்து நாம் பாடுவோமா என்றும்,

3. **''தையல் கலையும் வளையும் இழந்தே**
**கையில் ஒளித்தாள் முகம் என் கோயாம்**
**கையில் ஒளித்தாள் முகம் கண்ட ழுங்கி**
**மையல் உழந்தான் வடிவென் கோயாம்''**

ஆடைகளையும் வளையல்களையும் இழந்து நாணத்தால் தனது கைகளால் தங்கள் உடலை மறைத்துக் கொள்ளும் மதையலின் முகத்தின் அழகைப் பாடுவோமா அல்லது கைகளால் மறைத்து அவனது முக அழகுகண்டு மையலுற்றவனுடைய வடிவழகைப் புகழ்ந்து பாடுவோமா? என்றும் ஆயர்பாடிப் பெண்கள் கும்மியடித்துப் பாடுவதை மிக அழகாக இளங்கோவடிகளார் மனம் உருகக் கூறுகிறார்.

இன்னும்

''கதிர் திகிரியான் மறைத்த
கடல் வண்ணன் இடத்துளாள்
மதிபுரையும் நறு மேனித்
தம்முனோன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தல்
பிஞ்ஞை சீர் புறங்காப்பார்
முதுமறை தேர் நாரதனார்
முந்தை முறை நரம்புளர்வார்''

ஞாயிற்றை தனது சக்கரத்தல் மறைத்த கடல் வண்ணனான கண்ணனுடைய இடப்பக்கத்திலும் நிலவைப் போன்ற வெண்மை நிறத்தையுடைய பல தேவனுக்கு வலப்புறத்திலும் நிற்கிறாள் நப்பின்னைப் பிராட்டி அப்போது தாளம் தவறாது வேதம் அறிந்த நாரதனார் இசை எழுப்பினார் என்றும்,

''மயில் எருத்து உறழ்மேனி
மாயவன் வலத்துளாள்
பயில் இதழ் மலர் மேனித்
தம்முனோன் இடத்துளாள்
கயில் எருத்தம் கோட்டிய நம்
பின்னை சீர்புறங்காப்பார்
குயிலுவருள் நாரதனார் கொளை
புணர்நீர் நரம்புளர்வார்''

இப்போது அழகிய ஆண்மயிலின் கழுத்தின் நீல நிறத்தைப் போன்ற வண்ணமுடைய கண்ணனுடைய வலப் புறத்தும் அழகிய மலர் போன்ற வெண்மை நிறம் கொண்ட பல தேவனுடைய இடப்புறத்திலும் நப்பின்னைப் பிராட்டி இருக்கிறாள். அதற்கேற்பத் தாளம் தவறாது நாரதனார் வகுத்த முறைப்படி இசை எழுப்பிப் பாடினர் என்றும் ஆய்ச்சியர் குரவைப் பாடல் பாடியதை இளங்கோவடிகளார் மிகச் சிறப்பாகக் கூறுகிறார்.

இவ்வாறு நாரதன் தனது தாளச் சீருடன் கூடிய யாழிசையால் கண்ணனும், பலராமனும், நப்பின்னைப் பிராட்டியும் சேர்ந்து ஆடுவதற்கேற்ப தனது யாழ் நரம்புகளை மீட்டி இசைப்பதாக ஆயர்பாடிப் பெண்கள் அழகாகப் பாடுவதை இளங்கோவடிகள் தனது பாடல் வரிகளால் குறிப்பிடுகிறார்.

நாரதன் நாரணன் புகழ் பாடுவதை ஆழ்வார்கள் பல இடங்களிலும் தங்கள் பாடல்களில் குறிப்பிடுகிறார்கள்.

**ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய்**
**அவனியாய் அருவரைகளாய்**
**நான்முகனாய் நான் மறையாய் வேள்வி**
**தக்கணையாய்த் தானுமானான்**
**சேமமுடை நாரதனார் சென்று சென்று**
**துதித்திறைஞ்சக் கிடந்தான் கோயில்**

என்று பெரியாழ்வார் குறிப்பிட்டுப்பாடுகிறார். மற்ற ஆழ்வார்களும் நாரதன் திருமால் புகழ்பாடுவதைக் குறிக்கும் பாடல்களை திவ்யப்பிரபந்தத்தில் காணலாம்.

**மாயவன் தன் முன்னினொடும்**
**வரிவளைக்கைப் பின்னையொடும்**
**கோவலர்தம் சிறுமியர்கள்**
**குழற்கோதை புறஞ்சோர**
**ஆய்வளைச் சீர்க்கு அடிபெயர்த்திட்டு**

அசோதையார் தொழுதேத்தத்
தாதெரு மன்றத்து ஆடும் குறவையோ
தகவுடைத்தே,
எல்லாம் நாம்

புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
உள்வரிப் பாணி யொன்று உற்று.

கண்ணன் தனது முன்னவனான பலதேவனுடனும், அழகிய வளையல்களை அணிந்த நப்பின்னைப் பிராட்டியோடும் ஆயர் குலச் சிறுமியர் தங்கள் அழகிய கூந்தலிலே சூடியுள்ள மலர் மாலைகள் கழுத்துப்புரத்திலே வீழ்ந்து அசைந்தாட, கைகளில் அணிந்துள்ள அழகிய வளையல்கள் அசைந்து ஒலிக்கின்ற தாளத்திற்கேற்ற அடி எடுத்து வைத்து அசோதைப்பிராட்டி, மகிழ்ந்து வணங்கிப் புகழ கோகுலத்தின் எருமன்றத்தில் ஆடிய குரவைக் கூத்து மிகவும் சிறப்புடையதாக அமைந்திருந்தது.

இனி கருடப்பறவையை ஊர்தியாகக் கொண்டுள்ள கடவுளான திருமாலை நாம் அனைவரும் சேர்ந்துப் போற்றிப் பாடுவோம் என்று மாதரி கூற அனைவரும் சேர்ந்து பாடுகிறார்கள்.

அவ்வாறு கண்ணனைப் புகழ்ந்து பாடி ஆடிடும் குரவைக் கூத்து மிகவும் பொருத்தமானதாகவும் சிறப்பு மிக்கதாகவும் போற்றத்தக்க வகையிலும் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

மேலும் ஆய்ச்சியர் குறவைக் கூத்து ஆடுகையில் பாண்டியனையும், சோழனையும், சேரனையும் திருமாலுக்கு ஒப்பிட்டுப் பாடுகிறார்கள். மன்னனைத் திருமாலுக்கு ஒப்பிட்டுப் பாடுவது அக்கால வழக்கமாக இருந்திருக்கிறது.

"திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே என்னும்
உருவுடை வண்ணங்கள் காணில்
உலகளந்தான் என்று துள்ளும்

கருவுடைத் தேவில்களெல்லாம்
கடல் வண்ணன் கோயிலே என்னும்
வெருவிலும் வீழ்விலும் ஓவாக்
கண்ணன் கழல்கள் விரும்புமே.

என்று நம்மாழ்வார், திருவாய்மொழியில் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

அவ்வழியில் இளங்கோவடிகளாரும் தனது பெருங்காப்பியத்தில்

''கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர் கோன் பூணாரம் தென்னர் கோன் மார்பினவே,
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுலமேய்த்துக்குருந் தொசித்தான் என்பரால்''

என்று பாண்டிய மன்னனையும்,

''பொன்னிமயக் கோட்டுப் புலிபொரித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் பதிற் புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந்திகிரிப் பொரு படையான் என்பரால்

என்று சோழ மன்னனையும்,

''முந்நீரினுள் புக்கு மூவாக்கடம் பெறிந்தான்
மன்னர் கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னன் கோச்சேன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில் தோளோச்சிக் கடல் கடந்தான் என்பரால்,

என்று சேர மன்னனையும் ஆயார்பாடிக் பெண்டிர் ஆய்ச்சியர் குரவையில் பாடுகிறார்கள்.

பொதிய மலைச் சந்தன மாலையும், கோர்க்கப்பட்ட கடல் முத்து மாலையும் இந்திரனுடைய பூணாகிய ஆரமும் பாண்டிய மன்னனின் மார்பில் விளங்குவன. இந்திரனையும் வென்று அவனுடைய பூணாரத்தைப் பூண்டு அப்பாண்டிய மன்னன் கோகுலத்தில் ஆனிரையை மேய்த்துக் குருத்த மரத்தினை முறித்த கண்ணன் என்று கூறுவார்கள் என்பதும்

பொன்மயமான இமயமலையின் உச்சியில் தன் புலிக் கொடியைப் பொறித்து இந்நில உலகை ஆள்பவன் வலுவான மதிலைக் கோட்டைப் பாதுகாப்புடைய புகார் நகரத்து வேந்தன் சோழன். அவரைப் போரில் வெல்வதற்குரிய சக்கரப் படையை உடைய திருமால் என்று கூறுவார்கள் எனவும்.

ஆழ்கடலில் புகுந்து அங்கு வலுவாக வேர் கொண்டிருந்த கடம்பு மரத்தை வெட்டியவன் வளம் மிக்க வஞ்சியிலே வாழும் சேர வேந்தனாகும். அவன்தான் மலை போன்ற தோள்களைச் செலுத்தி பாற்கடலைக் கடைந்த திருமாலாவான், என்றும், மூவேந்தர்களையும் திருமாலுக்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளதும் இந்து சமயத்தின் மன்னராட்சி மரபைச் சேர்ந்ததாகும்.

இனி ஆய்ச்சியர் குரவையில் முன்னிலைப் பரவலாகவும், படர்க்கைப்பரவலாகவும் இளங்கோவடிகளார் இயற்றியுள்ள பாடல் வரிகளுக்கு ஈடு இணையே இல்லை. அத்தனைச் சிறப்புக் கொண்டதாக அப்பாடல்கள் அமைந்துள்ளன. திருமாலின் புகழ்பாடும் அப்பாடல் வரிகள் நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. பக்திச் சுவை நிரம்பிய இப்பாடல்கள் ஆய்ச்சியர் குரவைப் பாசுரங்களுக்கு சிகரம் வைத்தாற்போல் ஒளிமிக்கதாக அமைந்துள்ளன. இப்பாடல்கள் சிலப்பதிகாரக் காப்பியத்தின் தனிச்சிறப்பு மிக்க பாடல்களாகும்.

## முன்னிலைப் பரவலாக

1. வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
**கடல்வண்ணன் பண்டொரு நாள்**
கடல் வயிறு கலக் கினையே
கலக்கியகை அசோதையார் கடை
கயிற்றால் கட்டுண்ட கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே!

2. அறுபொருள் இவனென்றே
அமரர்கணம் தொழுதேத்த
உறுபசி யொன்றின்றியே
உலகடைய உண்டனையே
உண்டவாய் களவினான்
உறிவெண்ணெய் உண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ
மருட்கைத்தே.

3. திரண்ட மரர் தொழுதேத்தும்
திருமால் நின் செங்கமல
இரண்டடியான் மூவுலகும்
இருள்தீர நடந்தனையே
நடந்த அடி பஞ்சவர்க்குத்
தூதாக நடந்த அடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ
மருட்கைத்தே!

இப்பாடல்களில் திருமாலின் கைகளின் சிறப்புகளையும் வாயின் மகிமையையும், திருவடிகளின் பெருமைகளையும் ஆயர்குல மக்கள் சிறப்பித்துக் பாடுவதைக் காண்கிறோம்.

கடலைப் போன்ற கரிய நிறத்தையுடைய கண்ணபெருமானே, நீ அன்று வடமேறு மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் வைத்து பாற்கடலின் நடுவயிரைக் கலக்கினாயே, அவ்வாறு கலக்கின அந்தக் கைகள் அசோதைப் பிராட்டியின் கடைக்கயிற்றால் கட்டுண்டகைகள் தானே, தாமரை மலரின் உந்தியை உடையவனே, இது என்ன மாயமோ வியப்பாக இருக்கிறதே, என்றும்

முழு முதற்பொருள் இவனே என்று அமரர் கூட்டம் எல்லாம் உன்னைத் தொழுது போற்றுகிறார்கள். நீயோ மிக்க பசியொன்றும் இல்லாமலேயே அனைத்து உலகங்களையும் உண்டாய். அவ்வாறு உலகை உண்ட வாயானது, உறியிலிருந்து களவாடி வெண்ணெ உண்ட வாயல்லவா? வளமான துளசி மாலையை உடையவனே இதென்ன மாயமோ, வியப்பாக உள்ளதே!

மற்றும்,

அமரர் எல்லாம் திரண்டு ஒன்று கூடி வணங்கிப் போற்றும் திருமாலே, உனது தாமரை மலர் போன்ற சிவந்த பாதங்களின் இரண்டு அடிகளால் மூன்று உலகங்களையும் இருள் தீர அளந்தாயே, அந்தத் திருவடிகள்தானே பாண்டவர் ஐவருக்கு தூதாக நடந்த திருவடிகள் என்ன மாயமோ வியப்பாக இருக்கிறதே என்றும் அதன் பொருளாகும்.

> "அறியாதார்க் கானாயனாகிப் போய் ஆய்ப்பாடி
> உறியார் நறுவெண்ணெய் உண்டுகந் தான் காணோடி
> உறியார் நறுவெண்ணெய் உண்டுகந்த பொன் வயிற்றுக்கு
> எறிநீருலகனைத்து மெய்தாதால், சாழலே

என்று திருமாலின் பொன் வயிற்றைப் பற்றியும்,

> "வண்ணக் கருங்குழல் ஆய்ச்சியால் மொத்துண்டு
> கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டான் காணேடீ
> கண்ணிக்குறுங் கயிற்றால் கட்டுண்டானாகிலும்
> எண்ணற்கரியன் இமை யோர்க்கும் சாழலே

என்று திருமாலின் கட்டுண்ட கைகளைப் பற்றியும்

> "கோஅதவேல் ஐவர்க்காய் மண்ணகலம் கூறிடுவான்
> தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான் காணேடீ
> தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான் ஆகிலும்
> ஓத நீர் வையகம் முன் உண்டுமிழ்ந்தான் சாழலே"

என்று திருமாலின் திருவடிகளைப் பற்றியும் திருமங்கை யாழ்வார் மிக அழகாகப் பாடியிருப்பதைக் காணலாம். ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் இங்குதிருமங்கையாழ்வாரின் பாடல்களுடன் ஒப்பிடத்தக்க கவைகளாக அமைந்துள்ளன.

படர்க்கைப் பரவலாக

1. மூவலகும் ஈரடியான் முறை நிரம்பா வகை
தாவிய சேவடி சேப்பத்தம்பி யொடும்கான் போந்து
சோவரணும் போர்முடியத்
தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே.

2. பெரியவனை மாயவனைப் பேருலகமெல்லாம்,
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே''

3. மடந்தாழ நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர் பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத்தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே

என்று திருமால் பெருமையைக் கேளாத செவிகள், காணாத கண்கள், பேசாத நாவு, செவியுமல்ல, கண்ணுமல்ல, நாவுமல்ல என்று ஆய்ச்சியர் குரவையில் பாடும் இந்தப் பாடல்கள் செவிக்கும் கண்ணுக்கும் வாய்க்கும் இனியவை. இப்பாடல்கள் ஆழ்வார்களின் சிறந்த பக்திப் பாடல்களுக்கு இணையாக அவைகளுக்கு மிக நெருக்கமான வந்துள்ளன.

''நீணாகம் சுற்றி நெடுவரை நட்டு ஆழ்கடலைப்
பேணான் கடைந்த முதம் கொண்டுகந்த
பெம்மானை
பூணாரமார் வனைப் புள்ளும் பொன் மலையை
காணாதார் கண்ணென்றும் கண் அல்ல
கண்டாமே!

''நீள்வான் குறளுருவாய் நின்றிரந்து மாவலி மண்
தாளால் அளவிட்ட தக்கணைக்கு மிக்கானை
தோளாத மாமணியைத் தொண்டர்கிளி யானை
கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே!

''தூயானைத் தூய மறையானை தென்னாலி
மேயானை மேவாளுயிருண்ட முதுண்ட
வாயானை மாலை வணங்கியவன் பெருமை
பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே

என்றெல்லாம் திருமங்கையாழ்வார் மனமுருகிப்பாடுவதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

## 15. ஊர்சூழ்வரிக் காதையில்

தனது கணவன் கள்வன் எனப் பொய்யாகப் பழி சுமத்தப் பட்டு கொல்லப் பட்டதைக் கேட்டுக் கண்ணகி கதறினாள். ஆவேசம் கொண்டாள். தனது மற்றொரு சிலம்பைக் கையில் எடுத்துக் கொண்டு நீதிகேட்க மதுரை நகருக்குள் தனது கணவன் கொலையுண்டு கிடக்கும் இடத்திற்குச் சென்றாள். மதுரை நகரின் வீதிகளின் வழியே பலவாறு புலம்பிக் கொண்டே அழுது கொண்டே சென்றாள். அப்போது அவள் மதுரை மக்களிடத் திலேயே நீதி கேட்டு வாதிட்டுக் கொண்டே செல்கிறாள். இக்காட்சியை இளங்கோவடிகள் அவலத்தின் உச்சமாக மிக அற்புதமாகச் சித்தரித்துக் காட்டுகிறார். ஒரு ஊரில், ஒரு நாட்டில், ஒரு ஆட்சியில் தவறும் அநீதியும் ஏற்படும்போது, அதைத்தட்டிக் கேட்கும் துணிவும் தவறுகளையும் அநீதியையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலும் வீரமும் பெறவேண்டும் என்பதை இந்தக்காட்சி உணர்த்துகிறது.

''நீதியில்லாத அரசனுடைய ஊரில் வாழ்கின்ற பத்தினிப் பெண்டிர், இச்சிலம்பு, அச்சிலம்பின் மற்றொன்று, எனது கணவன் கள்வன் அல்லன், எனது கால் சிலம்பின் விலையைக் கொடுக்காமல் அதை அபகரித்துக் கொள்ளும் பொருட்டு கள்வன் என்று பழிகூறி அவனைக் கொன்றார்களே, இஃதோர் அநியாயம்'' என்று ஆவேசத்துடன் குரல் கொடுத்துக் கொண்டே மதுரை வீதியில் செல்கிறாள்.

**நின்றிலள், நின்ற சிலம்பொன்று கையேந்தி**
**முறையில் அரசன்றன் ஊரிருந்து வாழும்**
**நிறையுடைப் பத்தினிப் பெண்டிர் காள் ஈதொன்று**
**பட்டேன் படாத துயரம் படுகொலை**
**உற்றேன் உறாதது உறுவனே ஈதொன்று**

**கள்வனோ அல்லன் கணவன் என்காற்சிலம்பு**
**கொள்ளும் விலை பொருட்டால் கொன்றாறே ஈதொன்று**
என்பது காப்பிய வரிகளாகும்.

இவ்வாறு நீதி கேட்டுச் சென்ற கண்ணகியைக் கண்டு மதுரை மக்கள், எல்லோரும் மனம் கலங்கி, வளையாத செங்கோல் வளைந்ததோ, தென்னவன் கொற்றம் சிதைந்ததோ, அவனது குடை வெம்மையை விளைவித்துவிட்டதோ, பொற்சிலம்பைக் கையிலேந்தி வரும் இவள் தெய்வத்தன்மை கொண்டவளோ, இதனால் மதுரைக்குத் தீங்கு எதுவும் நேருமோ'' என்பன சொல்லி வருந்தி அரசன் நீதி தவறியதால் அவனைப் பழிதூற்றி அம்மதுரை மக்களில் சிலர் கொல்லப்பட்டுக் கிடந்த அவள் கணவனை அவளுக்குக் காட்டினார்கள் என்று இளங்கோவடிகள் ஒரு அழுகுரல் நிறைந்த அவலக் காட்சியை நமக்குக் காட்டுகிறார்.

**''அல்லலுற்று ஆற்றாது அழுவாளைக் கண்டேங்கி**
**மல்லல் மதுரையா ரெல்லாருந்தாமயங்கிக்**
**களையாத துன்பமிக்காரிகைக்குக் காட்டி**
**வளையாத செங்கோல் வளைந்ததிது வென்கொல்**

**''மன்னவர் மன்னன்மதிக்குடை வாழ்வேந்தன்**
**தென்னவன் கொற்றம் சிதைந்த திது வென்கொல்**
**மண்குளிரச் செய்யு மறவேல் நெடுந்தகை**
**தண்குடை வெம்மை விளைந்த திது வென்கொல்?**
**செம்பொற் சிலம் பொன்று**
**கையேந்தி நம் பொருட்டால்**
**வம்பப் பெருந்தெய்வம் வந்ததிது வென் கொல்**

**ஐயரியுண்கண் அழுதேங்கி அரற்றுவாள்**
**தெய்வமுற்றாள் போலும் தகையளிது வென்கொல்**
**என்பன சொல்லி இணைந்தேங்கி யாற்றவும்**
**மன்பழிதூற்றும் குடியதே மாமதுரைக்**
**கம்பலைமாக்கள் கணவனைத் தாங்காட்ட**

என்று இளங்கோவடிகளின் காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

இங்கு கம்பலை மாக்கள் என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். கம்பலை என்றால் ஒலி

என்றும் ஆரவாரம் என்றும் பொருள் கூறப்படுகிறது. கூக்குரல் என்றும் கூறலாம். அது சாதாரணமாகக் கூறப்படும் பொருளாகும். ஆனால் அந்தச் சொல் கூறப்பட்டுள்ள சூழலைக் காணும் போது ஆத்திரம் பொங்கி எழுந்து உள்ளக்குமுரலை வெளிப்படுத்தும் மக்கள் என்றே நாம் பொருள் கொள்ள வேண்டும். ''கண்ணீரும் கம்பலையும்'' என்னும் சொல் ஆழ்ந்த தாங்க முடியாத துக்கத்தின் வெளிப்பாடாக இவ்வாறு கூறப்படுவதை இலக்கியங்களில் காண்கிறோம்.

இந்தக்காட்சியோடு, மற்றொரு காட்சியை இங்கு ஒப்பிடுவது தக்கதாக இருக்கும்.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் ''சூதில் பணயமாகக் கிடைத்த பாஞ்சாலியை, துரியோதனுடைய ஆணையின் பேரில் அவன் தம்பி துச்சாதனன் அத்தினாபுரத்து வீதி வழியே இழுத்துச் செல்கிறான். ''ஐயோ'' என்று பாஞ்சாலி கதறுகிறாள். அதை அந்த நகரத்து மக்கள் எல்லாம் பார்த்துக் கொண்டு நின்றார்கள். இந்தக் காட்சியை மகாகவி பாரதி கூறுகிறார்.

**ஆடி விலைப்பட்டதாதி நீ - உன்னை**
**ஆள்பவன் அண்ணன் சுயோதனன் - மன்னர்**
**கூடியிருக்கும் சபைதனிலே - உன்னைக்**
**கூட்டி வருக என்று மன்னவன் - சொல்ல**
**ஓடிவந்தேன் இது செய்தி காண்**
**துச்சாதனன் இதனைச் சொல்லினான்,**
**பாஞ்சாலி**
**''அச்சாகேள், மாதவிலக் காதலால் ஓராடை**
**தன்னிலிருக்கின்றேன், தார் வேந்தர் பொற்சபை முன்**
**என்னையழைத்தல் இயல்பில்லை அன்றியுமே**
**சோதரர் தம் தேவி தனைச் சூதில் - வசமாக்கி**
**ஆதரவு நீக்கியருமை குலைத்திடுதல்**
**மன்னர் குலத்து மரபோ காண்? அண்ணன் பால்**
**என்னிலைமை கூறிடுவாய், ஏகுக நீ'' என்றிட்டாள்**
**கக்கக்கவென்று கனைத்தே பெருமூடன்**

பக்கத்திலே வந்தேயப் பாஞ்சாலி கூந்தலினைக்
''கையினாற் பற்றிக்கரக ரெனத்தானிழுத்தான்,
''ஐயகோ! வென்றே யலறியுணர் வற்றுப்
பாண்டவர்தம் தேவி யவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம் பற்றி
முன்னிழுத்துச் சென்றான் - வழிநெடுக மொய்த்தவராய்
என்னகொடுமையிது வென்று பார்த்திருந்தார்.
ஊரவர் தங்கீழ்மை யுரைக்கும் தரமாமோ?
வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துக் தராதலத்தில் போக்கியே
பொன்னையவள் அந்தப்புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத்துணை யாமோ?

என்று பாரதி கூறுகிறார்.

இளங்கோவடிகளும் பாரதியும், முறையே கண்ணகியின் கூதரலைக் கேட்ட மதுரை மக்களையும் பாஞ்சாலியின் அழு குரலைக் கேட்ட அத்தினாபுரத்து மக்களையும் நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்.

களம் வேறு, காலம் வேறு, மதுரையின் மன்னராட்சி, ஆயினும் அது செங்கோல் ஆட்சியாக அறநெறியின் பாற்பட்ட ஆட்சியாக இருந்தது அத்தினாபுரத்து ஆட்சியும் மன்னராட்சிதான். ஆயினும் அது துரியோதனனுக்கும் அவனுடன் சேர்ந்த உடன் பிறந்த நூற்றுவருக்கும் கட்டுப்பட்டு இருந்தது. மதுரை மன்னன் அவசரப்பட்டு ஆராயாமல் தவறிழைத்து விட்டான். அரசியல் பிழைசெய்து விட்டான். அதனால் அநீதியாகக் கண்ணகியின் கணவன் கொல்லப்பட்ட கொடுமை நிகழ்ந்து விட்டது. அத்தினா புரத்திலே, திட்டமிட்டு கபடமாக சூதாட்டத்தை நடத்தி பாஞ்சாலியும் அவளது கணவன் மார்களும் அடிமைப் படுத்தப்பட்டிருந்தார்கள்.

இளங்கோவடிகள் காலத்தில் தமிழகம் சுதந்திரமான மூன்று நாடுகளாக மூவேந்தர்களின் வீரத்தின் சின்னங்களாக அறவழி ஆட்சிகளாக விளங்கிக் கொண்டிருந்தன. பாரதி காலத்திலோ, பாரதம் முழுவதுமே ஆங்கிலேய அன்னியக் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் அடிமைப்படுத்தப்பட்டு அல்லலுற்று அமுங்கி-யிருந்தது.

மதுரை மக்கள் மனம் குமுறி மன்னன் பிழையைக் கண்டித்தார்கள். கண்ணகி அரசியல் பிழை செய்த மன்னனை எதிர்த்து வழக்குரையாடி, தனது கற்பின் வலிமையாலும் மக்கள் துணையுடனும் மதுரையை எரித்தாள். பாஞ்சாலியோ, கண்ணன் கருணையால் தன் மானத்தைக்காத்து **''தர்மத்தின் வாழ்வதனை சூதுகவ்வும் இன்று கட்டுண்டோம் , பொருத்திருப்போம் காலம் வரும்''** என்று கட்டுண்டு பொருத்திருந்து உரிய காலத்திற்காகக் காத்திருந்தாள். சூழுரைத்து அவிழ்ந்த கூந்தலை முடிக்காமல் காலம் வரும் வரை காத்திருந்தாள். கண்ணகி, பாஞ்சாலி இருவரும் அநீதியையும் அக்கிரமத்தையும், அரசியல் பிழையையும் எதிர்த்து நின்றார்கள்.

இளங்கோவடிகளும் பாரதியும் நமது பாரத புண்ணிய பூமியின் மரபு வழியில் நின்று அநீதியையும் அக்கிரமத்தையும் அரசியல் பிழையையும் எதிர்க்க மக்களுக்கு தேவையான நெறிமுறைகளையும் வழிகாட்டுதல்களையும், நம்பிக்கையையும் தங்கள் காவியங்கள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இளங்கோவடிகள் மதுரை மக்களின் இயல்பான உள்ளக்குமுரலையும் நியாய உணர்வையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். பாரதியோ அத்தினாபுரத்து மக்களின் பெட்டைப் புலம்பலைக் கண்டித்தும் நிந்தித்தும், பாரத நாட்டு மக்களின் தன் மானத்தையும் வீரத்தையும், கடமையையும் தட்டி எழுப்பி விடும் வகையில் வேகமூட்டி அடிமைத்தனத்திற்கெதிரான விடுதலைப் போராட்டத்திற்குத் தூண்டுதல் செய்தார். இருபெரும் கவிஞர்-களும் காலத்திற்கேற்ற வகையிலும் காலத்தின் தேவைக் கேற்ற

வகையிலும் நெறிமுறைகளை மனித குலத்திற்கு எடுத்துக் கூறி வழிகாட்டியுள்ளார்கள்.

தொடர்ந்து கண்ணகி மதுரை மக்களிடம் மன்னன் செய்த தவறை எடுத்துக் கூறுவதை இளங்கோவடிகளார் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார்.

**"மன்னுறு துயர் செய்த மறவினை யறியாதேற்கு**
**என்னுறுவினை காணா இதுவென உரையாரோ"**
என்றும்,

**"பார்மிக பழி தூற்றப் பாண்டியன் தவறிழைப்ப,**
**ஈர்வதோர் வினைகாணா இதுவென உரையாரோ!**
எனவும்,

**"மன்பதை பழி தூற்ற மன்னவன் தவறிழைப்ப**
**உண்பதோர் வினைகானா இதுவென உரையாரோ!"**

என்றும் கேட்கிறாள். இவை வெறும் அழுகுரல் அல்ல. வெறும் ஒப்பாரியல்ல. ஆவேசக்குரல் என்றே கூற வேண்டம். இன்றும் தொடர்ந்து கூறுகிறாள், மதுரை மக்களிடம் கேட்கிறாள்.

**"சான்றோரும் உண்டு கொல், சான்றோரும் உண்டு கொல்**
**ஈன்றகுழவி எடுத்து வளர்க்குறூஉம்**
**சான்றோரும் உண்டு கொல்சான்றோரும் உண்டு கொல்"**

புகார் நகரம் ஈன்றெடுத்த, குழந்தையைப் போன்ற உள்ளங்கொண்ட கோவலன் தவழ்ந்து கொண்டு மதுரை நகர வாசலுக்கு வந்தபோது, அதை எடுத்துப் பாராட்டுகின்ற சான்றோர் இல்லாமல் என் கணவன் படுகொலை செய்யப்பட்டாரே, இந்த நகரில் நல்ல உள்ளம் படைத்த சான்றோரே இல்லையா என்று மதுரை மாநகர மக்களைக் கேட்கிறாள். இன்னும்,

''தெய்வமும் உண்டுகொல், தெய்வமும் உண்டு கொல்
வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டு கொல், தெய்வமும் உண்டு கொல்

என் கணவனைக் கூரிய வாளால் கொடுமையாக வெட்டிக் கொன்ற, கோல் வளைந்த, நீதி தவறிய மன்னவனின் கூடல் நகரில் தெய்வம் இருக்கிறதா என்று மதுரை மக்களைக் கேட்கிறாள்.

அத்துடன் கண்ணகி நிற்கவில்லை. ''உயிர் நீங்கிய கணவருடன் நானும் உடன் சென்றிருக்கலாம். ஆனால் நான் அதைச் செய்யமாட்டேன். எனது சினம் தணிவதற்குக் கொடிய பாண்டிய மன்னனைக் கண்டு இக்கொலைத் திறத்திற்குரிய காரணம் யாதெனக் கேட்பேன்'' என்று மதுரை மக்களிடம் கூறுகிறாள்.

''காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்,
தீவேந்தன் தனைக் கண்டித்திறங்கேட் பல்யானென்றாள்.

என்று கூறியெழுந்தாள்.

''நின்றாள், நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்சோர
நின்றாள், நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்தடையாச்
சென்றாள் அரசன் செழுங்கோயில் வாயில் முன்,

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

பொங்கி எழுந்த கண்ணீரையும் துடைத்துக் கொண்டு, ஆவேசம் கொண்டு அரசனது கோயில் வாசலுக்குச் சென்றாள்.

''தற்காத்துத் தற்கொண்டான் பேணித்தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்று வள்ளுவர்கூறும் இலக்கணத்திற் கேற்பத் தனது கணவன் கொல்லப்பட்டபோது. அதைக் கண்டு சோர்வடையாமல்

கலங்காமல், துவளாமல், கடலெனப் பொங்கி மக்களிடமும் தனது நியாயத்தை எடுத்துக் கூறிவிட்டு தவறிழைத்த மன்னனைத் தட்டிக்கேட்க அவன் கோயில் வாயிலை நோக்கி விரைந்து சென்றாள்.

இது இளங்கோவடிகள் காட்டியுள்ள வழியாகும். வாழ்க்கை நெறியாகும். இது பாரதப்பன்மையின் எடுத்துக் காட்டாகும்.

## 16. வழக்குரைகாதையில்

கண்ணகி பாண்டியனின் மன்றத்தில் நீதி கேட்டு வழக்காடிய காட்சி இலக்கியத்தில் தனிச்சிறப்பு மிக்க இணையற்ற ஒரு காட்சியாகும். தனது கணவன் கள்வன் அல்லன் என்று வாதாடி, ஆதாரம் காட்டி, நீதியை நிலை நாட்டுகிறாள். இந்த வழக்குரை விவரம் இன்றைய கால நமது சட்டக் கல்விக்கும் நீதிமுறைக்கும் கூட வழி காட்டுவதாகும்.

சூதிற் பணயமாகி விட்ட பாஞ்சாலியை சபைக்கு அழைத்துவர துரியோதனைன் ஆணையிட்டபோது உலகில் தர்மக்குழப்பம் ஏற்பட்டதாக பாரதி கூறுகிறார். அதர்மங்களும், அக்கிரமங்களும், அநீதிகளும், அரசியல் பிழைகளும் ஏற்படும்-போது அவை மேலோங்கும்போது உலகில் தர்மக்குழப்பம் ஏற்படுகிறது. அதைப்பற்றி பாரதி கூறுவதைக் கேளுங்கள்.

''தருமம் அழிவெய்தச் சத்தியமும் பொய்யாக
பெருமைத்தவங்கள் பெயர் கெட்டு மண்ணாக
வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய
மோன முனிவர் முறை கெட்டுத் தாமயங்க
வேதம் பொருளின்றி வெற்றுரையே யாகிவிட
நாதம் குலைந்து நடுமையின்றிப் பாழாக
''கந்தருவரெல்லாம் களையிழக்கச் சித்தர் முதல்
அந்தரத்து வாழ்வோரனைவேரும் பித்துறவே
நான்முகனார் நாவடைக்க, நாமகட்கு புத்திகெட
வான்முகிலைப் போன்றதொரு வண்ணத்
திருமாலும்
அறிதுயில் போய் மாற்றாங்கே ஆழ்ந்த
துயிலெய்திவிட
செறிதரு நற்சீரழகு செல்வமெலாம் தானாகும்
சீதேவி தன்வதனம் செம்மைபோய் காரடைய
மாதேவன் யோகம் மதிமயக்கமாகிவிட
வாலை, உமாதேவி, மாகாளி, வீறுடையாள்
மூல மாசக்தியொரு மூவிலை வேல்கையேற்றாள்,

> "ஆதிபராசக்தி - அவள் நெஞ்சம் வன்மையுற
> சோதிக்கதிர் விடுக்கும் சூரியனாம் தெய்
> வத்தின் முகத்தேயிருள்படர,

என்று பாரதி கூறுகிறார். இத்தகைய தர்மக் குழப்பம் ஏற்பட்ட சூழலில்,

பாஞ்சாலி, அத்தினாபுரத்து அரசசபைக்கு அழைக்கப்பட்ட போது, அழைக்க வந்த தேர்பாகனிடத்தில் அவள் முன்வைத்த வாதம்.

> "........... மாண் பிழந்த நாயகர்தாம்
> என்னை முன்னே கூறியிழந்தாரா? தம்மையே
> முன்னமிழந்து முடித்தென்னைத் தோற்றாரோ?

என்னும் கேள்வியாகும் தேர்ப்பாகன் பதில் கூற முடியாமல் திரும்பி விடுகிறான். அதன் பின்னர் வந்ததுச்ச ாதனனிடமும் வாதிடுகிறாள். ஆனால் அவனோ அவள் முன் வைத்த வாதங்க்ளைக் காது கொடுத்துக் கேட்கவில்லை.

முரட்டுத்தனமாகப் பலாத்காரமாகப் பாஞ்சாலி அரசர் சபைக்கு இழுத்துச் செல்லப்டுகிறாள். தெரு வழியாக அவள் இழுத்துச் செல்லப்பட்ட போது அத்தினாபுரத்து மக்கள் முன்பு குறிப்பிட்டதைப் போல நெட்டை மரமென வாய் பொத்தி நின்றார்கள்.

அரச சபையில் பாஞ்சாலி வாதிட்டாள். நீதி கேட்டாள். விதியோ கணவரே, எனத் தனது கணவர்களிடம் கேட்டாள். அவர்கள் தலை குனிந்து வாய்பேசமுடியாமல் இருந்தார்கள்.

சபையில் இருந்த கேள்வி பலவுடையோரிடம் கேடிலா நல்லிசையோரிடம், வேள்வித்தவம் புறிந்த வேதியாரிடம், மேலோர் பலரிடம் வாதிட்டாள்.

பிதா மகர் வீட்டுமனிடம் கேட்டாள். வாதிட்டாள் நீதி கிடைக்கவில்லை. கண்ணன் கருணையால் கட்டுண்டாள். பொருந்திருந்தாள். காலத்திற்காகக் காத்திருந்தாள். கடைசியில் தர்மம் வென்றது. பாஞ்சாலியின் சபதம் போர்க்களத்தில் வெற்றி பெற்றது.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலி முன்வைத்த வாதமும் வழக்குரையும் தனிச்சிறப்பு மிக்கதாகும். பாரதப் பெண்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

இளங்கோவடிகள் கண்ணகி, மதுரையில் நடந்த அநியாயத்தை மதுரை மக்களிடத்தில் எடுத்துரைத்தாள். பெண்டிரிடமும், சான்றோரிடமும், தெய்வத்திடமும் எடுத்து ரைத்தாள். அதன் பின்னர் நேராக அரசவைக்கு முன் அவளே சென்று தன் கணவன் கள்வனல்லன் என்று ஆதாரம் காட்டி வாதிட்டு வழக்குரைத்து வெற்றி கண்டாள்.. உண்மையை அறிந்த மன்னன் :

**''தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்**
**பொன்செய் கொல்லன் தன் சொற்கேட்ட**
**யானோ அரசன், யானே கள்வன்,**
**மன்பதை காக்கும் தென்புலம் காவல்**
**என் முதல் பிழைத்தது கெடுக வென் ஆயுளென**
**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே தென்னவன்''**

அத்துடன்
**''கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கிக்**
**கணவனை இழந்தோர்க்கு காட்டுவதில் லென்று**
**இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி''**
**என**

தென்னவனும் அவன் துணைவி கோப்பெருந்தேவியும் அரியணையிலிருந்து விழுந்து உயிர்விட்டனர்'' என்பதை சிலப்பதிகாரக் காப்பியச் செய்தி சிறப்பித்துக் கூறுகிறது.

இங்கு கண்ணகி நியாயத்தை நிலை நாட்டி வெற்றி பெறுகிறாள். அத்துடன் நிற்கவில்லை. மன்னனும் அரசியும் மாண்டதோடு நிற்கவில்லை. மதுரையை எரியூட்ட கண்ணகி முனைகிறாள். மதுரை நகர வீதிக்குச் செல்கிறாள்.

இக்காதையில், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதும் அல்லன செய்தார்க்கும் அறம் கூற்றாகும் என்பதும் காப்பியத்தின் மய்யகருத்தாகக் கூறப்பட்டிருக்கிறது.

# 17. வஞ்சின மாலைக்காதையில்

பாண்டிய மன்னன் வீழ்ந்தான். அவனுடன் சேர்ந்து கோப்பெரும் தேவியும் நடுங்கி வீழ்ந்தாள். கண்ணகி அத்துடன் நிற்கவில்லை. தனது கோபக்கனலால் மதுரை நகரையே எரிக்கத்துணிந்தாள்.

வழக்குரை காதையில் கண்ணகி பாண்டிய மன்னனிடம் தன்னுடைய வழக்கைக் கூறச்சென்றபொழுது, நீயாரம்மா என்று பாண்டிய மன்னன் கேட்க, புறாவிற்காகத் தன்னையே ஈய்ந்த நீதி நிறைந்த சிபியும், பசுவுக்கு நியாயம் வழங்கத் தனது மகனையே தேர்க்காலில் இட்ட மனுநீதிச் சோழனும் நீதி காத்த பூம்புகார் நகரமே எனது ஊர் என்றும், கண்ணகி எனது பெயர் என்றும் கூறினாள். சோழ மன்னர் பரம்பரையில் அரச நீதியின் வழுவா ஒழுக்கத்தை எடுத்துக் காட்ட அதை அறம்பிழைத்த பாண்டிய மன்னனுக்குச் சுட்டிக்காட்ட அவ்வாறு கூறினாள் எனக் கொள்ளலாம்.

''தேரா மன்னா செப்புவதுடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற்கடை மணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான் தன்
அரும்பெறற்புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப்புகார் என்பதியே....''

என்பது காப்பிய வரிகள்

இங்கு புகார் நகரை ஆண்ட மன்னர்களின் அரச நீதி அனைவருக்கும் பொதுவான எடுத்துக்காட்டாக அமைகிறது.

தென்னவனும் கோப்பெருந்தேவியும் தாங்கள் செய்த அரசியல் பிழையின் அதிர்ச்சியால் மாண்டபின்னரும், மதுரை

நகரின் கண் உள்ள தீயோரையும் சுட்டெரிக்கும் நோக்கில் மதுரை நகரை வலம் வந்து மக்களிடம் குரல் கொடுத்தாள்.

**கோவேந்தன் தேவி கொடுவினையாட்டியேன்**
**யாவும் தெரியா இயல்பினேனாயினும்**
**முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு**
**பிற்பகல் காண்குறூம் பெற்றியகாண் நற்பகலே...**

என்று முற்பகலில் ஒருவன் கேடு செய்தால் அதன் பலனாக அவன் பிற்பகலில் கேடு பெறுவான் என்னும் கருத்தைக் குறிப்பிட்டுக் கண்ணகி சினம் தணியாது செல்கிறாள்.

அடுத்து நல்லறம் நாட்டிய மன்னர் வாழ்ந்த புகார் நகரின் பெருமையை முந்திய காதையில் பாண்டிய மன்னன் முன்பாகக் கூறியதைப் போல கற்பிற் சிறந்த பெண்டிரைக் கொண்ட புகார் நகரப் பெருமகளைக் கூறி அத்தகைய பெண்டிர் வழியில் வந்த நான் என் கற்பின் வலிமையைக் காட்டுவேன் என்று சூளுரைக்கிறாள்.

காப்பியத்தில் கண்ணகி கூறும் சோழ நாட்டுப்பத்தினிப் பெண்களின் வரலாறுகளில்,

ஒன்று, சோழ நாட்டில் இருந்த ஒரு கற்புடை மங்கைக்கு வன்னிய மரமும் மடைப்பள்ளியும் சான்று கூறியதாக வரலாறு, **''நற்பகலே வன்னியமரமும் மடைப்பளியுஞ் சான்றாக முன்னிறுத்திக் காட்டிய பொய்குழலாள்''** என்று கூறும் காப்பிய வரிகளின் கதையாகும். இக்கதை இன்னும் சோழ நாட்டில் உள்ள திரும்புறம் பயத்திலும் திருமருகலிலும் கூறப்படுகிறது. திருப்புறம் பயத்தில் கோயில் கொண்டுள்ள இறைவனுக்கு ''சாட்சிநாதர்'' என்றும் பெயரும் உண்டென்பர்.

இவ்வரலாறு திருவிளையாடல் புராணத்தில் கூறப்பட்டிருப்பதையும் காணலாம். திருத்தொண்டர் புராணத்-

திலும் இந்நிகழச்ச்சி திருமருகலில் நிகழ்ந்ததாகவும் கூறப்பட்டிருப் பதையும் காண்கிறோம்.

இரண்டாவது, ''பொன்னிக் கரையின் மணற்பாவை நின் கணவனாம் என்று உரை செய்த மாத ரொடும் போகாள், திரைவந்து அழியாது சூழ்போக வாங்குந்தி நின்ற வரியாள் அகலல்குல் மாதர்'' என்னும் வரலாற்றையும் கண்ணகி கூறிக்காட்டுகிறாள்.

மூன்றாவது ''உரைசான்ற மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக் கோன் தன்னைப் புனல் கொள்ளத்தாள் புனலின் பின் சென்று கன்னவில் தோளாயோ வென்னக் கடல்வந்து முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீ இக்கொண்டு பொன்னங் கொடி போலப் போதந்தாள்'' என்னும் பெருமைமிக்க சோழ மன்னன் கரிகால் பெருவளத்தான் மகள் ஆதி மந்தியின் கற்பின் சிறப்பை எடுத்துக்காட்டி கண்ணகி பேசுகிறாள்.

நான்காவதாக ''மன்னி மணல் மலி பூங்கானல் வருங்கலன்கள் நோக்கிக் கணவன் வரக்கல்லுருவம் நீத்தாள்'' என்னும் கற்புடைப் பெண்டிரின் பெருமையை எடுத்துக் கூறுகிறாள்.

ஐந்தாவதாக ''இணையாய மாற்றாள் குழவி விழத்தங்குழவியுங்கிணற்று வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள்'' என்னும் கதையையும்,

ஆறாவதாக ''வேற்றொருவன் நீள் நோக்கங்கண்டு, நிறைமதி வாள் முகத்தைத் தானோர் குரங்கு முகமாகென்று போன கொழு நன்வரவே குரங்கு முகம் நீத்த பழுமணி அல்குல் பூம்பாவை'' என்னும் சிறப்பு மிக்க கதையையும்,

ஏழாவதாக,
''விழுமிய,
பெண்ணறி வென்பது, பேதமைத்தே என்றுரைத்த

நுண்ணறிவினோர் நோக்கம் நோக்காதே எண்ணிலேன்
வண்டல் அயல் விடத்தியானோர் மகள் பெற்றால்,
ஒண்டோடி நீயோர் மகற்பெறிற் கொண்ட
கொழுநன் அவளுக்கென்றியானுரைத்த மாற்றம்,
கெழுமி அவளுரைப்பக் கேட்ட விழுமத்தால்
சிந்தைநோய் கூறும் திருவிலேற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய் முந்தியோர்,
கோடிக் கலிங்கம் உடுத்துக்குழல் கட்டி
நீடித்தலையை வணங்கித்தலை சுமந்த
ஆடகடிப்பூம்பாவை'' என்னும் வரலாற்றையும் கூறி
''அவள் போல்வார் நீடிய
மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கியானும் மோர் பத்தினியாமாகில்
ஒட்டேன்அர சோ டொழிப்பேன் மதுரையும்''

என்று சூளுரைத்து மதுரையை வலம் வருகிறாள் என்று சிலப்பதிகாரக் காப்பியம் கூறுகிறது.

இங்கு கற்பின் பெருமை, பத்தினிப் பெண்டிரின் உறுதி, ஆற்றல் பற்றி வலியுறுத்திக் கூறப்படுகிறது. இதுசிலப்பதிகாரக் காப்பியம் கூறும் முக்கிய நெறி முறைகளில் ஒன்றாகும்.

கண்ணகி இவ்வாறு பூம்புகார் நகரின் பத்தினிப் பெண்டிரின் வரலாறுகளைக் கூறித் தன்னையும் அவ்வரிசையில் சேர்த்து, நானும் அத்தகைய கற்புடைய மகள் என்பது உண்மையானால் **''மன்னனோடு மதுரை நகரையும் அழிப்பேன்''** என்று கூறி,

''நான் மாடக்கூடல் மகளிரும் மைந்தரும்
வானக்கடவுளரும், மாதவரும் கேட்டீமின்''

என்று மதுரை நகரில் உள்ள பெண்டிர், ஆடவர், கடவுளர், தவமுடைய முனிவர் ஆகியோருக்கு எடுத்துக்கூறி,

அந்தணர், அறவோர், ஆநிரை, கற்புடை மகளிர், முதியோர், குழந்தைகள் ஆகியோர் நீங்கலாகத் தீயோர் பக்கமே

சேர்வாயாக என்று அக்கினிக்கு ஆணையிட்டு மதுரை நகரை தீக்கரையாக்கினாள் என்பது சிலப்பதிகாரப் பெருங்காப்பியம் கூறும் செய்தியாகும்.

''பார்ப்பார் அறவோர், பசுப் பத்தினிப் பெண்டிர்,
மூத்தோர், குழவி, எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய
''பொற்றொடி ஏவப்புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்''
என்பது காப்பிய வரிகளாகும்.

''எப்போதெப்போது தர்மம் அழிந்து போய்
அதர்மம் எழுச்சி பெறுமோ அப்போது நான்
என்னை பிறப்பித்துக் கொள்கிறேன் (4-7)
''நல்லோரைக்காக்கவும் தீயன செய்
வோரை, அழிக்கவும், அறத்தை நிலை
நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்
கிறேன்''. (4-8)
என்னும் கீதா வாக்கியங்களும்,

''அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்து, உக நூறித்தக்கோர் இடர் துடைத்து ஏக, ஈண்டுப்
பிறந்தனன், தன் பொன் பாதம் ஓதுவாற் பிறப்பு அறுப்பார்

என்னும் கம்பரது சிறந்த கவிதையும் தனிப்பெரும் கடவுளான திருமாலின் அவதார மகிமையைக் கூறுவதாகும். இதில் அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்னும் உயரிய நீதி வலியுறுத்தப்படுவதாகும்.

அரசியல் பிழைத்த மன்னனை வீழ்த்தி அதற்குக் காரணமாக இருந்த தீயோரையும் கண்ணகி தனது கற்பின் திறத்தால் எரித்த கதை மூலம் பாரதக் கலாச்சாரத்தின் அடிப்படையான நீதி போதனை இங்கு காட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

## 18. அழற்படுகாதையில்

கண்ணகியின் ஏவல்பெற்ற தீக்கடவுளின் எரியின் கூறுவெளிப்பட்டது. நகரைக் காக்கும் காவல் தெய்வங்கள் கோட்டை வாயில்களைக் காவாதொழிந்தன.

''ஏவல் தெய்வத்தெரி முகம் திறந்தது
காவல் தெய்வங்கடை முகம் அடைந்தன''

என்று இளங்கோவடிகள் கூறுகிறார்.

காவல் தெய்வங்கள் என்பது "இந்திரன், இயமன், வருணன், சோமன்'' என்று உரையாசிரியங்கள் கூறுகிறார்கள். இவையெல்லாம் இந்து சமயம் கூறும் வேதகால தெய்வங்களாகும்.

நகரைப் தீப்பற்றிக் கொள்ள நால்வகை பூதங்களும் நகரைவிட்டு வெளியேறின என்று காப்பிய வரிகள் கூறுகின்றன.

''கோமுறை பிழைத்த நாளில் இந்நகர்
தீ முறை உண்பதோர் திறனுண்டென்ப
தாமுறையாக அறிந்தன மாதலின்
யாமுறைபோவ தியல் பன்றோ வெனக்
கொங்கை குறித்த கொற்ற நங்கைமுன்
நாற்பாற் பூதமும் பாற்பாற் பெயரக்''

என்பது காப்பியப் பாடல் வரிகளாகும்.

நமது மன்னன் செங்கோன்மையில் தவறின நாளிலேயே இம்மதுரை மாநகர் தீப்பற்றி எரியும் என்பதை நெறிமுறையென முன்பே நாம் அறிந்துள்ளோம். ஆதலால் நாமும் நமது காவலை விட்டுப் போவது இயல்பேயாகும் என்று தனது கொங்கையாலே நகரத்தை எரியூட்டிய நங்கையின் முன்பாகவே, நால்வகை பூதங்களாகிய நாம் நகர்க்காவலை விட்டு வெளியேறி விடுவோம்

என்று தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்றுவிட்டன என்பது காப்பியம் கூறும் செய்தியாகும்.

நால்வகை பூதங்கள் என்பது நால்வகை வருண பூதங்கள் என்றும் அவை ஆதிபுதம் அல்லது அந்தண பூதம், அரச பூதம், வணிக பூதம், வேளாண்பூதம் என்றும் சில உரையாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

நால்வகை வர்ணக் குறிப்புக்கு,
**''குணத்திற்கும் செய்கைக்கும் தக்கபடி**
**நான் நான்குவர்ணங்களை சமைத்தேன்**
**செய்கையற்றவனும், அழிவற்றவனுமா**
**கிய யானே அவற்றைச் செய்தேன் என்**
**று உணர்'' (4-13)** என்றும்

**''பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்**
**திரர் இவர்களுடைய தொழில்கள் அவரவ**
**ரின் இயல்பில் விளையும் குணங்களின் படி**
**வகுப்புற்றனவாம் (18-41)**

என்றும் கீதா வாக்கியங்கள் குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கனவாகும்.

**''நத்திலப் பைம்பூண் நிலாத்திகழ் அவிரொளித்**
**முத்தீவாழ்க்கை முறைமையின் வழாஅ**
**வேத முதல்வன் வேள்விக்கருவியோடு**
**ஆதிப் பூதத்து அதிபதிக் கடவுளும்''**

என்னும் சிலப்பதிகார வரிகளுக்கு ''பசுமையான முத்து வடமணிந்த நிலவு போல் விளங்கும் மிக்க ஒளியினையுடைய நான்முகன் யாகத்திற்கென உரைத்த உறுப்புகளோடே முத்தீ வாழ்க்கையின் இயல் புகளினின்றும் பிழையாத தலைமை யமைந்த ஆதி பூதமாகிய கடவுளும் என்று உரையாசிரியர் கூறுகிறார். இதில் ஆதி பூதத்து அதிபதிக்கடவுளும் என்பதற்கு

முதல் வகுப்பு பூதங்களாகிய பார்ப்பன பூதங்களுக்குத் தலைமையாய் உடைய பார்ப்பன பூதக் கடவுளும்'' என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இரண்டாவதாக :

''பவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்
ஆழ்கடல் ஞால மாள்வோன் தன்னின்
முரை சொடு வெண்குடை கவரி நெடுங்கொடி
உரைசாலங்குசம் வடிவேல் வடிகயிறு
என இவை பிடித்த கையினனாகி
எண்ணருஞ் சிறப்பின் மன்னரை யோட்டி
மண்ணகம் கொண்டு செங்கோ லோச்சிக்
கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்டு
நடும்புகழ் வளர்த்து நானிலம் புரக்கும்,
உரைசால் சிறப்பின் நெடியோன் அன்ன
அரைச பூதத்து அருந்திறற் கடவுளும்''

என்று அரச பூதக் கடவுளைப் பற்றி இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள்.

மூன்றாவதாக :

''செந்நிறப் பசும்பொன் புரையும் மேனியன்
மன்னிய சிறப்பின் மறவேல் மன்னவர்
அரைசு முடியொழிய அமைந்த பூணினன்
வாணிக மரபின் நீள் நிலம் ஓம்பி
நாஞ்சிலும் துலாமும் ஏந்திய கையினன்

உழவு தொழில் உதவும் பழுதில் வாழ்க்கைக்
கிழவன் என்போன் கிளரொளிச் சென்னியின்,
இளம்பிறை சூடிய இறைவன் வடிவினோர்,
விளங்கொளி பூத வியன் பெருங்கடவுளும்'',

என்று வணிக பட்சக் கடவுளைப் பற்றிச் சிறப்பாக அடிகளார் குறிப்பிடுகிறார்.

நான்காவதாக :

"மண்ணுறுதிருமணி புரையு மேனியன்
ஒண்ணிறக் காழகஞ் சேர்ந்த உடையினன்
ஆடற்கமைந்த அவற்றொடு பொருந்திப்
பாடற்கமைந்த பல துறை போகிக்
கலி கெழு கூடற் பலிபெறு பூதத்
தலைவன் என்போன் தானும்"

என்று வேளாண் பூதத்தைக் குறிப்பிட்டும் இவ்வாறு நால்வகை பூதங்களின் கடவுளர்களும் பற்றி எரியும் மதுரை மாநகரைவிட்டு வெளியேறினார்கள் என்று காப்பியம் குறிப்பிடுகிறது. இங்கு நால்வகை வர்ண மக்களின் நிறம் தொழில், கருவிகள் பற்றிய விவரங்களை இளங்கோவடிகள் விரிவாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். இதே சமயம் ஏற்ற தாழ்வுகள் இல்லாமல் அனைத்தையும் சமரசமாகவும் சமநிலையிலுமே அடிகளார் குறிப்பிடுவதைக் காண்கிறோம். நகரை எரித்து முடித்து பெருமூச்சுடன் கண்ணகி நின்றபோது அந்த வெப்பத்தைத் தாங்க முடியாமல் மதுராபதி என்னும் தேவதை வந்து கண்ணகி முன் தோன்றினாள். அதை,

"மாமகளும் நாமகளும் மாமயிடற் செற்றுகந்த
கோமகளும் தாம்படைத்த கொற்றத்தாள் - நாம்
முதிரா முலை குறைத்தாள் முன்னரே வந்தாள்
மதுராபதி என்னும் மாது"

என்று இக்காதையின் முடிவாக வரும் வெண்பா குறிப்பிடுகிறது.

# 19. கட்டுரைக் காதையில்

இக்காதையின் தொடக்கத்தில் மதுராபதியின் வடிவத்தை அடிகளார் விளக்குகிறார். உமையொரு பாகத்தின் இறை வடிவமாக அதை நமக்குக் காட்டுகிறார்.

''சடையும் பிறையும் தாழ்ந்த சென்னிக்
குவளை உண்கண் தவள வாள் முகத்தி
கடையெயிறு அரும்பிய பவளச் செவ்வாய்த்தி
இடைநிலா விரிந்த நித்தில நகைத்தி
இடமருங்கிருண்ட நீலமாயினும்
வலமருங்கு பொன்னிறம் புரையு மேனியள்
இடக்கை பொலம்பூந்தா மரை யேந்தினும்
வலக்கை அம்சுடர்க் கொடுவாள் பிடித்தோள்
வலக்கால் புனை கழல் கட்டினும் இடக்கால்
தனிச்சிலம்பு அரற்றுந்தகை மையள் பனித்துறைக்
கொற்கைக் கொண்கன் குமரித்துறைவன்
பொற்கோட்டுவரம்பன் பொதியிற் பொருப்பன்
குல முதற் கிழத்தி.......''

என்பது இளங்கோவடிகள் குறிப்பிடுவதாகும்.

சடையையும் அதனிடத்தே தங்கயிளம் பிறையையும் உடைய தலையினையையும் கருங்குவளை மலர் போன்ற மையுண்ட கண்களையுடைய, வெண்ணிறமான ஒளிபொருந்திய திருமுகத்தையும் உடையவளும், கடை வாயின் கண் வெளிப்பட்டுத் தோன்றுகின்ற எயிற்றினையுடைய பவளம் போன்று சிவந்த வாயையுடையவளும், அவ்வாயினிடத்தே நிலாவொளி விரிந்து திகழுகின்ற முத்துக் கோர்வை போன்ற பல்வரிசையினையுடையவளும், தனது இடப்பாகம் இருண்ட நீலமணி போன்ற நிறமுடைய திருப்பினும், வலப் பாகம் பொன்னினது நிறத்தையொக்கும் நிறமுடைய திருமேனியை உடையவளும், தனது இடக்கையின் கண் அழகிய ஒளியை யுடைய மழுவை ஏந்தியவளும் தனது வலக் காலிடத்தே அழகிய

வீரக்கழலை அணிந்திருந்தாளேனும் இடக்காலிடத்தே ஒப்பற்ற சிலம்பு கிடந்து ஒலிக்கின்ற தன்மையுடைவளும் ஆகிய இம்மதுராபதி தானும் சிறந்த முத்துக்களையுடைய துறையினுடைய கொற்கைப் பட்டினத்தின் தலைவனும், தென்குமரி என்னும் செந்தமிழ்நாட்டு தெற்கெல்லையாகிய கடல் துறையை உடையவனும் பொன்னாகிய குவட்டையுடைய இமயமலையினைத் தனதாட்சிக்கு வடவெல்லையாக உடையவனும், கன்னித்தமிழ் தோன்றிய பொதிகை மலையை- யுடையவனும் ஆகிய பாண்டிய மன்னனுடைய குலமாகிய இறைக்குலத்தை அது தோன்றிய காலம் தொடங்கிக் காத்து வருகின்ற உரிமை உடையவள் என்று மேற்கூறிய பாடல் வரிகளுக்கு உரையாசிரியர்கள் உரை கூறியுள்ளார்கள்.

இந்த விவரத்தைப் பார்க்கும்போது மதுராபதியென்னும் இத்தெய்வத்தின் உருவம் அம்மையப்பனாக உள்ள இறைவனுடைய திருவுருவம் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. இந்தத் தெய்வமே பிற்றைக் காலத்தில் அன்னை மீனாட்சியாகவும் சொக்கலிங்கப் பெருமானாகவும் கொள்ளப்பட்டது என்றும், அக் காலத்தில் மதுராபதி என்னும் பெயரோடு பாண்டிய மன்னர்களது குல தெய்வமாகவும் மதுரை நகரின் காவல் தெய்வமாகவும் கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இனி இக்காதையில்மதுராபதி என்னும் இக்காவல் தெய்வம், கண்ணகியைப்பின் தொடர்ந்து அவளை சாந்தப்படுத்தி பாண்டிய மன்னர்களின் பெருமைகள் பலவற்றையும் எடுத்துக் கூறி கண்ணகிக்கு ஏற்பட்ட இந்த நிலை ஊழ்வினை காரணமாகும் என்பதையும் நினைவுபடுத்தி **"நீ இன்றிலிருந்து பதினான் காம் நாளின் பகல் சென்றபின் நின் கணவனைக் கண்டு சேர்வாய்"** என்று கூறி அனுப்பி வைக்கிறாள்.

பாண்டிய மன்னர்களின் சிறப்புகளையும் வரலாற்றுப் பண்பாடுகளையும் பற்றிக் கூறுகையில் மதுராபதியின் கூற்றாக இளங்கோவடிகள் சிறந்த பல கருத்துகளையும் நிகழ்ச்சிகளையும் கூறுகிறார்.

பாண்டிய நெடுஞ்செழியனுடைய நல்லாட்சியைப் பற்றிக் கூறும்போது

''காதின்
மறை நாவோசையல்லதியாவதும்
மணி நாவோசை கேட்டது மிலனே
அடிதொழு திறைஞ்சாமன்னரல்லது
குடி பழி தூற்றும் கோலனும்மல்லன்''

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

சோழ நாட்டைச் சேர்ந்த பராசரன் என்னும் அந்தணன், சேர நாட்டின் பெரும் புகழ் கேள்வியுற்று அங்கு சென்று முத்தீ வளர்த்து, நான்மறை ஓதி, ஐம்பெரும் வேள்விகள் செய்து அறு தொழில் வகுத்து பார்ப்பன வாகை சூடிய செய்தியை இளங்கோவடிகள் சிறப்புறக் கூறுகிறார்.

''தாங்காவிளையுள் நன்னாடதனுள்
வலவைப் பார்ப்பான் பராசரன் என்போன்
குலவு வேற் சேரன் கொடைத்திறங்கேட்டு
வண்டதமிழ் மறையோருக்கு வானுரை கொடுத்த

திண்டிறல் நெடுவேற் சேரலற் காண் கெனக்
காடும் நாடும் ஊரும் போகி
நீடுநிலை மலையம் பிற்படச் சென்றாங்கு
ஒன்று புரி கொள்கை இரு பிறப்பாளர்
முத்தீச் செல்வத்து நான் மறைமுற்றி
ஐம்பெரும் வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர் பெறு முறைவகுக்க
நாவலங்கொண்டு நண்ணாரோட்டிப்
பார்ப்பனவாகை சூடி ஏற்புற
நல்கலங் கொண்டு தன் பதிப் பெயர் வோன்''

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

இங்கு அந்தணர்களுக்குரிய ஒரு குறிக்கோள். இரு பிறப்பு, முத்தீ, நான்மறை, ஐம்பெருவேள்வி, அறுதொழில் ஆகியவை பற்றி சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியது.

குறிக்கோள் ஒன்று என்பது ஒன்று புரிகொள்கை அதாவது வீடு பேற்றினை அடைவது, இரு பிறப்பு என்பது உபநயனத்திற்கு முன் ஒரு பிறவி அதற்குப் பின் இரண்டாவது பிறவி என்று அந்தணர்களை இருபிறப்பாளர்கள் என்று குறிப்பிடுவார்கள். முத்தீ என்பது வேள்விக்குரிய ஆகவனீயம், காருக பத்தியம், தக்கிணாக்கினி ஆகியவை, நான்மறை என்பது ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்பது, ஐம்பெரும் வேள்வி யென்பது கடவுள் வேள்வி, பிரம வேள்வி, பூதவேள்வி, மாநிட வேள்வி, தென் புலத்தார் வேள்வி ஆகியவை என்றும், அறுதொழில் என்பது ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல் ஏற்றல் ஆகியவை என்று உரையாசிரியர்கள் விளக்குவர்.

இவையனைத்தும், வைதீக இந்து சமய நெறிகளுக்குரியன என்பதை அறிவோம்.

முத்தீ, நால்வேதம், ஐவேள்வி, ஆறங்கம் ஆகியவை பற்றி பல இடங்களிலும், ஆழ்வார்கள், தங்கள் பாசுரங்களில் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

**''சிறையார் உவணப்புள் ஒன்றேறியன்று**
**திசைநான்கும் நான்கும் இரிய செருவில்**
**கறையார் நெடுவேல் அரக்கர் மடியக்**
**கடல்சூழ் இலங்கை கடந்தான் இடம்தான்**
**முறையால் வளர்க்கின்ற முத்தீயர், நால்வேதர்**
**ஐவேள்வி, யாறங்கர், எழினிசை யோர்**
**மறையோர் வணங்கப்புக ழெய்தும் நாங்கூர்**
**மணிமாடக் கோயில் - வணங்கென்மனனே!**

என்றும் இன்னும் பல பாடல்களிலும் பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம்.

சேரநாடு சென்று திரும்பிய சோழநாட்டுப் பெரு மறையோன் பராசரன் என்போன் பாண்டிய நாட்டில் உள்ள திருத்தங்கல் என்னும் கிராமத்திற்கு வந்து அங்கு அந்தணர் வாழும் பகுதியில் உள்ள ஒரு அரச மரத்தடியில் அமர்ந்திருந்தபோது, அங்கு விளையாடிக் கொண்டிருந்த அந்தணச் சிறுவர்களை நோக்கி ''என்னோடு வேதங்களை ஓதி என்னுடைய பண்டங்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூற அப்பராசரனுக்கு இணையாக அந்தச் சிறுவர்களின் ஒருவனான தக்கிணாமூர்த்தி என்பவன் வேதங்களை ஓதி பராசரனுடைய பரிசுப் பொருள்களைப் பெற்றான் என்னும் செய்தியைப் பாண்டிய நாட்டு அந்தணர் களின் மறையறிவை வெளிப்படுத்தும் வகையில் இளங்கோ வடிகள் மிகவும சிறப்பாகக்கூறுகிறார்.

மதுரைக்கு ஏற்பட்ட சாபத்தின் பகுதியாக இவ்வரலாற்றுக்-கதை கூறப்பட்டபோதிலும் அதில் மறையோர் பெருமையும் கல்வி அறிவும் அரச நீதியும் பற்றி சில நுணுக்கங்கள் கூறப்பட்டிருப்பது நாம் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

**செங்கோல் தென்னன் திருந்து தொழில் மறையவர்**
**தங்கால் என்பதூரே அவ்வூர்ப்ப்**
**பாசிலை பொதுளிய போதி மன்றத்துத்**
**தண்டே குண்டிகை வெண்குடைகாட்டம்**
**பண்டச் சிறுபொதி பாதக்காப்பொடு**
**களைந்தனன், இருப்போன்.......................**
**குழலும் குடுமியும் மழலைச் செவ்வாய்த்**
**தளர்நடை யாயத்துத் தமர் முதல் நீங்கி**
**விளையாடு சிறா அரெல்லாம் சூழ்தரக்**
**குண்டப்பார்ப்பீர் என்னோடோதியென்**
**பண்டச்சிறு பொதிகொண்டு போமின் எனச்**
**சீர்த்தகு சிறப்பின் வார்த்திகள் புதல்வன்**
**ஆலமர்ச் செல்வன் பெயர்கொண்டு வளர்ந்தோன்**
**பால்நாறு செவ்வாய்ப்படியோர் முன்னர்த்**
**தளர்நாவாயினும் மறைவிளி வழா அது**
**உளமலி உவகை யோடொப்ப வோதத்**

தக்கிணன் தன்னை மிக்கோன் வியந்து
முத்தப்பூணூல் அத்தகு புனைகலம்
கடகம் தோட்டொடு கையுறை ஈத்துத்
தன்பதி பெயர்ந்தனனாக........................''

என்று சிலப்பதிகாரக் காப்பிய வரிகள் கூறுகின்றன.

பராசரன் அளித்த சிறந்த அணிகலன்களைப் பெற்ற தக்கிணாமூர்த்தி அவைகளை அணிந்து கொண்டிருந்தைக் கண்ட அரசனுடைய காவலர்கள், இவன் புதையலைக் கவர்ந்த பார்ப்பான் எனக்கருதி அரச நீதி தவறி அவனுடைய தந்தையாகிய வார்த்திகனைப் பிடித்து கள்வரை இடும் சிறையில் இட்டு அடைத்து விட்டனர். இதைக் கேள்வியுற்ற வார்த்திகன் மனைவி கார்த்திகை என்பவள் அலரிப் புடைத்து துர்க்கயையின் கோயிலில் போய் முறையிட, குற்றமற்ற அக்கோயிற்கண் செயற்குரிய பூசைத்தொழில் எல்லாம் முற்றுப் பெற்று அதனுடைய கதவுகள் திறக்க முடியாமல் அடைத்துக் கொண்டன எனவும், மன்னன், அதன் காரணத்தை அறிந்து அறிவில்லாத காவலர்களால் அரச நீதி தவறியது என வருந்தி, வார்த்திகனை விடுவித்து, தவறைப் பெருத்தருளுமாறு வேண்டி அந்த அந்தணனுக்கு அவனது ஊரான திருத்தங்காலையும், அத்துடன் வயலூர் என்னும் செழிப்பான ஊரையும் தானமாகக் கொடுத்து வார்த்திகனுடைய வருத்தத்தைத் தணித்தனர் என்றும் அதன் பின்னர் கூடல் நகர மக்கள் அனைவரும் கேட்கும் வண்ணம் கொற்றவை கோயிலின் கதவுகள் பெரும் சத்தத்துடன் திறந்தன வென்றும் சிலப்பதிகாரக் காப்பியக் கதை கூறுகிறது.

''...................................... நன்கலன்
புனைபவும் பூண்பவும் பொறாஅராகி
வார்த்திகன் தன்னைக் காத்தன ரோம்பிக்
கோத்தொழில் இளையவர் கோமுறை அன்றிப்
படுபொருள் வெளவிய பார்ப்பான் இவனென
இடுசிறைக் கோட்டத்திட்டனராக
வார்த்திகள் மனைவி கார்த்திகை என்போள்

அலந்தனள், ஏங்கி அழுதனள் நிலத்தில்
புலந்தனள், புரண்டனள், பொங்கினள் அதுகண்டு
மையறு சிறப்பின் ஐயைகோயில்
செய்வினைக் கதவம் திறவாதாகலின்
திறவாதடைத்த திண்ணிடலைக்கதவம்
மறவேல் மன்னவன் கேட்டனன் மயங்கிக்
''கொடுங்கோல் உண்டு கொல் கொற்றவைக்குற்ற
இடும்பையாவதும் அறிந்தீ மின்னென,
ஏவல் இளையவர் காவலர் தொழுது
வார்த்தி கற்கொணர்ந்த வாய்மொழியுணரப்ப
நீர்த்தன்றிது வென நெடு மொழி கூறி
அறியா மாக்களின் முறைநிலை திரிந்தவென்
இறைமுறை பிழைத்தது பொருத்தல் நுங்கடனெனத்
தடம் புணற்கழனித்தங்கால் தன்னுடன்
மடங்கா விளையுள் வயலூர் நல்கிக்
கார்த்திகைக் கணவன் வார்த்திகன் முன்னர்
இருநில மடந்தைகக்குத் திருமார்பு நல்கியவள்
தணியா வேட்கையும் சிறிது தணிந்தனனே
நிலைகெழுகூடல் நீள்நெடுமறுகின்
மலை புரை மாடம் எங்கணும் கேட்பக்
கலையமர் செல்வி கதவம் திறந்தது''

என்று காப்பிய வரிகள் விவரிக்கின்றன.

இந்தக் கதைப்பகுதியில் சில அறநெறிகள். அரச நீதிமுறை முதலியன பற்றிய பல செய்திகள் கிடைக்கின்றன.

**உறுபொருளுமுல்கு பொருளுந்தன்னொன்னார்த்**
**தெறு பொருளும் வேந்தன் பொருள்''** என்பது திருக்குறள் கருத்தாகும். இடுபொருளும் படுபொருளும் வேந்தர்க் குரியது என்பது அன்றைய அரசியல் நீதியாகும். இன்றும் கூட புதையல் பொருள் அரசுக்கே உரியதாகும்.

அறிந்தோ அறியாமலோ தவறாகக் கருதியோ பொறாமலோ, அரசனுடைய காவலர்கள் செய்யும் தவறுகளும் அரசனையும் அரசையுமே சாரும் என்பது இங்கு தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

அரசு செய்யும் தவறுகளையும் ஆட்சியில் நடக்கும் தவறு களையும் கொற்றவை கோயிலில் முறையிடுவதும் அன்றைய பழக்கங்களில் ஒன்றாகும். கொற்றவை கோயிற் கதவுகளும் கொடுங்கோன்மை நிகழும்போது அடைபடுகின்றன. ஆட்சியில் தவறு ஏற்பட்டுவிட்டது என்பது தெரிந்தவுடன் அரசன் அந்தத்த வற்றைத் திருத்திக் கொள்வதும் அந்தத் தவறினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு பாதிப்புக்கு ஈடுகட்டுவதும் அரசு நீதியின் ஒரு பகுதியாக அன்று இருந்திருக்கிறது.

தவறாக ஒருவனைச் சிறைப்படுத்திய காரணத்தால் அத்தவறுக்குத்திருத்தல் மட்டுமின்றி, பாதிப்புக்கு ஈடுகட்டுவது மட்டுமின்றி மேலும் ஒருபடி சென்று பாண்டிய மன்னன் சிறைக் கோட்டத்தைத் திறந்துவிட்டு காவலில் இருந்த அனைவருக்கும் பொது மன்னிப்பு கொடுத்து அவர்களை விடுதலை செய்யவும், இறை செலுத்த வேண்டியதை விடுவிக்கும்படியும், இடு-பொருளாயினும் படுபொருளாயினும் அவை எடுத்தார்க்கும் கொண்டார்க்கும் உரிமையாகட்டும் என்றும் அரச நீதியாக அறிவிக்கவும் செய்தான் என்று காப்பியக் காதையால் அறிகிறோம்.

**''சிறைப்படு கோட்ட ஞ்சீமின் யாவதுங்**
**கறைப்படுமாக்கள் கறை வீடு செய்ம்மின்**
**இடுபொருளாயினும் படு பொருளாயினும்**
**உற்றவர்க்குறுதி பெற்றவர்க்காமென**
**யானை யெருத்தத்து அணி முரசு இரீஇக்**
**கோன் முறையறைந்த கொற்ற வேந்தன்**
**தான்முறை பிழைத்த தகுதியும் கேள்நீ''**

என்று குறிப்பிடுகிறது காப்பிய வரிகள்.

இத்தனைக்கும் பின்னரும் "அரசொடு மதுரையும் தீக்கிரையாகும்" என்னும் சொல்லும் உண்டாயிற்று என்று காப்பியக் கதை குறிப்பிடுகிறது.

"ஆடித்திங்கள் பேரிருட் பக்கத்து
அழல் சேர்குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரியுண்ண
உரைசால் மதுரையோடு அரைசு கேடுறுமெனும்
உரையுமுண்டே நிறை தொடி யோயே"

என்று மதுரைமாதேவி கண்ணகியிடம் கூறிகோபத்தைத் தணித்து மேலும் கோவலனின் முன்பிறப்பின் கதையையும் கூறி விதிமுறை சொல்லி ஊழ்வினையால் நிகழ்ந்ததாக எடுத்துக்கூறித் தீயினின்றும் மதுரையை விடுவித்தாள்.

அது கேட்டு கண்ணகி வைகைக் கரை வழியாக மேற்கு முகமாகச் சென்று

"கடல் வயிறு கிழித்து மலை நெஞ்சு பிளந்தாங்கு
அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்
நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப்"

கடலின் நடுவில் நின்ற அசுரனைக் கொன்ற முருகனது குன்றத்தில் அடி வைத்து உயரச் சென்று ஒரு வேங்கை மரத்தடியில் தங்கி அன்று முதல் பதினான்காம் நாள் இந்திரன் முதலான தேவர்கள் துதிக்கத்தான் தன் கணவனாகிய கோவலனுடன் தேவ விமானத்தில் ஏறிச்சென்று பத்தினித் தெய்வமானாள்.

"அமரர்க் கரசன் தமர் வந்தேத்தக்
கோறகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வானவூர்தி ஏறினள் மாதோ
கானமர்புரி குழல் கண்ணகி தானென்"
என்று காப்பிய வரிகளும்

"தெய்வம் தொழ அள் கொழுநற்றொழு வாளைத்
தெய்வம் தொழுதகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து"

என்று காப்பிய வெண்பாவும் குறிப்பிடுகிறது.

"தெய்வம் தொழ அள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்பது வள்ளுவர் வாக்கு. இங்கு அவள் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

## 20. குன்றக்குரவைக் காதையில்

மலைப்பகுதிகளில் வாழும் குரவர் பெருமக்கள் தங்கள் வழிபடு கடவுளாகிய முருகக் கடவுளைப்பாடி ஆடும் கூத்து குன்றக் குரவை என்று கூறப்படுகிறது.

வேங்கை மரத்தின் கீழ் அமர்ந்திருந்த கண்ணகியைப் பார்த்து எங்களது வள்ளியைப் போல இருக்கின்றீர், முலையிழந்து வந்து நிற்கின்றீர். நீவர் யார் என அம்மலை வாழ் மக்கள் கேட்கிறார்கள்.

**''மலை வேங்கை நறுநிழலின்**
**வள்ளிபோல் வீர்மன நடுங்க**
**முலை இழந்து வந்து நின்றீர்**
**யாவிரோவென முனியாத''**

என்று கேட்கிறார்கள்.

கண்ணகி தனது வரலாற்றைக் கூற அவளைக் கண்டு அஞ்சி கை கூப்பி நிற்க, தேவர்களும் மிக்க மலர் மழையைச் சொரிந்து மலையில் இருந்த குறவர் பெருமக்களும் கண்ணாற் கண்டு நிற்கும் வண்ணம் அவள் கணவனுடன் அழைத்துப் போயினர், ஆதலின் நம் குலத்திற்கு இவளைப் போன்ற ஒரு பெரிய தெய்வம் இல்லையெனக்கூறி இப்பத்தினித் தெய்வத்தை வேங்கை மரத்தடியில் வைத்து வழிபடுவோம் என்று கூறி பாடுகின்றனர்.

**''சிறுகுடியீரே, சிறுகுடியீரே**
**தெய்வம் கொள்ளுமின் சிறுகுடியீரே, என்று**
**பறைதனை அடித்தும் கொம்புகளை ஊதியும்**
**மணிகளை ஒலிக்கச் செய்தும் குறிஞ்சிப்பண்**
**ணினைப் பாடுகிறார்கள், அகிற்புகை யேந்தி**
**மலர் தூவி சுற்றுச் சுவர் எழுப்பி வாயில்**
**அமைத்து வழிபடுகிறார்கள்''**

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள்.

''தெய்வம் கொள்ளுமின் சிறுகுடியீரே
தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம் மின் கொடுமணி இயக்குமின்
குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின்
''பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரவு மலர் தூவுமின்
ஒருமுலை இழந்த நங்கைக்குப்
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே''!

என்று காப்பியப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இது மலைவாழ் குறவர் பெருமக்களின் வழிபாட்டு முறையைக் குறிக்கிறது.

மலையின் கண்ணுள்ள புதுப்புனல்களில் நீராடிக் கண் சிவந்து ஒன்று கூடி முருகனைப் பாடி ஆடுவோம் என்று கூறி குன்றக்குரவைக்கூத்து ஆடுகின்றனர்.

இப்பாடல்கள் முருகனைப் பற்றிப் பலவாராகப் புகழ்ந்து பாடும் இனிய பாடல்களாகும்.

''உரையினி மாதராய் உண்கண் சிவப்பப்
புரைதீர் புனல் குடைந்தாடி னோமாயின்
உரவு நீர் மாகொன்றவேலேந்தி ஏத்திக்
குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழீ''

''சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கைவேலன்றே
பாரிரும் பெளவத்தின் உள்புக்குப் பண்டொரு நாள்
சூரமாதடிந்த சுடரிலைய வெள்வேலே,

''அணி முகங்க ளோராறும் ஈராறுகையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணிமுகம் மேற்கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே

''சரவணப்பூம் பள்ளியறைத்தாய் மாரறுவர்
திருமலைப் பாலுண்டான் திருக்கை வேலன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்றநெடுவேலே''

என்றெல்லாம் முருகக்கடவுளுடைய பெருமைகளைப் பாடி குன்று வாழ் மகளிர் ஆடுகின்றனர். முருகன் மீது மனமுருகிப்பாடும் இப்பாடல்கள் பக்திச்சுவை மிக்கதாக உள்ளன.

''பெண்ணே, என் அருமைத் தோழியே உன் கருத்தினைக் கூறுவாயாக, நாம் இதுவரை நமது கண்கள் சிவக்கும் படியாக இந்தத் தெளிவான நீரில் குதித்துக் குதித்து ஆடினோம். இப்போது அந்த விளையாட்டு முடிந்துவிட்டது. இனி நாம் அனைவரும் குரவைக்கூத்திற்காக கை கோர்த்துக்கொண்டு, நடுக் கடலில் பெரிய மாமரமாக நின்ற சூரபத்மனைக் கொன்றொழித்த வேலேந்தியாகிய முருகனைப் புகழ்ந்து பாடுவோம். வாருங்கள் என்றும்.

பாறைகளும் கற்களும் நிறைந்த பெரிய கடலின் உள்ளே முன் காலத்தில் புகுந்து அங்கு பெரிய மாமரமாய் நின்ற சூரபத்மனை ஒழித்த ஒளி மிகுந்த வேலானது சிறப்புமிக்க திருச் செந்தூரிலும் திருச்செங்கோட்டிலும் திருவெண்குன்றத்திலும் (சுவாமி மலை) திருவேரகத்திலும் ஒரு பொழுதும் நீங்காது நிலை கொண்டு எழுந்தருளியுள்ள முருகக் கடவுளின் கையில் உள்ள வேல் அல்லவா" என்றும்,

மயில்வாகனத்தின் மீது ஏறிச்சென்று அசுரர் கூட்டத்தின் பெருமையை அழித்து, விண்ணுலகத்தின் அரசனான தேவேந் திரனே கை தொழுது வணங்கும்படியாக அவனுடைய பகையை ஒழித்த வெண்ணிறமான வேல்யாருடைய வேல் என்றால் அது ஆறுமுகங்களும், பன்னிருகைகளும் கொண்ட இணையில்லாத அழகுடைய முருகப் பெருமான்கையில் ஏந்தியுள்ள ஒளிமிக்க வேலாகும்.

வளர்ந்து கொண்டிருந்த மலையைச் சுற்றி வருகின்ற அசுரனுடைய மார்பைப் பிளக்கும் பொருட்டாக அந்தக் கிரவுஞ்ச மலையைப் பிளந்து வீழ்த்திய நீண்ட வேல் யாருடைய வேல் என்றால் சரவணப் பொய்கையில் மலர்ந்துள்ள தாமரை மலர்களாகிப் பள்ளியறையில் தன்னை பெற்றெடுத்த கார்த்திகை மகளிர் அறுவருடைய அழகிய முலைப்பால் உண்டருளிய முருகப் பெருமானுடைய அழகிய நெடுவேலே என்றும்.

முருகனுடைய வீரத்தையும் பெருமையையும் அவனுடைய வேலின் திறனையும் புகழந்து வேட்டுவ மகளிர் குன்றக் குரவைக் கூத்தாடி மகிழந்தனர்.

பின்னர், அந்த முருகக்கடவுள் காம நோய் தீர்க்க வருவார் என்று அம்முருகனை பல வேறாகப் பாராட்டி பக்திப் பரவசத்துடன் கூத்தாடிப்பாடுகிறார்கள். இப்பாடல்களும் தனிச்சிறப்பு மிக்கவைகளாக அமைந்துள்ளன.

**"இறைவளை நல்லாய் இது நகையாகின்றே**
**கறிவளர்தண் சிலம்பன் செய்த நோய் தீர்க்க**
**அறியாள் மற்றன்னை அலர் கடம்பன் என்றே**
**வெறியாடல் தான் விரும்பி வேலன் வரு கென்றான்**

**"ஆய்வளை நல்லாய் இது நகையாகின்றே**
**மாமலை வெற்பன் நோய் தீர்க்க வரும் வேலன்**
**வருமாயின் வேலன் மடவன் அவனிற்**
**குருகு பெயர்க் குன்றம் கொன்றான் மடவன்**

**"செறிவளைக் கை நல்லாய் இது நகையாகின்றே**
**வெறிகமழ்வெற்ப நோய் தீர்க்க வரும் வேலன்**
**வேலன் மடவன் அவனினும் தான் மடவன்**
**ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்**

**"நேறிழை நல்லாய் நகையாம் மலை நாடன்**
**மார்பு தரு வெந்நோய்தீர்க்க வரும் வேலன்**

**தீர்க்க வரும் வேலன் தன்னினும் தான் மடவன்**
**கார்க்கடப்பந்தாரெங்க கடவுள் வருமாயின்**

என்றும் கூத்துப்பாடல்கள் வருகின்றன.

கடவுளைக் காதலனாக பாவித்துப் பக்தர்கள் இன்பச் சுவை நிரம்ப பக்திப்பாடல்கள் பாடுவது இந்து சமய மரமாகும். இங்கு வேட்டுவப்பெண்கள், தங்கள் மலை வாழ் மக்களின் கூத்து வடிவில், கடம்பமாலையணிந்த முருகன், கிரவுஞ்ச மலையைப் பிளந்த முருகன், ஆலமர் கடவுளின் குமரன் முருகன் தங்கள் தாபம் தணிக்க வருவான் என்று நெஞ்சுருகிப்பாடி கூத்து ஆடுகின்றனர்.

அதன் பின்னர் வேலவர் நம்மை மணம் செய்ய வருவார் அவருடைய திருவடிகளை வணங்கி மகிழ்வோம் என்று பாடி மகிழ்ந்து ஆடுகிறார்கள்.

**"வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து**
**நீலப்பறவை மேல் நேரிழை தன்னோடும்**
**ஆலமர் செல்வன் புதல்வன் வரும் வந்தால்**
**மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே**

**"கயிலை நன்மலையிறை மகனை நின் மதிநுதல்**
**மயிலியல் மடவரல் மலையர்தம் மகளார்**
**செயலைய மலர்புரை திருவடி தொழுதேம்**
**அயல் மணம் ஒழியருள் அவர் மணம் எனவே**

**"மலைமகள் மகனை நின் மதிநுதல்மடவரல்**
**குல மலை உறைதரு குரவர்தம் மகளார்**
**நிலையுயர் கடவுள் நின் இணையடி தொழுதேம்.**
**பலரறி மணமவர் படுகுவ ரெனவே''**

**"குறமகள் அவள்எம் குலமகள் அவளொடும்**
**அறுமுக சொருவ நின் அடியிணை தொழுதேம்**

துறை மிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுக நன்மணம் விடு பிழைமண மெனவே!

என்று நாம் பாட மறைநின்று கேட்டருளி
மன்றலங்கண்ணி மலை நாடன் போவான் முன்,
சென்றேன் அவன்தன் திருவடிகை தொழுது
நின்றேன் உரைத்தது கேள்வாழி தோழி

"கடம்பு சூடி உடம்பிடி ஏந்தி
மடந்தை பொருட்டால் வருவது இவ்வூர்
அறுமுகம் இல்லை அணிமயில் இல்லை
குறமகள் இல்லை செறிதோள் இல்லை
கடம்பூண்தெய்வமாக நேரார்
மடவர்மன்ற இச்சிறு குடியோரே"

என்று பாடுகிறார்கள், பாடி ஆடுகிறார்கள்.

வேல்முருகன் வந்து வெறியாடல் நிகழ்த்தும்போது அங்கு நீலமயில் மீது பள்ளியுடன் சேர்ந்து, ஆல் அமர் இறைவனான சிவபெருமானுடைய புதல்வன் வருவான். அவன் வந்தால் மூங்கில் புதர்களைக் கொண்ட மலை நாட்டைச் சேர்ந்த எங்கள் காதலன் எங்களை மணந்து கொள்ள அருளும்படி அவனைத் தொழுது வேண்டுவோமாக!

கயிலைமலை இறைவனின் புதல்வனே, உன்னுடைய திருவடிகளையும், உனக்குரிய பிறைமதி போன்ற வெற்றியினையும் மயிலைப் போன்ற அழகிய சாயலையும், இளமையையும் உடைய வள்ளியம்மையின் திருவடிகளையும் வணங்குகிறோம். அயலார் மணத்தை ஒதுக்கிவிட்டு எனது அன்பிற்குரியவர் மணத்தையே எனக்கு அருளுக என்று அவனைத் தொழுது வேண்டுகிறோம், என்றும்.

மலைமகளான பார்வதி தேவியின் புதல்வனே, உன்னுடைய பிறை மதி போன்ற நெற்றியையும் இளமையும்

கொண்ட வள்ளியின் குலமான எங்கள் குறவர் குடியிலே பிறந்த மகளிரின் நிலையை உயர்த்தும் உயர்ந்த மேலான கடவுளே, எங்கள் காதலர் எங்களை ஊரறிய மணக்கும்படி அருளுக என்று உனது இரு திருவடிகளையும் வணங்குகிறோம்" என்று தொழுது வேண்டுவோமாக" என்றும்,

குறமகளான வள்ளி எங்கள் குல மகள், அவளோடும் சேர்ந்து ஆறுமுகங்களையுடைய உனது திருவடிகளையும் சேர்த்து வணங்குகிறோம். நீர் நிலைகளின் பக்கம் நின்று உனது திருவடிகளைத் தொட்டு வாக்குறுதி கொடுத்த எங்கள் காதலர் தங்கள் களவொழுக்கத்தை விட்டு ஊரறிய எங்களை மணந்து கொள்ள அருளுவாயாக என்று அவனைத் தொழுது வேண்டுவோமாக என்றெல்லாம் பாடி ஆடுகிறார்கள், மேலும்

நீ கடம்ப மலர் மாலை சூடி வேலினை ஏந்தி ஒரு மங்கையின் பொருட்டாக இவ்வூர் வருதல் காண்கிறோம். ஆனால் உனக்கு ஆறுமுகங்கள் இல்லை அழகிய மயில்வாகனம் இல்லை. உன்னருகில் வள்ளியில்லை. பன்னிரு தோள்கள் இல்லை. எனவே இவ்வூரார் உன்னை எங்கள் கடமையை ஏற்கும் தெய்வமாக எங்கள் அருமை முருகனாக உன்னை கருத மாட்டார்கள். ஆதலால் இவர்கள் அறிவில்லாதவர்கள்.என்று கூறிவிட்டேன் என்று தலைவி குறிப்பிட்டுப் பாடுகிறார்கள்க் ஆடுகிறார்கள்.

இவ்வாறு குறமக்களின் குலக் கடவுளாகிய வேலவனைத் துதி செய்து பாடி பத்தினித் தெய்வமான கண்ணகியின் பெருமையையும் பாடினார் என்றவாறு சிலப்பதிகாரக்காப்பியம் தெரிவிக்கிறது. தமிழ்நாட்டில் முருக வழிபாடு தனிச்சிறப்பு கொண்டது. குன்று தோறும் முருகனையும், அதற்கு மணி முடியாக ஆறுபடை வீடுகளையும் கொண்டது முருகனது கோயில்கள். முருக வழிபாடு தமிழகத்தில் இந்து சமயமரபில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதை நாம் நன்கு அறிவோம்.

## 21. காட்சிக்காதையில்

சேரமன்னன் மலை வளம் காணச் சென்றான். அம் மலையின் அழகான தோற்றத்தைப் பற்றிக் கூறும்போது "நெடியோன் மார்பில் ஆரம் போன்று பெருமலை விளங்கிய பேரியாற்றடைகரை" என்று திருமாலின் ஆரம்போன்று அம் மலையில் பேரியாறு ஓடிற்று என்று இளங்கோவடிகள் கூறுகிறார்.

குன்றக் குரவையின் பாடல்களின் ஓசை கேட்டதாகக் கூறும்போது

**"குன்றக்குரவை யொடு கொடிச்சியர் பாடலும்**
**வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்"**

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

மலையகம் வந்த சேர மன்னனிடம் மலைவாழ் குரவர் பெருமக்கள் கண்ணகியைத் தாங்கள் கண்டது பற்றியும் அவள் தனது கணவருடன் தேவர்கள் அழைக்க வானுலகம் சென்றது பற்றியும் கூறினர். அது கேட்ட சேரனிடம் பெரும் புலவர் சாத்தனார் அவ்வரலாறு முழுவதையும் கூறி பத்தினித் தெய்வத்தின் சிறப்புகளை எடுத்துக் காட்டிப்பேசினார்.

அப்பத்தினித் தெய்வத்திற்கு சிலை எடுக்கச் சேரன் தீர்மானித்தான். அதற்காகக் கல் எடுக்க வேண்டும். அதற்கு இமயம் சென்று கல் எடுக்க வேண்டும். கல் கால் கொண்டால் அது கடவுளாகும். அதைக் கங்கையிலும் காவிரியிலும் நீர்ப்படைச் செய்ய வேண்டும் என்றும் சேரன் கூறுவதை.

**"விற்றலைக் கொண்ட வியன் பேரிமயத்துக்**
**கற்கால் கொள்ளினும் கடவுளாகும்**
**கங்கைப் பேர் யாற்றினும் காவிரிப் புனலினும்,**
**தங்கிய நீர்ப்படை தகவோ உடைத் தெனப்"**

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

"புன்மயிர்ச்சடை முடிப் புலராவுடுக்கை
முன்னூல் மார்பின் முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளரொடு பெருமலையரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கடவுள் எழுத வோர்கல் தாரானெனின்"

என்று சடைமுடி தாங்கிய சிவனார் வாழும் இமயமலையே சிறந்தது என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

# 22. கால்கோட் காதையில்

கண்ணகி சிலைக்குக் கல்லெடுக்க சேரமன்னன் இமயத்திற்குச் செல்வதற்கான தயாரிப்புகளைச் செய்து படைகளையும் பரிவாரங்களையும் திரட்டி

"ஞாலங்காவலர் நாட்டிறை பயிரும்
காலைமுரசம் கடைமுகத் தெழுதலும்
"நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ்சென்னி
உலகு பொதி உருவத்துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலம் கொண்டு
மறையோர் ஏந்திய ஆவுதி நறும்புகை
நறைகெழு மாலையின் நல்லகம் வருத்தக்
கடக்களி யானை பிடர்த்தலை ஏறினன்,
குடக்கோக் குட்டுவன் கொற்றம் கொள்கென,
ஆடக மாடத்தறிதுயில் அமர்ந்தோன்
சேடங்கொண்டு சிலர் நின்றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணி முடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணி மணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி"

என்று சிவபெருமானின் ஆசியையும்
திருமாலின் ஆசியையும் பெற்று வட
திசை நோக்கிப் புறப்படலாயினன்"

என்று காப்பியச் செய்யுள் வரிகள் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன.

உலகத்தை ஆளும் பல நாட்டு மன்னர்களும் தாங்கள் செலுத்தவேண்டிய திறைப் பொருளைக் கொண்டு வந்து செலுத்துமாறு காலை முரசு கடை வாயிலில் எழுந்தது. நிலவொளி பரப்பும் பிறைசூடிய, நீண்ட சடை முடியினையுடைய உலகை

யெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் வடிவத்தை உடைய சிவபெருமானின் சேவடிகளை வீரம் பொருந்திய வஞ்சி மாலையுடன் சேர்த்து தன் தலையிலே அணிந்து கொண்டான். பின்னர் யாரையும் வணங்காத செங்குட்டுவன் சிவபெருமான் கோயிலை வலம் வந்து வணங்கினான். அந்தணர்கள் ஆகுதியை ஏந்தி நின்றனர். சேரர் பெருமான் மதக் களிப்பு கொண்ட யானை மீது ஏறி அமர்ந்தான்.

சேர நாட்டு வேந்தனான செங்குட்டுவன் வெற்றி பெருவானாக என திருவனந்தபுரத்து திருக்கோயிலில் பாம்பணை மீது யோக நித்திரையில் அமர்ந்துள்ள திருமாலின் சேடத்தைக் கொண்டுவந்து கொடுத்து சிலர் வாழத்துக் கூறினார். கங்கை நீர் தங்கியுள்ள சடைமுடியையுடைய சிவபெருமானின் திருவடி-களை ஏற்கனவே தலை முடியில் சேரன் வைத்துக் கொண்டிருந்ததால் திருமாலின் சேடத்தினையும் வாங்கி தனது மணிகள் விளங்கும் தோள்களின் மீது தாங்கிக் கொண்டும் மிகுந்த தகுதியுடன் வடதிசை நோக்கிச் சென்றான் என்று அந்தக் காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன. இங்கு கண்ணகிக்குச் சிலை செய்ய கல் எடுக்க இமயத்திற்குப் புறப்பட்ட சேரன் செங்குட்டுவன் சிவபெருமானின் திருமாலின் ஆசியையும் பெற்று தனது பயணத்தைத் தொடங்கினான் என்பதை இளங்கோவடிகள் குறிபிபட்டுக் கூறியுள்ளதைக் காண்கிறோம்.

சேரமன்னன் தனது பெரும் படைகளுடன் ஆரவாரத்தோடு நீலகிரி மலையைக் கடந்து செல்லும்போது

**"இயங்கு படை அரவத்தீண்டொலி இசைப்ப**
**விசும்பியங்கு முனிவர் வியன் நிலம் ஆளும்**
**இந்திரத்திருவனைக் காண்குதும் என்றே**
**அந்தரத்திழிந்தாங்கு அரசு விளங்க வையத்து**
**மின்னொளி மயக்கும் மேனியொடு தோன்ற**
**மன்னவன் எழுந்து வணங்கி நின்றோனைச்**
**செஞ்சடை வானவன் அருளினில் விளங்க**
**வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்"**

சிவந்த சடையினையுடைய சிவபெருமானுடைய திரு-வருளினாலே வஞ்சி மாநகரம் விளங்குமாறு தோன்றிய சேர மன்னனே கேட்பாயாக எனக்கூறி

**"மலயத் தேகுதும் வான் பேரிமய**
**நிலயத் தேடுதல் நின் கருத்தாகலின்**
**அருமறையந்தணர் ஆங்குளர் வாழ்வோர்**
**பெருநில மன்ன பேணல் நின் கடனென்று**
**ஆங்கவர் வாழ்த்தி........................................ "**

நீ இமயத்தை நோக்கிச் செல்லும் போது அந்த நாடுகளில் வாழும் அந்தணர்களைப் பேணுவது உனது கடமையாகும் என வாழத்தினர் என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளது கவனிக் கத்தக்கதாகும்.

சேரமன்னன் தனது பெரும்படை கொண்டு தன்னை எதிர்த்த வடவரசரை முறியடித்து வெற்றி கண்ட போரினை திருமால் நடத்திய மூன்று போர்களுடன் ஒப்பிட்டு இளங்கோ வடிகள் கூறுகிறார்கள்.

**"கடல் வயிறு கலக்கிய ஞாட்புங் கடலகழ்**
**இலங்கையில் எழுந்த சமரமும் கடல்வண்ணன்**
**தேரூர் செருவும் பாடிப்பேரிசை**
**முன்தேர்க் குரவை முதல்வனை வாழ்த்தி"**
என்று காப்பிய வரிகள் கூறுகின்றன.

திருமால் பாற்கடலைக் கலக்கியதும், இராமன், கடல் சூழ்ந்த இலங்கையில் வெற்றி கண்ட போரும், கண்ணன் தேரோட்டி வெற்றியுடன் நடத்தி முடித்த பாரதப்போரும் சேர மன்னர் வடவரசர்களுக்கு எதிராக வெற்றி கண்ட போருக்கு இளங்கோவடிகள் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது சிறப்பாகும்.

இவ்வாறு வடபுலத்தில் நடைபெற்ற போரில் வெற்றி பெற்று அவ்வட திசையிலே மறையினைப் பாதுகாக்கும் அந்தணர்

களுடைய குண்டத்தின் தீயை அவியாது பேணிக்காக்கும்படி தூதுவரிடம் சொல்லியனுப்பி இமயத்தின் கண், ஒப்பற்ற பத்தினிக்கடவுளுக்குக் கல்கொண்டான் சேரமன்னன் என்று காப்பியம் தெளிவுபடுத்திக் கூறுகிறது.

"வடதிசை மருங்கின் மறைகாத் தோம்புனர்
தடவுத் தீஅவியாத் தண் பெருவாழ்க்கை
காற்றூதாளரைப் போற்றிக் காமினென
வல்லவன் கோதையொடு வென்று வினை முடித்த
பல்வோற்றானைப் படை பல ஏவிப்
பொற்கோட்டிமயத்துப் பொருவறு பத்தினிக்
கற்கால் கொண்டனன் காவலனாங்கென்"

என்று கால் கோட் காதையின் காப்பிய வரிகள் முடிகின்றன.

பொதுவாக ஒரு அரசனின் படைகள் அடுத்த நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும்போது வழியில் உள்ள ஊர்களுக்கும் மக்களுக்கும், ஆநிறைகளுக்கும், அந்தணர்களின் வேள்விகளுக்கும் கொல்லர்களின் உலைக்களன்களுக்கும், வயல் வெளிகளில் உள்ள பயிர்களுக்கும் தோட்டங்களுக்கும் சேதம் ஏற்பட்டுவிடும். ஆனால் அறவழியில் ஆட்சி நடத்தும் பேரரசர்கள், ஒரு லட்சிய நோக்கோடு படைகளைக் கொண்டு செல்லும்போது, அப்படிப்பட்ட சேதங்கள் ஏற்படாமல், அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்துச் செல்லவேண்டும் என்பது அரச நீதியிலும் போர் நீதியிலும் உள்ள நெறி முயையாகும்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தனது இராமாயணத்தில் இலங்கையை நோக்கி வானரப்படை புறப்பட்டுச் செல்வதைப் பற்றிக் குறிப்பிடும்போது "வழியில் வந்த நகரங்களுக்காவது கிராமங்களுக்காவது எந்த விதச் சேதமும் செய்யாமால் செல்ல வேண்டுமென்பது ராமனுடைய கண்டிப்பான உத்தரவு" என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

கம்பனும் தனது இராமாயண காவியத்தில் வானரப் படைகள் செல்வது பற்றிக் குறிப்பிடுகையில்

"வையகம் அதனில் மாக்கள் மயங்குவர் வயவெம் சேனை
எய்திடின், என்பது உன்னி, இராகவன் இனிதின் ஏவப்
பெய்கனி, கிழங்கு, தேன் என்று இணையன பெறுதற்கு ஒத்த
செய்யமால் வரையே, ஆறாச் சென்றது அத்தகைப்பு இல்சேனை
என்று குறிப்பிடுகிறார்.

"இந்தப் பெரிய சேனை செல்லும் போது உலகத்து மக்களுக்கெல்லாம் சிரமங்கள் ஏற்பட்டுவிடும் எனக்கருதி இராகவனுடைய ஏவலின்படி, .காய், கனி கிழங்கு தேன் முதலியவை கிடைக்கும் வகையில், மலைகளின் ஓரமாகவும் ஆற்றங்கரை ஓரமாகவும், அத்தகைப்பு இல்லாத சேனை சென்றது." என்பது அதன் பொருள்

இளங்கோவடிகள் "வடதிசை மருங்கின் மறை காத்தோம் புனர் தடவுத்தீயவியாத்தண் பெருவாழ்க்கை காற்றூதாளரைப் போற்றிக் காமி னென்"
என்று நேரடியாகவே குறிப்பிடுகிறார்.

# 23. நீர்ப்படைக்காதையில்

சேரமன்னன் வடபுல மன்னர்களான கனக விஜயர்களை, அவர்கள் தமிழையும் தமிழ் மன்னர்களையும் பழித்தார்கள் என்ற காரணத்தால், எதிர்த்துப் போரிட்டு வென்று அவர்களது தலையில் கண்ணகி சிலைக்கான கல்லைச் சுமக்க வைத்து, கொண்டு வந்தான் என்று சிலப்பிதிகாரக் கதை கூறுகிறது.

முருகனுக்கும் சூரபத்மனுக்கும் நடைபெற்ற சூரசம்காரப் போர் பதினெட்டு ஆண்டுகள் நடைபெற்றன. இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போர் பதினெட்டு மாதங்கள் நடைபெற்றது. பாண்டவர்களுக்கு கௌரவர்களுக்கும் குரு பூமியில் பதினெட்டு நாட்கள் போர் நடைபெற்றது. சேரன் செங்குட்டுவனுக்கும் கனக விஜயர்களுக்கும் நடந்த போர் பதினெட்டு நாழிகையில் முடிந்ததாகவும் காப்பியத்தின் நிர்ப்படைக் காதையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சேர மன்னன் பதினெட்டு நாளிகையில் வடபுல மன்னர்களை வென்றான் என அவனுடைய வீரத்தின் சிறப்பை சிலப்பதிகார காப்பியம் விவரித்துக் கூறுகிறது.

**"உயிர்த்தொகை உண்ட ஒன்பதிற்றிரட்டியென்று**
**ஆண்டும் மதியும் நாளும் கடிகையும்**
**ஈண்டு நீர் ஞாலங்கூட்டி யெண்கொள"**

என்று சிலப்பதிகாரக் காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

போர் முடித்து இமயத்தில் கல் எடுத்துக் கொண்டு திரும்பி வரும்போது சேரமன்னன் கங்கையாற்றின் தென்கரையில் தங்கி கல்லிற்கு கங்கை நீர் அபிஷேகம் செய்யப்பட்டது பற்றியும் சிலப்பதிகார காப்பியத்தில் செய்தி வருகிறது. சேரப்பேரசன் அவ்வாறு கங்கையாற்றின் தென்கரையில் தங்கிருந்த போது மாடலன் என்னும் அந்தணன், சேரனிடத்திற்கு வந்து "கோவலன் - கண்ணகி ஆகியோருக்கு அடைக்கலம் கொடுத்தும் அவர்களைக் காப்பாற்ற முடியாமைக்கு வருந்திமாதரி உயிர்விட்டாள்" என்றும்,

"தான் அவர்களை மதுரைக்கு அழைத்து வந்த காரணத்தினால் தானே அவர்களுக்கு அந்த கதி ஏற்பட்டது எனக்கருதி கவுந்தி அடிகள் உண்ணா நோன்பு இருந்து உயிர் விட்டார்கள்" என்றும், கோவலன், கண்ணகி ஆகியோர்களின் தாய்மார்கள், தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்பட்ட கதியினைக் கேள்வியுற்று மனம் நொந்து உயிர்விட்டார்கள்" என்றும் "அவர்களின் தந்தையர்கள் துறவறம் மேற்கொண்டார்கள் என்றும், மாதவி மனம் வருந்தி வாழ்க்கையை வெறுத்துத் தனது குழல்களைக் களைந்து துறவியானாள் என்றும் இந்தத் துயரக்கதைகளையெல்லாம் தான் கண்டும் கேட்டும் ஏற்பட்ட கவலைகளையும் பாவங்களையும் போக்க கங்கையில் நீராட வந்திருப்பதாகவும் மாடல மறையோன் சொல்லக் கேட்டுச் சேரனும் வருத்தம் கொண்டான் என்பதையும் இக்காதையின் கதை நிகழ்ச்சிகளில் குறிப்புகள் காண்கிறோம். பாவம் போக்க புனித கங்கையில் நீராடுவதும் சிலைக்கான கல்லிற்கு கங்கை நீர் அபிஷேகம் செய்வதும் இந்து சமய மரபில் வந்துள்ள நடைமுறைகளாகும்.

# 24. நடுகற்காதையில்

வடபுலம் சென்று வெற்றியுடன் திரும்பிய சேரன் செங்குட்டுவன் தனது கோப்பெரும் தேவியோடு நிலாமுற்றத்தில் அமர்ந்திருந்த போது கூத்தர்கள் வந்து இமையவன் ஆடிய கொடு கொட்டி ஆட்டத்தை ஆடிக்காட்டி அரசனை மகிழ்வித்தனர் என்று சிலப்பதிகாரக் கதை குறிப்பிடுகிறது. இங்கு இறைவன் உமை யொரு பாகனாக இருந்து ஆடியதைப் போன்றதொரு ஆடலை அக்கூத்தர் ஆடிக்காட்டினார்கள் என்பதாகும்.

"பாடகம் பதையாது சூடகம் துளங்காது
மேகலை ஒலியாது மென்முலை அசையாது
வார் குழை ஆடாது மணிக்குழல் அவிழாது
உமையவள் ஒரு திறனாக ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையனாடலில் மகிழ்ந்தவன்"

என்று அந்த அழகிய காப்பிய வரிகள் மிக நுட்பமாகக் குறிப்பிடுகின்றன.

அழகான கால்களிலே கட்டியிருந்த சிலம்புகள் ஒலிக்க , சிவந்த கைகளிலே ஏந்தியிருந்த பறைகள் முழங்க, நீண்டு உருண்டிருந்த கண்கள் தம் கருத்தினை வெளிப்படுத்த செஞ்சடைமுடிகள் பரந்து பல திக்குகளிலும் பறந்து ஆட, பாடகம் அசையாது, தோள்வளைகள் குலுங்காமல், மேகலை அணிகள் ஒலியாமல், மென்முலைகள் அசையாமல், நீண்ட குழைக் காதுகளின் அணிந்திருந்த காதணிகள் ஆடாமல், நீண்ட மணிக்குழல்கள் அவிழாமல். இறைவியான அன்னை உமாதேவி தனது இடப்பக்கத்தில் இருக்கமகாதேவனாகிய இமையவன் சிவபெருமான் ஆடிய கொடு கொட்டி என்னும் ஆட்டத்தைப் படித்துணர்வதற்கு அரிதாக உள்ள நால்வகைப்பட்ட வேதங்களை ஓதி உணரும் வேதியர்கள் நிறைந்து வாழும் பறையூர் என்னும் ஊரிலிருந்து வந்த கூத்தச்சாக்கையன் என்னும் கலைஞன் சேரன் செங்குட்டுவன் முன்பு ஆடினான். அந்த

ஆட்டத்தைக் கண்டு அரசன் தன் தேவியுடன் சேர்ந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

நாட்டிய வடிவில் உள்ள உமையும் சிவனும் ஆடும் ஆட்டத்தின் முறைகளை மிகவும் அழகாக அடிகளார் இங்கு சிறப்பித்துக் கூறுவதைக் காணலாம்.

சேரமன்னன் அரசியல் மண்டபத்தில் அமர்ந்திருந்தான் அப்போது நீலன் முதலிய கஞ்சுகமாக்கள் வந்து, சோழ மன்னனிடத்திலும் பாண்டிய மன்னனிடத்திலும் கனக விஜயர்களைக் கொண்டு சென்ற போது அவர்கள், "போரிலே தோற்று கொல்லாக் கோலம் பூண்டு சென்ற அரசர்களைப் பிடித்து வருதல் பெருமையாகாது" என்று கூறினார்கள் என்று சொன்னார்கள் என்பதை சிலப்பதிகாரக்கதை குறிப்பிடுகிறது. இந்த இடத்திலும் இளங்கோவடிகள் போரில் தோற்ற அந்த வட புலத்தரசர்கள் உமையொரு பாகத்து இறவைனை வணங்கி அமர்க்களம் நீங்க தவப்பெருங்கோலம் - கொல்லாக்கோலம் கொண்டவர்களை இங்கு பிடித்துக்கொண்டு வருவது பெருமை யாகாது என்று குறிப்பிட்டுக் கூறுகிறார். இதில் உமையொரு பாகத்து இறைவனை வழிபடுதலும், கொல்லாமைக் கருத்தும் வெளிப் படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

**"ஆரிய மன்னர் அமர்க்களத்தெடுத்த**
**சீரியல் வெண்குடைக் காம்பு நனிசிறந்த**
**சயந்தன் வடிவில் தலைக் கோலாங்குக்**
**கயந்தலை யானையிற் கவி கையிற் காட்டி**
**இமையச் சிமையத்திருங்குயிலாலுவத்து**
**உமை யோரு பாகத்து ஒருவனை வணங்கி**
**அமர்க்களம் அரசனதாகத் துறந்து**
**தவப் பெருங் கோலங் கொண்ட டோர் தம் மேல்**
**கோதியழற் சீற்றம் கொண்டோன் கொற்றம்.**
**புதுவ தென்றனன் போர் வேற்செழிய னென்று**
**ஏனை மன்னர் இருவரும் கூறிய**
**நீண்மொழி யெல்லாம் நீலன் கூற"**

என்பது காப்பிய வரிகளாகும்.

அது கேட்டச் சேரன் செங்குட்டுவன் கோபம் கொண்டான். அப்போது அங்கு நீலன் ஆகியோருடன் வந்திருந்த மாடல மறையோன் சேர மன்னனிடம் சினம் தணிய பல நல்ல அறநெறிகளைக் கூறுகிறான்.. இவை பற்றி இக்காதையில் இளங்கோவடிகள் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். மாடல மறையோன் வாயிலாகக் கூறப்படும் அறிவுரைகள் பல அறிய கருத்துகளைக் கொண்டதாகும். இவை அரசனுக்கு மட்டு மல்லாமல் அனைவருக்கும் அவசியமான நெறிமுறை களாகும் யாராயினும் இந்த அறநெறிகளை வழிகாட்டியாகக் கொள்ள வேண்டியது அவசியம் என்பது நமக்கு இங்கு எடுத்துக்-காட்டப்படுகிறது.

மன்னனுடைய சீற்றம் தணியப் பலவாறாக அவனைப் புகழந்து கூறி மாடல மறையோன் தனது கருத்துக்களைத் தொடர்ந்து கூறுகிறான்.

மாமன்னனே, நீ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திப்புகழ் பெற்றாய். இன்னும் மறக்கள வேள்வியைச் செய்ய வேண்டுமென்று சிந்திக்காதே. போரைத்தவிர்த்து அறக்கள வேள்வியைத் தொடங்குவாயாக என்று மாடல மறையோன் தொடங்கினான்.

**"வையம் காவல் பூண்ட நின்நல்யாண்டு**
**ஐயைந்திரட்டி சென்றதற்பின்னும்**
**அறக்கள வேள்வி செய்யாதியாங்கணும்**
**மறக்கள வேள்வி செய் வோயாயினை"**

என்று காப்பியப் வரிகள் குறிப்பிடுகின்றன

எத்தனை அருள் உடையோராயினும் பொருளுடை-யோராயினும், வல்லமை மிக்கோராயினும் செல்வம் மிக்கோ-ராயினும் படைபலம் மிக்கோராயினும், யாக்கை நிலை யற்றது. தனது வாழ்நாளில் யாரும் ஒரு நல்ல காரியத்தை எடுத்து அதைக் காலத்தே செய்து முடிக்க வேண்டும் என்னும் சிறந்த கருத்துக்கள் மிகவும் சிறப்பாகச் சிறந்த எடுத்துக்காட்டுகளுடனும் மேற்கோள்

களுடனும் மாடல மறையோன் மூலம் இக்காதையில் கூறப் பட்டிருக்கிறது.

சேரன் செங்குட்டுவனுடைய முன்னோர்கள் மிகுந்த ஆற்றலும் பராக்கிரமும் கொண்டவர்கள் பெயரும் புகழும் வெற்றிகளும் மிக்கவர்கள் என்றும் அவர்களுடையசாதனைகள் மகத்தானது என்றும் அவற்றை விரித்துக் கூறி இருப்பினும் அவர்கள் அனைவரும் காலத்தால் மறைந்து விட்டனர். எனவே யாக்கை நிலையாமை கருதி பத்தினித் தெய்வத்திற்கான கோயிலை நிறுவி அதன் வழிபாட்டிற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்ய வேண்டும்.செய்து முடிக்க வேண்டும் என்றும் அறிவுரை கூறி வேண்டுகிறான்.

**"கடல் கடம் பொறிந்த காவலாயினும்**
**விடர்ச்சிலை பொறித்த விறலோனாயினும்**
**நான் மறையாளன் செய்யுட்கொண்டு**
**மேல் நிலை உலகம் விடுத்தோனாயினும்**
**போற்றி மன்னுயிர் முறையிற் கொள்கெனக்**
**கூற்றுவரை நிறுத்த கொற்றவனாயினும்**
**வன் சொல்யவனர் வளநாடாண்டு**
**பொன்படு நெடுவரை புகுந்தோனாயினும்**
**மிகப்பெரும் தானையோடு இருஞ்செருவோட்டி**
**அகப்பா எறிந்த அருந்திறலாயினும்**
**உருகெழு மரபின் அயிரை மண்ணி**
**இருகடல் நீரும் ஆடினோன் ஆயினும்**
**சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து**
**மதுக் கொள் வேள்வி வேட்டோனாயினும்"**

என்று பல திறம் படைத்த ஆற்றல் மிகுந்த சேர மன்னனின் முன்னோர்களை அடையாளம் குறித்துக் கூறுகிறது சிலப்பதிகாரப் பெருங்காப்பியம்.

கடல் கடந்து சென்று அங்கிருந்த தீவகத்தின் அரசனை வென்று, அங்கிருந்த கடப்ப மரமாகிய காவல் மரத்தைவெட்டி வெற்றிவாகை சூடிய ஒரு சேரமன்னன்.

இமயம் வரை சென்று அம்மலையில் தனது வில்லினைப் பொறித்த வெற்றி கொண்டவன் ஒரு சேரன்.

ஒரு அந்தணனும் அவனுடைய மனைவியும் ஒரு சேரமன்னனிடம் சென்று அவனைப்புகழ்ந்து திறன் மிக்க கவி பாடி, அதைக் கண்டு மகிழ்ந்து அச் சேரமன்னன் உமக்கு என்ன பரிசில் வேண்டுமெனக் கேட்க, **"நானும் எனது பார்ப்பணியும் சுவர்க்கம் செல்ல வேண்டும். அதற்குரிய யாகத்தைச் செய்க"** என்று அந்த அந்தணன் கேட்க, அத்தகையதொரு மகா யக்ஞத்தைச் செய்து முடித்து, அவ்வந்தணனும் அவனது துணைவியும் சுவர்க்கம் செல்ல வழிவகுத்துக் கொடுத்தவன் ஒருசேரன்.

மன்னுயிர்களைக் கவரும் யமதர்மன், தவத்துறை மக்கள், மிகப்பெரும் செல்வர், இளம் பெண்டிர், பாலகர், முதியோர், இளையோர் என்று பாராமல் முறையின்றி தனது வேலைகளைச் செய்து கொண்டிருந்த தைத்தடுத்து, அக்கூற்றுவனையும் மன்னுயிர்களை முறையாகக் கொள்கவென ஒரு எல்லைக் குட்படுத்தினான் ஒரு சேரமன்னன்,

வளம் மிக்க யவனர் நாட்டையும் வென்று அதன் ஆட்சியை நடத்தி, இமயத்திற்கும் சென்று அதைத் தனது ஆளுகைக்கு உட்படுத்தினான் ஒரு சேரமன்னன்.

பெரும்படை திரட்டி, அதைக் கண்டு தனது பகைவனை பயந்து ஓடச்செய்து அப்பகைவனது கோட்டையைத் தகர்த்து தரைமட்டமாக்கினான் ஒரு சேரன்.

அயிரை மலையின் கண் இருந்த கொற்றவையை அவ்வாற்றின் கண் நீராட்டியும், இரு கடல் நீர்களையும் வரச் செய்து நீராடிப் புகழ் பெற்றான் ஒரு சேரமன்னன்.

சதுக்க பூதங்களை அமராபதியிலிருந்து வஞ்சி மாநகருக்குக் கொண்டு வந்து சோமயாகத்தினைச் செய்தான் ஒருசேரமன்னன்,

இத்தனை திறம் படைத்த சேர வேந்தர்கள்அனைவருமே இறுதியில் இறந்து பட்டனர். எனவே யாக்கை நிலையாது என்று மாடல மறையோன் எடுத்துக் கூறி, அடுத்து செல்வமும் நிலையானதில்லை இளமையும் நிலையானதில்லை என்றும் எடுத்துக் கூறுகிறான்.

**"மிக்கூற்றாளர் யாவரும்இன்மையின்**
**யாக்கை நில்லாதென்பதை யுணர்ந்தோய்**
**மல்லல் மாஞாலத்து வாழ்வோர் மருங்கில்**
**செல்வம் நில்லாதென்பதை வெல்போர்த்**
**தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரின்**
**கண்டனையல்லையோ காவல் வேந்தே**
**இளமை நில்லாதென்பதை எடுத்தீங்கு**
**உணர்வுடை மாக்கள் உரைக்கல் வேண்டா**

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

மேலும் தொடர்ந்து மாடல மறையோன் பேசுகிறான். சேர மன்னனே, நீயும் நெடுங்காலம் இவ்வுலகில் வாழ்ந்து விட்டாய், விண்ணோர் உருவில் எய்திய நல்லுயிர், மக்கள் வடிவோடு இவ்வுலகிற்கு மீண்டும் வந்தாலும் வரும். மக்கள் உடலை எடுத்த உயிர் அடுத்த பிறவியில் விலங்கின் வடிவை எடுத்தாலும் எடுக்கும் விலங்குயிர் எடுத்த பிறவி அடுத்து நரக யாக்கையை எடுப்பினும் எடுக்கும். ஆடுகின்ற கூத்தர்களைப் போல் உயிர்கள் பல வடிவங்களையும் எடுக்கும் வேடங்கள் மாறி மாறி வருவது போல வாழ்க்கை நிலையும் பிறவிகளும் மாறிமாறிச் செல்லும்.

நான் உன்னிடம் பரிசு கேட்டு வரவில்லை. உனது ஆணைச் சக்கரம் மேலும் சிறக்க உனது பெருமை மிக்க உடம்பினைக் கொண்ட உயிரானது ஏனைய உயிர்களைப் போலப் பொதுவான நெறியில் போகாமல் சிறப்பு நெறியில் செல்ல

வேண்டும் என்று மாடல மறையோன் கூறுவதை ஒரு சிறந்த வழிகாட்டுதலாக, சிலப்பதிகாரக்காப்பியம் எடுத்துக் கூறுகிறது.

''திருஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே
நரை முதிர்யாக்கை நீயும் கண்டனை
விண்ணோர் உருவின் எய்திய நல்லுயிர்
மண்ணோர் உருவின் மறிக்கினும் மறிக்கும்
மக்கள் யாக்கை பூண்ட மன்னுயிர்
மிக்கோய் விலங்கின் எய்தினும் எய்தும்
விலங்கின் யாக்கை விலங்கிய இன்னுயிர்
கலங்கஞர் நரகரைக் காணினும் காணும்
ஆடும் கூத்தர்போல் ஆருயிர் ஒரு வழிக்
கூடிய கோலத் தொருங்கு நின்றியலாது,
செய்வினை வழித்தாய் உயிர் செலுமென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரையாதலின்
எழுமுடிமார்ப, நீயேந்திய திகிரி
வழிவழிச் சிறக்க வயவாள்வேந்தே
அரும்பொருள் பரிசிலன் அல்லேன் யானும்
பெருப்பேரி யாக்கை பெற்ற நல்லலுயிர்
மலர்தலையுலகத்துயிர் போகு பொது நெறி
புலவரையிறந்த தோய் போதுதல் பொறே என்''

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

செய்வினையின் வழியில் உயிர் செல்லும் என்பது பொது நெறி அதுவன்றும் மேலெழுந்து சிறப்பு நெறியில் செல்லுமாறு நாம்அதற்குரிய நல்ல பல அறிய செய்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது இங்கு குறிப்பாக உள்ள கருத்தாகும்.

சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்தில் மாடல மறையோன் ஒரு தலை சிறந்த பாத்திரப் படைப்பாகும். வழிவழியாக வரும் சிறந்த ஞானிகளின் வரிசையில் வரும் ஒரு பேரறிஞனாக மாடலனைக் காண்கிறோம். அவனது அறிவுரைகள், அவர் கூறும் செய்திகள் சிறந்த இலக்கியமாக அமைந்துள்ளது. ஊழின்

பெருவலி பற்றி அளவுக்கும் அதிகமாக வலியுறுத்தப்பட்டு மக்கள் மயங்கிக் கிடந்த காலத்தில் அதை மீறி, அநியாயங்களைக் கண்டிக்கவும். பொது நெறியைத் தாண்டி, ஒரு சாதாரண நிலையிலிருந்து மேலெழுந்து சிறப்பு நெறியில் செல்ல முனையவேண்டும் என்னும் உயரிய கருத்தை இளங்கோவடிகள் தனது சிறந்த சில பாத்திரப்படைப்புகள் மூலம் நமக்கு எடுத்துக் காட்டுவதைக் காணலாம்.

கம்பனும் தனது மகா காவியத்தில், இராமனே கூட, தான் வனம் செல்ல வேண்டிய நேர்ப்பட்டது பற்றியும், தந்தை இறந்தது பற்றியும், சீதையை அரக்கன் கவர்ந்து சென்றது பற்றியும் வருந்தி விதியின் வலிமையைக் கூறி தான் உயிர் வாழ்ந்தும் பயனில்லை. நான் என் செய்வேன் என்று மனம் நொந்து சோர்வடைந்தான், என்று குறிப்பிடுகின்றார்.

**"அறம் தலை நின்றிலாதஅரக்கனின்**
**ஆண்மை தீர்ந்தேன்**
**துறந்தனென் தவம் செய்கேனோ?**
**துறப்பனோ உயிரைச் சொல்லாய்**
**பிறந்தனென் பெற்று நின்ற பெற்றியால்**
**பெற்ற தாதை**
**இறந்தனன், இருந்துளேன்யான்**
**என் செய்கேன் இளவன் என்றான்.**

என்று இராமன் புலம்புகிறான். அதைக் கேட்ட இலக்குவன் நடந்ததை நினைத்துப் பலன் இல்லை. விதியால் விழைந்தது இந்தத் துன்பங்களேல்லாம். அதை நினைத்துப் பயனில்லை. இனி நாம் அந்த அரக்கரைக் கொன்ற பின்தான் நமது கொடுந்துயர் தீரும் என்று இராமனைத் தேற்றுகிறான்.

**"என்றலும் இளையவீரன் இறைவனை இறைஞ்சி யாண்டும்**
**வென்றியாய்! விதியின் தன்மை பழுதில விளைந்தது அன்றோ**
**நின்று இனி நினைவது என்னே? நெருங்கி**
**அவ்வரக்கர் தம்மைக்**

**கொன்றபின் அன்றோ வெய்ய கொடுந்த துயர் குளிப்பது?** என்றான்.

என்று இலக்குவன் விதியின் தன்மையையும் மீறி தங்கள் வினைகளைச் செய்து முடிக்க வேண்டிய கடமையை வலியுறுத்திக் கூறுகிறான் அதன் பின்னர் இராமன் தெளிவு பெற்று

**''அவ்வழி இளவல் கூற அறிவனும் அயர்வு நீங்கி,**
**இவ்வழி இனைய எண்ணின் ஏழைமைப் பாலது என்னா**
**வெவ்வழி பொழியும் கண்ணீர் விலக்கினன் விளிந்த தாதை**
**செவ்வழி உரிமையாவும் திருத்துவம் சிறுவ'' என்றான்**

என்பது கம்பன் பாடல்களாகும்.

நடந்ததை நினைந்து வருந்திக் கொண்டிருப்பது அறியாமையாகும். துன்பத்தால் ஏற்பட்ட கண்ணீரைத் துடைத்துக் கொள்வோம். நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வையான முறையில் திருத்தமாகச் செய்து முடிப்போம் என்று நம்பிக்கையுடன் இராமன் கூறியதைக் கம்பன் மிக அழகாகச் சுட்டிக்காட்டியுள்ளதைக் காணலாம்.

பொது நெறியிலிருந்து மேலெழுந்து சிறப்பு நெறியில் செல்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை மாடல மறையோன் மேலும் கூறுகிறான். "வேதங்களில் மன்னர்களுக்கென கூறப்பட்டுள்ள வேள்விகளை முதலில் நீ செய்ய வேண்டும். அதை நாளை செய்யலாம் என்று தள்ளிப் போடலாகாது. இன்றிருப்போர் நாளையிருப்பது உறுதியில்லை. எனவே அந்த அறவேள்விகளை உடனே செய்யத் தொடங்குவாயாக! என்னும் கருத்துக்களை மன்னன் காதுகாளில் மாடலன் விதைத்தான் என்று சிலப்பதிகாக் காப்பியம் கூறுகிறது.

**''வானவர் போற்றும் வழி நினக்களிக்கும்**
**நான் மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்**
**அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய**
**பெருநல்வேள்வி நீ செயல் வேண்டும்**
**நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே**
**கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்**

இது வென வளர்ந்து வாழு நாளுணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவதுமில்லை.
வேள்விக் கிழத்தியிவ ளொடுங் கூடித்
தாழ்கடல் மன்னர் நின்னடிபோற்ற
ஊழியோடுழி யுலகங்காத்து
நீடுவாழியரோ நெடுந்தகை யென்று
மறையோன் மறைநாவுழுது வான் பொருள்
இறையோன் செவி செறுவாக வித்தலின்''

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

மாடல மறையோன் சொல்லிய முறைகளின்படி அரசனும் வேள்விக்குரிய ஏற்பாடுகளைச் செய்தான். அதற்கவசியமான அந்தணர்களை வரவழைத்தான். வேள்விப் பொருள்களைக் கொண்டு வரச் செய்தான். சிறையில் இருந்த ஆரிய அரசர்களை விடுவிக்கச் செய்தான். அவர்களைத் தனி மாளிகையில் இருக்கச் செய்து வேள்வி முடிந்த பின்னர் அவர்களை அவரவர் ஊர்களுக்கு நாடுகளுக்குச் செல்ல உத்தரவிட்டான். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தனது அமைச்சர்களில் முதல்வனான வில்லவன் கோதையிடம் கூறினான்.

''வித்திய பெரும்பதம் விளைந்து பதமிகுத்துத்
துய்த்தல் வேட்கையில் சூழ்கழல்வேந்தன்
நான்மறை மரபின் நயந் தெரிநாவின்
கேள்வி முடித்த வேள்வி மாக்களை
மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக்கொள ஏவி
ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கிப்
பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித்தண்மலர்ப் பூம்பொழில்
வேளாவிக்கோ மாளிகை காட்டி
நன் பெருவேள்வி முடித்ததற் பின்னாள்
தம் பெருநெடுநகர்ச் சார்வதும் சொல்லியம்
மன்னவர்க் கேற்பன செய்க நீயென
வில்லவன் கோதையை விருப்புடன் ஏவி

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

அரசனின் ஆணைப்படி சிறைக் கதவுகள் திறந்துவிடப்படுகின்றன. இறைப் பொருள்கள் வேண்டாம் என அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். வரிவிலக்குச் செய்யப்படுகிறது. என்பதாகும். ஆட்சிப் பொறுப்பில் உள்ள மன்னர் நீதி செலுத்தினால் அல்லாமல் பெரும் புகழ் மகளிரின் கற்புநிலைச் சிறக்காது என்பது பண்டைய தமிழ் நல்லுரையாகும் என்று உணர்ந்து சேர மன்னன், **''பார்தொழு நேத்தும் பத்தினிக் கோட்டத்தில்''** கோயில் எழுப்ப ஏற்பாடு செய்கிறான்.

**'சிறையோர் கோட்டஞ்சீமின் யாங்கணும்**
**கறை கெழு நல்லூர்க் கறைவீட செய்ம்மென**
**அழும்பில் வேளொடு ஆயக்கணக்கரை**
**முழங்கு நீர் வேலி மூதூர் ஏவி,**
**அருந்திறலரசர் முறை செயினல்லது**
**பெரும்பெயர்ப் பெண்டிற்குக் கற்புசிறவாதெனப்**
**பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை''**

என்று காப்பிய வரிகள் குறிப்பிடுகின்றன.

கண்ணகிக்கு சிலை வடித்து கடவுள் மங்கலம் செய்ய ஏற்பாடு செய்யும்படி அரசன் ஆணையிடுகிறான்.

**"நந்நாடணைந்து நளிர் சினை வேங்கைப்**
**பொன்னணி புது நிழல் பொருந்திய நங்கையை**
**அறக்களத்தந்தணர் ஆசான் பெருங்கணி**
**சிறப்புடைக் கம்மியர் தம் மொடுஞ் சென்று**
**மேலோர் விழையும் நூல் நெறி மாக்கள்**
**பால் பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து**
**இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்**
**சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்**
**கைவினை முற்றிய தெய்வப் படிமத்து**
**வித்தகர் இயற்றிய விளங்கிய கோலத்து**
**முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப்**
**பூப்பலி செய்து காப்புக் கடை நிறுத்தி**
**வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்து**
**கடவுள் மங்கலம் செய்கென ஏவினன்"**

என்று சிலப்பதிகாரக் காப்பியத்தின் நடுகற்காதையின் கவிதை வரிகள் கூறுகின்றன.

பத்தினித் தெய்வமான கண்ணகி சிலையை வடித்து அது பிரதிட்டை செய்யப்பட்ட விவரம் இவ்வரிகளில் விளக்கிக் கூறப்பட்டிருப்பது சிறப்பாகும்.

அறக்களத்து அந்தணர், சோதிடர், சிறப்புடைய சிற்பியர், அழைக்கப்பட்டனர். சிற்ப நூல் உணர்ந்த சிறந்த கம்மியரால் பத்தினிக்கோட்டம் அமைக்கப்பட்டது. அக்கோட்டம் கருநிலை, பகுதி மண்டபம், பெருமண்டபம் ஆகியபால் பெற வகுத்து அமைக்கப்பட்டது. இமையவர் உறையும் இமைய மலையின் உச்சியில் உள்ள இறைவனைப் போற்றி கைத் தொழில் மிகுந்த தெய்வப் படிமத்தின் கண், கைத்தொழில் வல்லான் செய்த சிறந்த அழகிய அணிகலன் முழுதும் அணிந்து அர்ச்சனை செய்து, திசைக் கடவுளர்களை வாசலில் நிறுத்தி, வேள்வியும் விழாவும் நாள்தோறும் நடக்கச் செய்து கடவுள் மங்கலம் (பிரதிட்டை) செய்ய சேரன் செங்குட்டுவன் தக்க ஏற்பாடுகளைச் செய்தான் என்று சிலப்பதிகாரப் பெருங்காப்பியம் மிக விரிவாக நயம்பட எடுத்துக் கூறுகிறது.

# 25. வரந்தரு காதையில்

இக்காதையில் கோவலன் தாயும் கண்ணகியின் தாயும், மதுரையின் ஆயர்குல மகளான மாதுரியும், கண்ணகி மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்த காரணத்தால், கோவலனுக்கும் கண்ணகிக்கும் ஏற்பட்ட சூழ்வினை பற்றி கேள்விப்பட்டவுடன் ஆற்றாமல், உயிர் துறந்த பின்னர், வஞ்சி மாநகரில், அரட்டன் செட்டியின் இரட்டைக் குழந்தைகளாகத் தோன்றினர் என்றும், இடையர்குலத்து முதுமகள் மாதரி திருவனந்தபுரத்துத் திருமால் கோயில் அர்ச்சகருடைய மகளாகத் தோன்றி, கண்ணகி கோட்டத்தின் பிரதிட்டை விழாவில் கலந்து கொண்டனர் என்னும் செய்தியும் சேரன் செங்குட்டுவன், இடபத்தை ஊர்தியாகக் கொண்ட இறைவனது திருவருளாலே பிறந்து இப்பெரிய உலகினை விளக்க முறச்செய்த வேந்தனாகையால் நல்லோர்களது சிறந்த வரலாறுகளையெல்லாம் கேட்டறியும் வாய்ப்பினைப் பெற்றான் என்னும் செய்தியும் காணப்படுகிறது. நற்செய்கைகள் செய்தோர் நல்ல பலன்களை அடைவார்கள் என்னும் நெறிமுறைக் கேற்ப இவர்களுக்கு இப்பலன் கிட்டியதாகவும் அச்செய்தி கூறுகிறது.

"கொய்ளர்க் குறிஞ்சிக் கோமான்றன் முன்
கடவுள் மங்கலங் காணிய வந்த
மடமொழி நல்லார் மாணிழை யோருள்
அரட்டன் செட்டி தன் ஆயிழை ஈன்ற
இரட்டையம் பெண்கள் இருவருமன்றியும்
ஆடக மாடத் தரவணைக் கிடந்தோன்
சேடக்குடும்பியின் சிறுமகள் ஈங்குளள்

எனக் காதை வரிகள் குறிப்பிகின்றன.

கண்ணகி சிலை பிரதிட்டை செய்யப்பட்டபோதுஅங்கு அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்களும், திருவனந்தபுரத்து அரவணைக் கிடக்கும் திருமால் கோவில் அர்ச்சகரின் மகளும் வந்திருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுடைய

முற்பிறப்பை அறிந்து மாடல மறையோன் மன்னனுக்குக் கூறுகிறான்.

"வஞ்சி மூதூர் மாநகர் மருங்கின்
பொற்கொடி தன் மேற் பொருந்திய காதலின்
அற்புளஞ் சிறந்தாங்கரட்டன் செட்டி
மடமொழி நல்லாள் மனமகிழ் சிறப்பின்
உடன்வயிற் றோராய் ஒருங்குடன் தோன்றினர்,
ஆயர் முது மகளாயிழை தன் மேல்
போய பிறப்பிற் பொருந்திய காதலின்
ஆடிய குரவையின் அரவணைக் கிடந்தோன்
சேடக்குடும்மியின் சிறுமகளாயினள்

என்றும்,

'ஆனேறூர்ந்தோன் அருளில் தோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவ னாதலின்
செய்தவப் பயன்களும் சிறந்தோர் படிவமும்
கையகத்தன போல் கண்டனையன்றே"

என்றும் மன்னனும் மற்றவர்களும் தவப் பயனால் அடைந்த பேற்றினை மாடல மறையோன் என்ற சிறந்த அறிஞன் வாயிலாக சிலப்பதிகாரப் பெருங்காப்பியம் சிறப்புறக் கூறுகிறது.

இக்காதையின் நிறைவாகவும் சிலப்பதிகாரப் பெருநூலின் பயன்பாடாகவும் அக்காப்பியத்தின் தெளிபொருளாக உள்ள அறங்களை இளங்கோவடிகள் உலகத்தாருக்குக் கூறி முடிப்பது சிறப்பாக அமைந்துள்ளது.

தெரிவுறக்கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின், புறஞ்சொற்போற்றுமின்,
ஊனூண் துறமின்இ உயிர்க்கொலை நீங்குமின்

தானம் செய்ம்மின், தவம்பல தாங்குமின்
செய் நன்றி கொல்லன் மின், தீ நட்பிகழ்மின்
பொய்கரிபோ கன்மின், பொருண்மொழி நீங்கன்மின்
அறவோரவைக் களம் அகலாதணுகு மின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறன்மனை அஞ்சுமின், பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவைகடிமின்
கள்ளும், களவும், காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும், செல்வமும், யாக்கையும் நிலையா,
உளநாள் வரையாது, ஒல்லுவதொழியாது
செல்லும்தே எத்துக் குறுதுணை தேடுமின்
மல்லல் மாஞாலத்து வாழ்வீரு ஈங்கென

என்று கூறி சிலப்பதிகார பெருங்காப்பியம் நிறைவு பெறுகிறது. உலகில் பசியும் பிணியும் நீங்கி, நாடு நலம் பெற நாமும் கட்டுரை முடித்தோம்.

**நூலாசிரியரைப் பற்றி**

அ.சீனிவாசன் 1925ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ம் நாள் அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் இன்றைய விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் தாலூகா, மகராஜபுரம் கிராமத்தில் பிறந்தார். இளம் வயதிலேயே தாய் தந்தையர் மூலம், நாலாயிரத்திவ்யப்பிரபந்தம், இராமாயணம், மகாபாரதம் பாகவதம் நளவெண்பா போன்ற நூல்களில் அறிமுகமானவர். பள்ளிப்படிப்பு காலத்திலேயே விடுதலை இயக்கத்தில் பற்றுகொண்டு ஈடுபட்ட காரணத்தாலும், குடும்பச் சூழ்நிலையின் ஏழ்மையாலும் கல்லூரிப் படிப்பைத் தொடர முடியாமல், இரண்டாம் உலகப் போர் காலத்தில் இந்திய விமானப் படையில் சேர்ந்து தொழில் நுட்பப்பொறியியல் பயிற்சி பெற்று, பணியாற்றினார். போர் பிற்காலத்தில் ஏற்பட்ட சுதந்திரப் பேரெழுச்சியில் படைப் பிரிவுகளும் பங்கு பெற்று அதில் முன்னணியில் இருந்த காரணத்தால் விமானப் படையிலிருந்து விடுவிக்கப்பட்டு 1947ம் ஆண்டு தொடக்கத்திலேயே வீடு வந்து சேர்ந்தார்.

இந்தியப் பொதுவுடைமை இயக்கத்திலும் தொழிற் சங்க இயக்கத்திலும் தீவிரமாகப் பங்கு கொண்டு மாநில அளவிலும், தேசிய அளவிலும் பல பொறுப்புகளை வகித்துள்ளார். பல முறை சிறை சென்று, தியாகத் தழும்புகளை ஏற்றவர். சொந்த முயற்சியாலும் கடின உழைப்பாலும் இலக்கியப் பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும் பெற்றவர்.

தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், வரலாறு பற்றிய பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும் சொந்த நூல்கள் எழுதியும் உள்ளார்.

திரு.அ.சீனிவாசன் அவர்கள் எழுதிய நூல்களில் காரல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, மார்க்கிய - லெனினியத்தின் அடிப்படைகள் முதலிய மொழிபெயர்ப்பு நூல்களும், மார்க்சீய பொருளாதார தத்துவம் ஜீவாவின் தமிழ்ப்பணிகள், கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி ஆகிய மூலநூல்களும் முக்கியமானவை. நூலாசிரியரின் சிறந்த எழுத்துப் பணிகளுக்காக, 1984ம் ஆண்டில் சோவியத் நாடு நேரு விருது பெற்றவர்.

**நூலாசிரியரைப் பற்றி**

இந்தியக் கம் யூனிஸ்ட் கட்சியின் ஜனசக்தி நாளிதழின் தலைமை ஆசிரியராகப் பத்து ஆண்டு காலத்திற்கு மேல் பணியாற்றிய அனுபவம் பெற்றவர். இந்நூலாசிரியர் ஜனசக்தி நாளிதழ் ஆசிரியராக இருந்தபோது சிறந்த முறையில் காரல் மார்க்ஸ் நூற்றாண்டு மலரும் பாரதி நூற்றாண்டு மலரும் கொண்டு வந்தது பலராலும்பாராட்டப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தத்துவ மாத இதழான மார்க்சீய ஒளியின் ஆசிரியராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர். இம்மாத இதழின் ஆசிரியராக இருபது ஆண்டு காலம் ஆற்றிய அரும்பணிக்காக செக்கோஸ்லோவேகியாவை தலைமையிடமாகக் கொண்ட உலக மார்க்ஸீய ரிவ்யூ அமைப்பின் மூலம் 1983ம் ஆண்டில் இதழாசிரியருக்கான கௌரவப் பட்டயம் பெற்றவர்.

இப்போது தனது தொடர்ச்சியான அரசியல் மற்றும் தொழிற் சங்கப்பணிகளுடன் கம்பன், வள்ளுவர், இளங்கோ, வள்ளலார், பாரதி ஆகியோரின் படைப்புகளிலும், ஆழ்வார் களின் திவ்வியப்பிரபந்தம் முதலியவற்றிலும் தீவிரமான பயிற்சியும் ஆய்வும் செய்து பல நூல்களை எழுதி வருகிறார்.

அந்தச் சீரிய முயற்சியின் பலனாக உருவாகியுள்ளது. சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துக்கள் என்னும் இந்த நூலுமாகும்.

பாரதியின் புதிய ஆத்தி சூடி - ஒரு விளக்கவுரை, பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி என்னும் நூல்களையும் திரு.அ.சீனிவாசன் அண்மையில் எழுதி வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

திரு.அ.சீனிவாசன் அண்மையில் பாரதீய ஜனதாக் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு அதன் மாநில செயற்குழு உறுப்பினராகவும் ஒரே நாடு பத்திரிகையின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று நாட்டுப் பணியில் ஈடுபட்டு வருகிறார்.



நூலாசிரியர் பற்றி :

இந்நூலாசிரியர் அ.சீனிவாசன் 1925-ம் ஆண்டு, இன்றைய விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் வட்டம் மகராஜபுரம் கிராமத்தில் பிறந்தவர். சிறு வயது முதலே தேசீய விடுதலை இயக்கத்திலும், காங்கிரஸ் சோஷலிஸ்டு இயக்கத்திலும் பொதுவுடமை இயக்கத்திலும் தொடர்பு கொண்டு தொழிற்சங்கப் பணிகளிலும் அரசியல் பணிகளிலும் ஈடுபட்டவர். தமிழ் இலக்கியங்களிலும் வைணவ இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டவர்.

தனது பள்ளிப்படிப்பை முடித்து விட்டு இரண்டாவது உலகப் போர்காலத்தில் இந்திய விமானப்படையில் தொழில் நுட்பத்துறையில் செய்தித் தொடர்புப் பொறியாளராகப் பயிற்சி பெற்று பணியாற்றியவர்.

விருதுநகர் மாவட்டத்திலும் சென்னை நகர்த்திலும் பல்வேறு தொழிற்சங்கங்களில் பொறுப்பேற்று தொழிற்சங்கத்தலைவராகப் பணியாற்றியவர். ஜன சக்தி நாளிதழின் ஆசிரியராகவும் மார்க்சீய ஒளி ஆசிரியராகவும் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்.

தத்துவம், இலக்கியம் பற்றி இருபதுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். தன்னுடைய சிறப்பான எழுத்துப்பணிக்காக சோவியத் நாடு நேரு விருது பெற்றவர். சிறந்த இதழாசிரியாகப் பணியாற்றியமைக்காக கௌரவப்பட்டயம் பெற்றவர்.

கம்பன், வள்ளுவன், இளங்கோ, பாரதி பால் ஈடுபாடுகொண்டு, இப்போது பல இலக்கிய நூல்களை எழுதிவருகிறார்.